தி-க
280





தஞ்சை ... ன்

தமிழ்ப் ...

ர்

தமிழ்

நூல்

ரூ. 1-8-0

ACL-MKU
00746

265-A
107
55
அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
...காந்த சபா.

வீரம் என்பது கொலையல்ல

வெற்றியும் அதனால் நிலையல்ல

தீரம் என்பது திடசாந்தம்

தெரிவிப்பது நம் சித்தாந்தம்

நாமக்கல் கவிஞர்

# தமிழ்ப் பண்ணை

PREMIER

பதிப்பாசிரியர்கள்

நா. அண்ணாமலை

எஸ். ஏ. ரஹீம்

தியாகராயநகர் - சென்னை

265 A 107

163

மதுரை காமராசர் பல்கலைக்கழக
தி.க. சண்முகம் நூலகம்
தமிழ்த்துறை

# ஆடும் பாலம்

தஞ்சை — ஆத்மநாதன்

முதற் பதிப்பு
1944 ஏப்ரல்

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 537
நன்கொடை எண்: 537



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27-1-1979

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

கமர்ஷியல் பிரிண்டிங்
பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை

# சிறு கதைகள்

[illegible]

தமிழ்ப்பண்ணை மலர் 12

[illegible]

விலை ரூபாய் ஒன்றே முக்கால்

# பதிப்புரை

இந்தப் புத்தகம் வெளியிடுவதற்கு முக்ய காரணஸ்தரான கும்பகோணம் ஸ்ரீ எஸ். ஏ. ரஹீம் அவர்கள் தேச பக்தர் என்ற காரணத்தால் சிறையில் இருக்கிறார்கள். சிறந்த தேச பக்தியையும் வீரத்தையும் சொல்லுவதாலேயே இக்கதைகளை நமது வெளியீடாகக் கொண்டுவர வேண்டுமென்று ஸ்ரீ ரஹீம் விரும்பினார்கள். புத்தகம் வெளிவரும் சமயத்தில் நமக்கும் அவருக்கும் மத்தியில் சிறைக் கம்பிகள் இருக்கிறது. ஆனாலும் நம்முடைய இதயமும் அவருடைய இதயமும் ஒன்றுபட்டிருப்பதால் இப்புத்தகத்தை நாமும் அவரும் சேர்ந்து தமிழ் மக்கள் முன்னிலையில் வைக்கின்றோம்.

இதில் வெளி வந்திருக்கும் 'அமர வாழ்வு' என்ற கதை அல்லயன்ஸ் கம்பெனியாரின் கதைக் கோவையில் வெளிவந்தது. அவர்களுக்கு எங்கள் நன்றி.

தமிழ்ப்பண்ணையாளர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

# ஆடும் பாலம்

இடிந்து சரிந்து சிதறிக்கிடந்த அச்சிறிய பாலத்தின் அருகில் நான் செல்லும்பொழுது இரவு பத்து மணி இருக்கும். சந்திரன் பகல்போல் காய்ந்து கொண்டிருந்தான். கீழே தரையில் உருண்டுகிடந்த பாலத்தின் பாகங்களைப் பார்த்துவிட்டு, பத்துப் பதினைந்து கஜத்துக்கப்பால் தரையின் மேல் துண்டை விரித்துப் படுத்தேன்.

யோசனைகள் ஓடின; மன்னன் திப்பு சுல்தான் இதே ஸ்ரீரங்கப் பட்டணத்தில் எவ்வளவு மகோன்னதமாக இருந்தான்!

மனம் என்னவோ நினைத்தது.

உள்ளத்தில் குமுறிய எண்ண அலைகள் பாட்டாக வெளியே வந்தன.

“அறத்தினால் வீழ்ந்துவிட்டாய்” என்று பாட ஆரம்பித்தேன். பாலத்தின் உடைந்த துண்டுகளைக் கைகளால் தொட்டுப் பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்த யாரோ ஒரு பெரியவர், நான் பாடி முடித்ததும் என் அருகில் வந்தார்.

அவருக்கு வயது என்ன என்று என்னால் நிர்ணயிக்க முடியவில்லை. அநேக இடங்களில் கிழிந்திருந்த சட்டை; இடுப்புவரையில் நீண்டு வளர்ந்திருந்த

தாடி. சடை விழுந்து கட்டை கட்டையா யிருந்தது தலை மயிர்; புராணகால மகரிஷி மாதிரி இருந்தார். அவருடைய உருவத்துக்கு மரியாதை செய்யவேண்டு மென்று தோன்றியது.

"நமஸ்காரம்" என்றேன்.

"அல்லா உன்னை ரட்சிப்பாராக"

அவருடைய வார்த்தைகள் என்னைத் திடுக்கிடச் செய்தன. பார்த்தால் ஹிந்து மாதிரி காணப்பட்டார். மெதுவாக "தாங்கள் மகம்மதியரா?" என்றேன்.

'ஆமாம் தம்பி; அது கிடக்கின்றது. சிறிது நேரத்திற்கு முன்பு பாடினையே அந்தப் பாட்டை மறு படியும் பாடு."

என்றால் அவர் வேண்டுகோளை நிராகரிக்க முடியவில்லை. மறுபடியும் பாட ஆரம்பித்தேன். 'அறத்தினால்......'

மேலே பாடுவதற்குள் "ஆம், ஆம். அப்படித் தான் விழுந்தேன்" என்றார் பெரியவர்.

பைத்தியமோ என்று சந்தேகித்தேன். 'அப்படித் தான் விழுந்தேன்' என்று அவர் கூறியது எனக் கொன்றும் புரியவில்லை.

"தங்களுக்கு எந்த ஊர்?"

"இதே ஊர்தான்"

"இரவு வெகு நேரமாகிவிட்டது. குளிர்காற்று அடிக்கிறது. போய்ப் படுக்கவில்லையா?"

"தூக்கம் வரவில்லையப்பா. நான் என்னசெய் வது? அநேக மாதங்களாய் ஒவ்வொரு இரவும் இதே இடத்துக்கு நான் வருகின்றேன். விடியற் காலையில் போய் விடுவேன்." இவைகளைச் சொல்லும்பொழுது அவர் கண்களில் நீர் பெருகிற்று. சில நிமிஷத்திற்

குள் 'ஓ' வென்று குழந்தைபோல அழ ஆரம்பித்து விட்டார்.

என்ன வருத்தமோ பாவம். மறுபடியும் அவரைத் தலை முதல் கால்வரை நோக்கினேன். கழுத்தின் ஓரத்தில் ஒரு நீண்ட தழும்பு இருந்தது. இடது கையால் அடிக்கடி கழுத்தைத் தடவிக்கொண்டேயிருந்தார்.

"ஏன் ஐயா அழுகிறீர்கள்? கழுத்தில் அவ்வளவு பெரிய தழும்பு எப்படி வந்தது?"

"யுத்தத்தில் ஏற்பட்ட காயம், காய்ந்து தழும்பாகிவிட்டது"

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. தங்கள் பெயர் என்ன? எந்த யுத்தத்தில் ஏற்பட்ட காயம்?"

பல கேள்விகளை ஒரே மூச்சில் கேட்டேன்.

"நாலாவது மைசூர் யுத்தத்தில் ஏற்பட்ட காயந்தான். என் பெயர் திப்பு. திப்பு சுல்தான் என்றும் சொல்வார்கள்"

"என்ன ஐயா உளறுகிறீர்கள்? தாங்களாவது திப்பு சுல்தானுவது. திப்பு மாண்டு மண்ணுகி அநேக வருஷங்கள் ஆகிவிட்டனவே. எவ்வளவோ புத்தகங்களில் திப்புவின் படத்தைப் பார்த்திருக்கின்றேன். முகம் சலவைக் கல்போல் வழவழவென்றிருக்குமே. உங்களுக்கோ ஒரு முழத்துக்குத் தாடி வளர்ந்திருக்கிறது........."

பெரியவர் சிரித்தார். "பைத்தியமே! ஒரு மனிதன் ஒரே இடத்தில் இருட்டில் சுமார் நூற்று நாற்பது வருஷம் படுத்து நித்திரை செய்தானென்றால் ஏன் தாடி வளராது? அது போகட்டும்,

என் கதையைச் சொல்லுகிறேன், கேள். நடுவே பேசாதே'' என்று சொல்லி ஆரம்பித்தார் :

"திருக் கொரானிடத்தில் எனக்கிருக்கும் பக்தி அளவுகடந்ததாகும். 'தலையைச் சுழற்றும் பண்டங்களை உட்கொள்ளாதே' என்று கொரான் ஷரீபு எச்சரிக்கை செய்கின்றதல்லவா? அந்த அமிர்த மொழிகளின்படி நான் நடந்துவந்தேன். என் அரசாங்கத்திலும் மது விலக்குக்காக அரும்பாடு பட்டேன். கள் வியாபாரம் க்ஷீணிக்க ஓயாது உழைத்தேன். இம்முயற்சியில் அநேகமாக வெற்றியுமடைந்தேன்.

குடிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தவர்களுக்கு என் உத்தரவுகள் கோபத்தை உண்டாக்கின. கோபம் வந்தால் என்னை என்ன செய்ய முடியும்?

திருட்டுத்தனமாகச் சில இடங்களில் சாராயம் காய்ச்ச ஆரம்பித்தார்கள்.

அன்று பௌர்ணமி. மாறு வேடத்துடன் ஸ்ரீரங்கப் பட்டணத்தின் தெருக்களைச் சுற்றிக் கொண்டிருந்தேன். என்னுடன் துணைவன் யாருமில்லை.

இப்போது நீ படுத்துக்கொண்டிருக்கிறாயே, அதே இடத்தில் ஒரு சிறுவன் படுத்துக்கொண்டிருந்தான். பன்னிரண்டு வயதிருக்கும் இடையிலிருந்த ஆடையினால் உடல் முழுதும் மூடிக்கொண்டிருந்ததால் பரம ஏழைபோல் காணப்பட்டான். வான வெளியை நோக்கிக்கொண்டிருந்த முகத்தைப் பார்த்தால் பரிதாபமாயிருந்தது.

சிறுவனைத் தட்டி எழுப்பினேன் 'யாரப்பா நீ?' என்று கேட்டேன்.

தன் ஏழ்மைப் புராணத்தைக் கூறிவிட்டு மீண்டும் பையன் பேச ஆரம்பித்தான்: 'சுல்தான் உத்தரவு போட்ட அன்றைய தினத்திலிருந்து என் தகப்பனுருக்குச் சாராயம் அகப்படவில்லை. ஒவ்வொரு இரவும் கோபம் கொள்ளுகிருர். சுல்தானிடம் தன் கோபத்தைக் காண்பிக்கத் திறமை யில்லாது என்னைப்போட்டு அடிக்கிருர். அடிக்குப் பயந்துகொண்டு வெளியே இன்று ஓடிவந்துவிட்டேன்.'

இதற்குப் பிறகு பையன் சொன்ன வார்த்தைகளை நான் கவனிக்கவில்லை. சிறிது தூரத்தில் ஒருவன் தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டு வருவதைக் கண்டேன். பையனை சத்தம் செய்யாதிருக்கும்படிச் சொல்லிவிட்டு, புதிதாக வந்தவன் அருகில் சென்றேன். அவன் வாயிலிருந்து சாராய நாற்றம் 'குப்' பென்று வீசியது.

இடையிலிருந்த வாளால் அக்குடியனை ஒரே வெட்டாய் வெட்டிப் போடலாமென்று தோன்றியது. கொதித்தெழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டேன். சிறிது யோசித்தேன். தன்னருகில் மற்ருெருவன் இருக்கிருன் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியாத நிலைமையிலிருக்கும் இவனைத் தொடர்ந்து சென்ருல் இவன் வீடோ அல்லது குடிக்கப்போகும் இடமோ தெரியும்; மறுநாள் புலர்ந்ததும் பாக்கி விஷயங்களைக் கவனித்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தேன்.

துணைக்கு ஒருவரும் இல்லையே என்ன செய்வது? ஏழைச் சிறுவனின் ஞாபகம் வந்தது. அவனிடம் சென்றேன். கண்களைக் கசக்கிக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

"டேய் தம்பி! உன் அப்பன் மாதிரியே ஒரு

குடிகாரப் பயல் அதோ போகிறுன். அவன் எங்கே போகிறுன் என்று பார்ப்போம் வருகிறுயா ?'' என்று கேட்டேன்.

"இதோ வருகிறேன். நம் சுல்தான் நீடூழி வாழவேண்டும். அவருக்காக என் உயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். சுல்தான் போட்ட உத்தரவை மீறின இந்தப் பயல்களுக்கு என்ன திமிர்? வாருங்கள் போகலாம்'' என்ருன் சிறுவன்.

தன் சுல்தானுக்கு உழைக்கச் சிறுவனுக்கு என்ன ஆர்வம்!

நானும் பையனும் குடிகாரன் பின்னுலேயே ஐந்தாறு மைல் தூரம் சென்ருேம். முன்னுல் போனவன் எதிரே இருந்த குன்றின்மீது ஏறினுன்.

நானும் பையனும் ஒரு மரத்தடியில் நின்ருேம்.

" தம்பி இது என்ன இடம்?''

"நான் தினம் மாடுகளை மேய்க்க இங்குதான் வருகிறேன்.''

பையனுக்கு உற்சாகம் தாங்கமுடியவில்லை. "நீங்கள் இங்கேயே இருங்கள். நான் மேலே போய் அங்கே யார் யார் இருக்கின்ருர்கள், என்ன பண்ணுகின்ருர்கள் என்று பார்த்து வருகிறேன்.''

" நானும் வருகின்றேன்.''

"வேண்டாம் ஐயா. முள்ளும் கல்லும் அதிகமாக இருக்கும். எனக்குப் பழக்கம்; அதனுல் வழி தெரியும்.''

நான் பதில் கூறுமுன் பையன் குன்றின்மேல் ஏறி மறைந்துவிட்டான்.

ஒரு நாழிகை கழிந்தது. பையனைக் காணவில்லை. இரண்டு நாழிகையும் ஆயிற்று.

குன்றின் சிகரத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே நின்றேன். ஆண்டவனே! நான் கண்ட காட்சியை எப்படி விவரிப்பேன்.

குன்றின் உச்சிக்கு என்னுடன் வந்த பையனை ஐந்தாறுபேர்வழிகள் இழுத்துக்கொண்டு வந்தார்கள். பையன் தன் கால்களையும் கைகளையும் ஆட்டு கின்றான். உதறுகின்றான்.

உருவிய வாளுடன் குன்றின் அடிவாரத்தை நோக்கி ஓடினேன். அடிவாரத்தை அடைய இன்னும் பதினைந்து கஜந்தானிருக்கிறது. இதற்குள் குன்றின் மேல் இருந்தவர்களில் இருவர், சிறுவனின் கைகளை யும் கால்களையும் பிடித்துத் தூக்கி, அடிவாரத்தை நோக்கி விட்டெறிந்துவிட்டார்கள்.

நான் அடிவாரத்தை அடைந்த அதே விநாடி யில் தரையை நோக்கி வந்துகொண்டிருந்த பையனின் தலை, கீழே கிடந்த பெரிய கற்பாறையில் மோதிற்று. சிதறிற்று என்று நினைத்தேன்.

'ஆ' என்று அலறினேன். பையனைக் குனிந்து நோக்கினேன், ரத்தம் வெள்ளமாய் ஓடிற்று.

அவன் உயிர் நீத்தான் என்றே நினைத்தேன். இல்லை. என் காலடிச் சத்தம் அவனுக்குக் கேட் டிருக்க வேண்டும். கண்களைத் திறந்தான். பீதி நிறைந்த கண்களால் என்னை உற்று நோக்கினான். நெத்தியிற் கையை வைத்துத் தடவினேன்.

அப்பா! அவன் பட்ட கஷ்டம்! அவன் சப்த நாடிகளும் நடுங்கின. உடம்பெல்லாம் ரத்தம். என் உடம்பிலும் அவன் ரத்தம். அவனுடைய ஒவ்வொரு பெருமூச்சும் என் இருதயத்தைப் பிளந்தது.

என்ன கோரக் காட்சி! எவ்வளவோ யுத்தங்

களில் நூற்றுக்கணக்கானவர்களை வெட்டி வீழ்த்தியிருக்கின்றேன். குற்றுயிரும் குலை உயிருமாயிருந்த ஆயிரக்கணக்கானவர்களைப் பார்த்திருக்கின்றேன். ஆயினும் பையனின் பரிதாபகரமான முகத்தைப் பார்க்க என்னால் முடியவில்லை.

சிறிது நேரம் சென்றது. பேதைச் சிறுவனின் உயிர் அகன்றது. என் தலையும் சுழன்றது.

பல நாட்கள் சென்றன. தன் சுல்தானுக்கு உதவவேண்டுமென்று சொல்லித் தன் உயிரை அர்ப்பணம் செய்த அவ்வீரச் சிறுவனை என்னால் மறக்கவே முடியவில்லை. ரத்தம் தோய்ந்த அவன் புனித உடலின் தோற்றம் என் மனக்கண் முன்பாக தோன்ற ஆரம்பித்ததோ இல்லையோ அவ்வளவுதான் என் திரேகமே நடுங்கும். என்னால் அச்சிறுவனை மறக்கவே முடியவில்லை.

யோசித்தேன்; வெகுநாள் யோசித்தேன்.

என் தேசமக்களும் பிறரும் அச்சிறுவனின் வீரக் கதையைத் தெரிந்துகொள்ளவேண்டும்; அச்சிறுவனின் உயிர் போகும் சமயம் அவன் பட்ட அவஸ்தைகளைக் கண்டு என் உடல் எவ்விதம் ஆடிற்றோ, அதேபோல் ஸ்ரீரங்கப் பட்டணத்திற்கு வருபவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும், அவர்கள் சரீரங்களும் நடுங்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

அந்த முடிவின் விளைவுதான் இங்கிருந்த ஆடும் பாலம். மதுவை யருந்தி மதியை இழந்தவன் தன் னிலை தவறித் தள்ளாடுவதுபோல், சிறுவனை நினைத்தால் என் உள்ளம் ஆடுவதுபோல் ஆடவேண்டும் என்ற என் எண்ணம் முழு வெற்றியை அளிக்கா

விடினும், பாலத்தில் ஏறி நிற்பவர்கள் பாலம் ஏதோ ஒரு சக்தியால் சிறிது ஆடுகிறது, அழுங்குகின்றது என்பதை அறிந்துகொண்டார்கள்.

பாலத்தைக் கட்டி முடித்தபின் என் மனம் சிறிது சாந்தி அடைந்தது.

கவனிப்பாரற்றுப் பாலம் இப்போது இடிந்து கிடக்கின்றது; நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த என்னைப் பாலம் இடிந்து விழுந்த சத்தம் எழுப்பி விட்டது.

என் மனதில் சாந்தியில்லை. பையனின் ஞாபகம் மறுபடியும் என்னை வதைக்கின்றது. நான் என்ன செய்வேன்? அதனால்தான் தினந்தோறும் 'கும்பஸ்' ஸிலிருந்து பையனை முதல் முதல் சந்தித்த இவ்விட்த் திற்கு வருகிறேன்.

யாராவது மறுபடியும் இதேபோல் ஒரு பாலம் கட்டி முடித்தால்தான் என் மனம் நிம்மதியடையும் போலிருக்கிறது.

நீயாவது ஏற்பாடு செய்யக்கூடாதா ?'' என்று அப்பெரியவர் கேட்டார்.

[கனவுதான். ஸ்ரீரங்கப் பட்டணத்திற்கு நான் போனதே கிடையாது. அதன் சமீபத்தில் குன்று ஏதாவது இருக்கின்றதோ இல்லையோ அதுவும் தெரியாது. மூன்றும் மைசூர் யுத்தத்தைப் பற்றிய விவரங்களைப் படித்துக் கொண்டிருந்தவன் கண்ணயர்ந்து விட்டேன். கனவில், வேந்தன் திப்புவைச் சந்தித்தேன். அது சரி; பாலத்தை யார் கட்டப் போகின்றார்கள் ?]

# மனச்சாட்சி

லட்சுமி மறைந்து இன்றுடன் பதினாறு வருஷம் ஆகிவிட்டது. உயிரோடு இருப்பாளேயாகில் இப்பொழுது அவளுக்கு இருபத்தோரு வயதாயிருக்கும்.

கணவனை இழந்த லட்சுமியின் தாய் எங்கள் வீட்டில் சமயற்காரி. அவளுக்கு இப்பூமியில் இருந்த சொத்தெல்லாம் ஒரு சிறு கைப்பெட்டியும் லட்சுமியும் தான். சாப்பாடு, படுக்கை எல்லாம் எங்கள் வீட்டில்தான்.

ரோஜா நிறக் கன்னங்கள்; வீணை நாதம் போன்ற இன்பப் பேச்சு. இவைகள் லட்சுமிக்குச் சொந்தம்.

வைசூரியினால் ஏற்பட்ட வடுக்கள் நிறைந்த முகம்; சதா காலமும் அழுத கண்கள்; சிந்திய மூக்கு. இவைகளைக் கொண்டவன் நான். அப்பொழுது எனக்கு வயது எட்டு.

அன்று மாட்டுப் பொங்கல்; மத்தியானம் ஒரு மணியிருக்கும். முழுக்கருப்பங்கழி ஒன்றைக் கொடுத்தால்தான் ஆயிற்று என்று என் தாயிடம் பிடிவாதம் செய்து கொண்டிருந்தேன்.

'உடம்புக்கு ஆகாதுடா கண்ணே!' என்றாள் தாய். எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். நான் கேட்கவில்லை. பொறுமையை இழந்தாள் அன்னை; தலையில் இரண்டு குட்டு குட்டினாள். 'ஓ' வென்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்தேன்.

தன் தாயுடன் சமையலறையிலிருந்து லட்சுமி என் அழுகுரலைக் கேட்டு வெளியே ஓடோடியும் வந்தாள்.

"அண்ணு! (நான் அவளுக்கு அபிமான அண்ணு) அழாதே. நம்ப இரண்டுபேரும் பல்லாங் குழி ஆடலாம்" என்று அன்புடன் அழைத்தாள்.

பிரம்ம ராட்சஸனேயும் மயக்கக்கூடிய அவள் தாமரைக் கண்களுக்கும், சிரித்தால் குழிவிழும் கன்னங்களுக்கும் நான் ஏமாறுமலிருக்க முடியவில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டேன். பல்லாங்குழியாட நானும் அவளும் தெருத் திண்ணைக்கு வந்தோம்.

ஆட்டம் ஆரம்பமாயிற்று. இருவருக்கும் ஆட்டத்தின் விதிகள் ஒன்றும் தெரியாது. நாங்களிருவரும் குழந்தைகள் தானே! ஆட்டத்தை யார் கண்டது? மனம் போனபடி யெல்லாம் சிறிது நேரம் விளையாடினேம்.

என் ஞாபகமெல்லாம் முழுக் கரும்புமேல். ஆட்டத்தைக் கவனிக்கவே யில்லை. சிறிது நேரத்திற்குள் என் குழிக்காய்கள் எல்லாம் லட்சுமியின் மடியிலிருந்தன,

நான் குழந்தைகளின் விளையாட்டு விதிகளின்படி தோற்றுவிட்டேன். லட்சுமி பரிகாசம் செய்ய ஆரம்பித்தாள். 'தோத்தாங்குளி' என்று கத்தினுள்; கூத்தாடினுள்.

சிறிதுநேரம் அவள் பரிகாச வார்த்தைகளைப பொறுத்தேன். பின்னர் எனக்குத் தாங்கவில்லை. மூண்டெழுந்த சினம் என்னை வெறியனுக்கியது முரட்டுத்தனமாக அவளைப் பிடித்திழுத்து ஐந்தாறு அறைகள் விட்டேன்.

அவள் அழுதுகொண்டே என்னோடு 'டூ' விட்டு விட்டாள்.

'ஆடவரைப் பெற்றெடுத்த தாய்க் குலத்தை, பெண்-குலத்தை துஷ்டருக்கு புற்றெடுத்த நச்சரவைப் புல்லெனவே' என எண்ணிவிட்ட நான், அன்று சாயங்காலத்திற்குள் அவளுடன் பேச ஐந்தாறு தடவைகள் முயன்றேன். மணிக் குலத்தின் பிரதிநிதியான அவள் மசியவில்லை. "வெட்கம் கெட்ட, மானம் கெட்ட, ரோசம்கெட்ட பயல் என்னோடே பேசவரான். தூ! வெக்கமில்லை" என்று கூவினாள். என்னைப் பார்த்து அழகு காட்டிக்கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

மறுபடியும் அவளுக்குத் தக்க சிட்சை விதிக்க வேண்டுமென்ற ஆசை எனக்குண்டாயிற்று. ஆசையை விதி மென்மேலும் தூண்டியது.

* * *

சாயங்காலம் ஆறரை மணியிருக்கும். தன் தாயார் செய்துவிட்ட அலங்காரங்களுடன் லட்சுமி தெருப்பக்கம் வந்தாள். மைதீட்டிய இமைகளின் உள்ளிருந்த குறு குறுக் கண்கள் என்னை அலட்சியத்துடன் நோக்கின.

"உனக்குச் சரியான வழி பண்ணுகிறேன்" என்று முனகினேன்.

வீட்டு வாசலில் ஒரு வாதா மரம். அதன் அடித் தண்டில் எங்கள் வீட்டுப் பசு கட்டப்பட்டிருந்தது. வெண்கல மணியுடன் கூடிய பளபளப்பான பித்தளைச் சங்கிலி அதன் கழுத்தை அலங்காரம் செய்து கொண்டிருந்தது. சிவப்புச் சாயம் இரு கொம்புகளிலும் பூசியிருந்தார்கள். மாட்டின் அருகில் எவருமில்லை.

மாட்டினருகில் சென்றாள் லட்சுமி. மாடு ஒரு தரம் அகம்பாவத்துடன் நோக்கியது.

"நீயும் பெண், நானும் பெண். என் கழுத்தில் எவ்வளவு அழகான சங்கிலி பார்த்தாயா? உனக்கு இல்லையே" என்று லட்சுமியைப் பார்த்து ஏளனம் செய்வதுபோலிருந்தது அதன் பார்வை. அதன் மனதிலுள்ளதை அறிந்து கொண்டவள்போல் தோன்றிச் சிரித்தாள் லட்சுமி.

"எவ்வளவு அலங்காரம் செய்து கொண்டால் தானென்ன, முகத்தில் சுமங்கிலிக்கு குங்குமத்தைக் காணேமே" என்று சொல்லிக் கொண்டே வீட்டினுள் ஓடினுள். நானும் பின்னுடியே சென்றேன்.

சிமிழிலிருந்து சிறிது குங்குமத்தை எடுத்துக் கொண்டு, தெருவை நோக்கித் திரும்பினுள். ஒரு கையில் சிறு தாம்பாளத்தையும், மற்ருெரு கையில் என் தகப்பனுர் சைக்கிள் பம்பையும் எடுத்துக் கொண்டு நானும் அவள் பின்னுடியே விரைந்தேன்:

தன் முன்னுல் தரையிலிருந்த வைக்கோலைப் பசு குனிந்து தின்று கொண்டிருந்தது. அதனெதிரில் மண்டியிட்டு உட்கார்ந்தாள் லட்சுமி. இடது உள்ளங் கையிலிருந்த குங்குமத்தைத் தன் சிறு விரல்களால் எடுத்து மாட்டின் முகத்தில் தடவிக்கொண் டிருந்தாள்.

நான் பாவிமகன், இச்சமயத்தைத்தான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். வேகமாக மாட்டின் பின்புறம் சென்று சைக்கிள் 'பம்பால்' தாம்பாளத்தில் படபட.வென்று தட்டினேன். வாயால் 'ஹய் ஹய்' என்று கத்திச் சிரித்தேன்.

அவ்வளவுதான். திடீரென்று ஏற்பட்ட இச் சத்தத்தால் மாடு மிரண்டுவிட்டது. கொம்புகளை

ஆட்டி முன்னுல் பாய்ந்தது. லட்சுமி ஒரு பக்கமாயத் தள்ளப்பட்டாள்.

திடுக்கிட்ட லட்சுமி 'ஓ' வென்று அலறினுள். 'ஐயையோ' வென்று கீச்சிட்டுக் கொண்டே கீழே விழுந்தாள்.

என் தேகம் மயிர்க்குச்செறிந்தது. விழித்தேன்; ஒருவருக்கும் தெரியாமல் அவ்விடத்தைவிட்டு நழுவினேன். மேலும் என்ன நடக்கிறதென்று கவனித்துக் கொண்டிருந்தேன், சண்டாளன்.

தன் குழந்தையின் அலறல் சத்தம்கேட்டு லட்சுமியின் தாய் வேகமாய் வாசலுக்கு ஓடிவந்தாள். அவள் உடலில் அடக்க முடியாத பரபரப்பு. மாட்டினருகில் லட்சுமி பேச்சு மூச்சில்லாமல் கிடந்ததைக் கண்டு 'என் கண்ணே' என்று கத்திக்கொண்டே தன் ஆருயிர் மகளண்டை சென்ருள். அவளை வாரியணைத்துத் தன் மடியில் கிடத்திக்கொண்டாள்.

அப் பேதைக் குழந்தையின் முகம் முழுவதும் வியர்வை. மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது.

"லட்சுமி, லட்சுமி! என்னடி கண்ணே? கண்ணைத்திற" அப்பா! தாயின் அந்த தீனக்குரலில் எவ்வளவு கவலை; எவ்வளவு அன்பு!

தன் சிறு கண்களை மெதுவாகத் திறந்தாள் லட்சுமி. விம்மி விம்மி அழுதாள்.

"வந்து, அம்மா அண்ணு............"

மறுபடியும் விசும்பல்; அழுகை.

அன்றிரவெல்லாம் லட்சுமிக்கு நல்ல ஜுரம். உடலின் ஒவ்வொரு அணுவிலும் நெருப்பு வெள்ளம்; உள்ளத்திலோ அச்சம், திகில், பீதி.

கண்களை விழிக்கவேயில்லை. தலையை அப்படியும் இப்படியும் ஆட்டினுள். பயத்தால் அவள் முகம் வாடியிருந்தது. திடீர் திடீரென்று, உயரத் தூக்கித் தரையில் யாரோ தன்னை மோதிவிட்டது போல் கதறினுள்; திணறினுள்.

இரவு முழுதும் வீட்டில் கண்மூடவில்லை. நானும் லட்சுமியின் பாய் அருகில்—ஆமாம்! பாய் தான்! சமையற்காரி மகள் பஞ்சு மெத்தைக்கு எங்கு போவாள்?—உட்கார்ந்திருந்தேன்.

காலை நான்கு மணியிருக்கும், ஜன்னி கண்டுவிட்டது. பிதற்ற ஆரம்பித்தாள்.

“சேய், தோத்தாங்குளி.........வெட்கம் கெட்ட வாதான் பேச வருவா; மானமில்லை; ரோசமில்லை” இன்னும் என்னென்னவோ.

என் மூளையில் ஒரே குழப்பம். அரைமணி சென்றது. என் பக்கம் தலையைத் திருப்பினுள். என்னை நோக்கி வெகுளியும் வெறுப்பும், பயமும் நிறைந்திருந்த கண்களை அகல விழித்தாள்.

மெதுவாக “லட்சுமி, லட்சுமி! என் மேலே கோபமா, என்னேடு ‘டூ’ தானு? ‘சேத்தி’ யில்லையா?” என்றேன்.

வருத்தத்துடன் என்னை நோக்கினுள்.

“நீ தான் என்னை அடிச்சியே. மாட்டை முட்ட விட்டயே. இன்னமே அப்படியெல்லாம் பண்ணுதே?”

“இல்லேடி.” கெஞ்சினேன்.

தீனமான குரலில், “அப்டீன்னு சேத்திதான்” என்றுள்.

ஆள்காட்டி விரலின்மீது நடு விரலை வைத்து

வளையம்போல் செய்து அவள் முகத்திற்கு நேரே நீட்டினேன். என் இரு விரலையும் தன் மலர்க்கரத்தினால் அமுக்கினாள்.

இந்த சம்பிரதாயத்திற்குப் பிறகுதான் சமாதானம். இது குழந்தைகளின் சட்டம்.

மறுபடியும் அவள் என்னோடு பேசவேயில்லை. அவள் சப்த நாடியும் ஒடுங்கிக்கொண்டே வந்தன. அவள் பட்ட அவஸ்தைகளால் என் நெஞ்சில் ஏற்பட்ட புண் இந்த ஜென்மத்தில் ஆறாது. என் தகப்பனார் லக்ஷிமியின் தாயாரை நோக்கி "ஒரு டாக்டரை அழைத்து வரவா?" என்றார்.

எவ்வளவு ரூபாய் செலவு செய்தாலென்ன!

சூரியன் கீழ்த்திசையில் உதயமானான்; அதே விநாடி லட்சுமியின் உயிர் தென் திசையை நோக்கிப் போயிற்று.

* * *

'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு'யிருந்த லக்ஷிமியைப் பறிகொடுத்த அவள் தாயாரைத் தேற்றுவதற்கு யாரால் முடியும்?

உயிரற்ற லட்சுமியைப் பத்து மாதம் சுமந்த வயிற்றோடு வாரியெடுத்து அணைத்தாள் பேதை.

"ஐயோ! என் தங்கமே" என்று அலறினாள்.

ஆம்! லட்சுமி தங்கந்தான். அபரஞ்சித் தங்கத்தை, தன் மடக்கிளியை, பேடன்னத்தைப் பறிகொடுத்த தாய் எங்கு இன்று அலறுகிறாளோ; அன்றி உயிருடன்தானிருக்கின்றாளோ தெரியவில்லை.

லட்சுமி இறந்த பத்தாவது நாள் அவள் தாய் எங்கேயோ போனாள். அவளை நான் இதுவரையில் சந்திக்கவில்லை.

கணவனை இழந்து எங்கள் வீட்டில் அடைக்கலம் புகுந்த அவளது மன நிம்மதியைக் கெடுத்தேன். ஆயுள்வரை தாங்கவொண்ணுத் துயரத்தை அவளுக்கு உண்டாக்கினேன்.

அக் குயிலின் குஞ்சு இறப்பதற்குக் காரணபூதன் நான்தான்.

இப்பொழுது லட்சுமியை நினைக்கும்போதெல்லாம் இக்கிராதகப் பாவியின் மூளையே சிதறிவிடும் போலிருக்கிறது.

நான் தான் அவளைக் கொன்றேன். இன்று பதினுறு வருடங்களுக்கு முன் தோன்றிய துக்கம் இப்பாவியின் நெஞ்சிலேயே அடைபட்டு வெளிவர இயலாது புழுங்கிக் கொண்டிருக்கிறது.

"நீ குற்றவாளி; கொலைகாரன்" என்று என் மனம் சொல்கிறது. மனத்துடன் யுத்தம் செய்ய, வழக்காட என்னல் முடியவில்லை, முடியவும் முடியாது!

# ஆசிய ஜோதி

கோடானு கோடி நட்சத்திரங்கள் புடைசூழ, நீல வானக் கடல்மீது சந்திரன் பவனிவரப் புறப் பட்டான். உலகம் முழுவதும் ஆழ்ந்த உறக்கத்தி லிருந்த அவ்வேளையில், தன் கடமையை நிறைவேற் றக் கிளம்பிய சந்திரனின் ஒளிக்கிரணங்கள் அவ்வுத் தியான வனத்தையும், அதன் நடுவில் கம்பீரமாகக் காட்சியளித்த பளிங்கு மாளிகையையும் வெள்ளி மயமாக்கின. மலர்களின் சுகந்தத்துடன் தென்றல் கலந்தது. அந்த மன்மத மண்டபத்தின் உட்புறத்தில் நித்திரை வயப்பட்டுக் கிடக்கும் வனிதா ரத்தினங் களைக்கண்டு, அவர்கள் மோகன வடிவில் சொக்கிய சந்திரன், வானவீதியில் அசையாது நின்று கொண் டிருந்தான்.

அருகிலிருந்த யாழின் நரம்புகள் மீது விரல்களை வைத்த வண்ணம் ஒரு பெண்ணழகி தூங்கிக்கொண் டிருந்தாள். "உன் கண்கள் வசீகரமுடையனவா, அல்லது என்னுடையவைகளா, வா அருகில், பார்ப் போம்" எனக்கூறிப் பார்ப்பதுபோல, ஒரு புள்ளி மானின் முகத்தோடு, தன் முகமலரை வைத்துத் துயில் போய்க்கொண்டிருந்தாள், மற்றொருத்தி. பாதி பூர்த்தி யானதும் ஆகாததுமான மலர்ச்சரங்களைக் கரங்களில் தாங்கிய வண்ணம் இன்பக் கனவுகள் கண்டுகொண் டிருந்தனர் மற்றும் சிலர்.

யௌவனத்தின் பூரணப் பொலிவுடன் விளங் கும் அப்பெண்மணிகளைத் தாண்டிக்கொண்டு, அம்

மாளிகையின் நடுவில் காணப்பட்ட ஏகாந்த அறைக்குள் தன் தலையை நீட்டினான், நிலாமகன்.

சந்தன மரத்தாற் செய்த கட்டிலின்மீது ஆழ்ந்த நித்திரையிலிருந்த சதி பதிகளைக் கண்டு திடுக்கிட்டான். தனக்குக்கூட களங்க மிருக்கிறதே; கறை ஒன்றுமேயில்லாத அவர்கள் யாராயிருக்கக்கூடும் என அதிசயித்துக்கொண்டே வெளியே நடந்தான்.

சிறிது நேரம் சென்றது. அக்கோமளப் பாவையின் அருகில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த இளைஞன் திடுக்கிட்டு எழுந்தான். கட்டிலினின்றும் கீழிறங்கினான்; எதையோ நினைத்தான்; என்னென்னவோ யோசித்தான். கடைசியாக, ஓர் அதிய்ற்புத முடிவுக்கு வந்தவன் போலக் காணப்பட்ட அவன் கண்கள் பிரகாசித்தன; கால்களோ கட்டிலை மும்முறை வலம்வந்தன; கட்டிலில் படுத்திருந்தவளை, பேரழகும் பேரறிவும் பேரருளும் வீசும் அவன் கண்கள் கடைசியாக ஒரு முறை உற்று நோக்கின.

பூப்போன்ற அவள் கண்களையும், கன்னத்தையும் மலர்க்கைவிரல்களையும், மாறி மாறிப் பார்த்தான். முற்றும் துறந்த முனிவர்களின் திடசித்தத்தையும் கலங்க அடிக்கக்கூடிய அவள் கோமள வதனத்தை நெடுநேரம் கவனித்தான்: ஆயினும், ஒவ்வொரு வினாடியும் புதுப்புது எழிலுடன் விளங்கும் அவள் இன்ப மேனியைக்கண்டு அவன் சிறிதும் கலங்கவில்லை. சிறிதுகூடச் சந்தடி செய்யாது, ஏகாந்த அறையைக் கடந்து, சுற்றிலும் துயில் போய்க்கொண்டிருந்த பணிப்பெண்களையும் தாண்டிக்கொண்டு, அம்மாளி

கையை விட்டுக் கிளம்பிய அவ்விளைஞன், ஒரே திசையில் அம்புபோல நடக்கலாயினான்.

* * *

ஏழு ஆண்டுகள் ஓடி மறைந்தன. ஆருயிர்க் கணவன் சித்தார்த்தன் புதிய தர்மம் ஒன்றைக் காணும் பொருட்டுத் தன்னையும் குழந்தை ராகுலனையும் மறந்து, நள்ளிரவில் எங்கேயோ போய்விட்டான், என்பது யசோதரைக்கு எவ்வாறு தெரியும்? வானத்து தேவர்களெல்லோரும், நாதன் அவளைப் பிரிந்த அந்நாளை ஓர் சுப்தினமாகக் கொண்டாடினார்கள் என்பதும் அவளால் தெரிந்துகொள்ள முடியுமா!

தன்னைப் பெற்ற தகப்பன் சுத்தோதனனையும், தான் பெற்ற ஆசைக் குமாரனையும், தன்னையும் பிரிந்து மறைந்த நாயகனை நினைத்து நினைத்து யசோதரை துரும்பாகி விட்டாள்.

வான், மண், விண்மீன், இவையனைத்தும் இவள் புன்முறுவல் ஒன்றிற்கு ஈடாகாது எனும்படியான எழில் வாய்ந்த யசோதரை, இன்று இளைத்துத் தீளைத்துக் காணப்பட்டாள். முன்பெல்லாம் வானத்து நட்சத்திரங்களைப் போலச் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த அவள் வேல்விழிகள் ஒளி மங்கிக் காணப்பட்டன. அவள் மனதில் சாந்தியில்லை. தன்னையுமறியாது விம்முவாள்; வியர்ப்பாள்: வெதும்புவாள்.

காற்றையும் மண்ணையும், பட்சிஜாலங்களையும் கூப்பிடுவாள்; 'என் கணவன் எங்கே?' என்று கேட்டுக் கதறுவாள். 'வானகமே, மும்முதலே, முனிவர்களே, என் கணவர் எங்கு போயிருக்கிறார்? தெரிவி

யுங்கள்' என்று அலறி அழுவாள். உணர்விழந்து தரையில் சாய்வாள்.

பல திசைகளிலும் சித்தார்த்தனைத் தேடிச் சென்ற ஒற்றர்கள் யாதொரு தகவலும் கிடைக்காது திரும்பிவிட்டனர்.

அன்றிரவு வெகு நேரமாய்விட்டது. அரண்மனைக் காவலர்கள் இருவர் வெகு பரபரப்புடன் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் சந்தோஷத்துடன் காணப்பட்டனர். சித்தார்த்தன் மறைந்த அன்றுமுதல் மகிழ்ச்சியின் அறிகுறிகளே யில்லாதிருக்கும் அரண்மனையில், ஆனந்தத்துடன் காணப்பட்ட இவர்களிருவரும் யாராயிருக்கக்கூடும் என யோசித்தாள் யசோதரை; அவளையுமறியாது அவள் பாதங்கள் அவர்களருகில் சென்றன.

இளவரசி அருகிலிருப்பதையும் கவனியாது அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

'உண்மையாகத்தான் சொல்லுகிறேன். இன்றைக்கு எட்டாவது நாள் இக் கபிலவஸ்து நகருக்குள் வருவதாகச் செய்தி சொல்லி அனுப்பினார். தலைநகருக்குத் தன்னை வரவேற்று அழைத்துப்போக யாரும் தேவையில்லை என்றும் சொல்லிவிட்டார்.' என்றான் ஒருவன்.

'நீ அவரைப் பார்த்தாயோ?'

'இல்லையே, நாங்கள் அவரிருக்குமிடம் செல்வதற்குள்ளாகவே ஓர் ஆள் மூலம் செய்தி சொல்லி அனுப்பிவிட்டாரே; என்ன செய்வது? அது கிடக்கட்டும், இப்பொழுதே யசோதரை அரசியிடம் சென்று, சித்தார்த்தர் வரும் விஷயத்தைத் தெரிவித்து உற்ற பரிசு பெற்று வருகிறேன் பார்!'

அவன் கூறி முடிப்பதற்குள் தொப்பென்று ஒரு நவரத்னமாலை விழுந்தது; திடுக்கிட்டுத் திரும்பினான்; சந்தோஷ மிகுதியில் மயக்கமுற்றுத் தரையில் விழுந்து கொண்டிருந்த யசோதரையை அவன் கரங்கள் தாங்கின.

எங்கேயோ போயிருந்த சித்தார்த்தன் தலைநகர் திரும்புகிறான் என்ற செய்தி கபிலவஸ்து நகரமெங்கும் பரவியது. ஆடம்பரத்துடன் அரசகுமாரனை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை நகரமாந்தர்கள் செய்யலாயினர்.

குறிப்பிட்ட தினமும் வந்தது. கபிலவஸ்துவின் தெற்குவாசலில் ஒரு பிரம்மாண்டமான கூடாரம் நிர்மாணிக்கப்பட்டது. மலர்களாலும் பட்டினாலும் நவரத்னங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த அதன் முன்புறத்தில் பூரண கும்பமேந்தி ஆயிரம் வேதியர் நின்றனர். நகரமெங்கும் குத்துவிளக்குகள்; முத்துக் கோவைகள்; ஒவ்வொரு வீட்டையும், குலைவாழைகளும் மாவிலைத் தோரணங்களும் தாங்கி நின்றன. நகரவீதிகளிலெல்லாம் இடுப்பளவு ரோஜாமலர்களைக் கொட்டினர். நூறு யானைகள், சுவர்ண அம்பாரிகளுடன் தெற்கு வாயிலில் நின்றுகொண்டிருந்தன.

யசோதரையின் மதிமுகம் புதுச்சோபையுடன் விளங்கிற்று. நாதன் வரப்போகிறான், இவ்வளவு நேரம் நகரருகில் வந்திருக்கக்கூடும் என்ற இது போன்ற எண்ணங்களால் அவள் உடலம் கட்டுமீறி ஆடியது. குழந்தை ராகுலனை, இரு கரங்களாலும் வாரி அணைக்கிறாள்; குதிக்கிறாள்; கூத்தாடுகிறாள்.

அதிகாலையிலேயே தெற்குவாசல் கூடாரத்திற்குள் வந்துவிட்டாள். மலர்க்கண்களை அகல விரித்து,

தூரத்தில் தெரியும் ராஜபாட்டையையே இமை கொட்டாது கவனித்துக் கொண்டிருந்தாள்.

மன்னன் சுத்தோதனனே சிறு குழந்தைபோல் ஆகிவிட்டான். அரண்மனைச் சபாமண்டபத்தில் மந்திரி, பிரதானிகள் புடைசூழ, சூரிய உதயம் முதல் கொலுவீற்றிருக்கிறான், சித்தார்த்தன், மண்டபத்துள் நுழைந்ததும், தன் சிரசிலிருக்கும் மகுடத்தை அவனுக்குச் சூட்டுவது, அடுத்த விநாடி தான் வனம் செல்வது என்றெல்லாம் நிச்சயித்தான்.

மரங்கள் மீதும், வீட்டுக் கூரைகள் மீதும், உப்பரிகைகளிலும் நகரமாந்தர் குழுமியிருந்தனர்.

வெகுநேரங் கழிந்தது ; அப்பொழுதும் சித்தார்த்தன் வந்து சேரவில்லை ; வீதிகளில் இறைக்கப்பட்டிருந்த நறுமலர்கள் வெயிலில் வாடி வதங்கின.

கணவன் வரும் வழியையே எதிர்நோக்கிக்கொண்டிருந்த யசோதரையின் கண்மலர்களும் வாடி விட்டன.

சுத்தோதனனின் உடலும் உயிரும் வாடிவிட்டன. மைந்தனைக் காணவேண்டும் என்ற அவன் ஆசை துக்கமாக மாறிவிட்டது. யசோதரையின் பொன்னுடலும் இன்னுயிரும் தளர்ந்தன.

மாலைப்பொழுதும் வந்தது ; சாந்திமயமான சாயங்கால வேளையிலே, வெகு தூரத்தில் ராஜபாட்டையில், யாரோ மூவர் வருவதை ஜனங்கள் பார்த்து விட்டனர் ; இரு விநாடியில் எங்கும் சலசலப்பு.

அம் மூவரும் அருகில் நெருங்க நெருங்க யசோதரையின் இருதயம் படபடவென்று துடிக்க ஆரம்பித்தது.

ஜனங்களைத் தாண்டிக்கொண்டு அம் மூவரும் தெற்கு வாயிலின் சமீபத்தில் வந்துவிட்டனர்.

கூடாரத் திரையைச் சிறிது விலக்கி, வருபவர்கள் யாராயிருக்கக்கூடுமென திரைச் சந்தின் வழியாகப் பார்த்துக்கொண்டே யிருந்தாள் யசோதரை.

கருணை வழியும் கண்களுடன் கம்பீரமாக வந்து கொண்டிருந்தான், புத்தபெருமான். போதி விருட்சத் தடியில், உண்மை கண்டு உலகம் உய்விக்க வழிகாட்ட வந்த புண்ணிய மூர்த்தி, கபிலவஸ்து நகரின் எல்லைக்கு வந்துவிட்டான். 'கடவுள் எங்கேயோ கோவிலுக்குள் இருக்கிறது; குருக்கள் மூலம் பொன் கொடுத்தால் அவ்வாண்டவன் புண்ணியம் கொடுப்பான்' என்று கூறி மனிதரை ஏமாற்ற நினைப்பவர்களை வெருட்டி அடித்து, மக்களுக்கு நலம் செய்ய வந்த நாதன், ஐம்புலன் அடக்கிய ஐயன் வந்துவிட்டான்.

இரு சிஷ்யர்களுடன் காவியுடை அணிந்து கையில் பிக்ஷைப்பாத்திரம் ஏந்தி, மொட்டைத் தலையுடன் காட்சியளித்த அவன்தான், பூர்வாஸ்ரமத்தில் சித்தார்த்தன் என்ற நாமம் தாங்கி நின்றான் என்று ஜனங்களால் நினைக்கவே இயலவில்லை. அந்திச் சூரியனும் காற்றும் மலையும் தருவும் மனிதர்களும் பார்க்கத் தாமரைப் பாதங்களைத் தரையில் ஊன்றி நடந்து, யசோதரை தங்கியிருந்த கூடாரத்தண்டை வந்துவிட்டான்.

திரை இடுக்கு வழியாக ஒரு முறை உற்று நோக்கினாள் யசோதரை. அவள் மார்பகம் புடைத்தது; இன்பக் கிளர்ச்சியில், கண்களில் நீர் துளிர்த்தது.

'பிராணபதி!' என்ற அவள் அபயக்குரல் கபிலவஸ்து நகரைப் பிளந்து சென்றது.

கண் இமைக்கும் நேரத்திற்குள், கௌதம முனிவரின் பாத கமலங்களில் கல்லாய்க் கிடந்தாள் யசோதரை.

யாரது? சித்தார்த்தனா!

சித்தார்த்தன் தான்; சந்தேகமில்லை.

நகர மாந்தரின் மகிழ்ச்சிக்கு எல்லை ஏது?

'ஜே! ஜே!' எனக் கோஷித்தனர். சங்கம் முழங்கினர்; பேரிகை சாற்றினர்.

தரையில் கிடந்த யசோதரையைக் கனிந்து நோக்கினான் புத்தபெருமான்.

காலைக் கதிர்போல சுவர்ண மாளிகையில் வாழ்ந்த தன் மனைவியின் பொன்மேனி இவ்வளவு கேவலமாக உடைந்து விட்டதே என்ற கவலையுடன் யசோதரையை நோக்கினான் இல்லை. மண், பெண், பொன் இவைகளின் தளைகளினின்றும் விடுவித்துக் கொண்டு, வெற்றி வீரனாக நின்ற அண்ணல், பத்து மாதம் சுமந்து பெற்ற தன் தாயாகவே யசோதரையை எண்ணினான்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஓடோடியும் வந்தான் சுத்தோதனன்.

முதிர்ந்த பருவம்; தளர்ந்த நடை; ஆயினும் விரைந்துதான் வந்தான்; சுத்தோதனன் கரங்களில் நவரத்னங்கள் இழைக்கப்பெற்ற பொற் கிரீடம்; இவ்வளவு காலமாகத் தான் தாங்கிய பூமி பாரத்தை இனி சித்தார்த்தன் தாங்கவேண்டும் என்ற உறுதி; மகனைக் கண்ட அடுத்த கணமே, இரண்டொரு ஆசி மொழிகள் கூறிவிட்டு, மணி மகுடத்தைச் சித்தார்த்தன் சிரசில் வைத்துவிட வேண்டுமென்ற பேரவா.

புத்தனின் சமீபம் வந்து சேர்ந்தான்; மாயா தேவியின் மகனைத், தன் குலக்கொழுந்தை, உச்சி முதல் உள்ளங்கால் வரையில் அவன் கண்கள் தழுவின. அவ்வளவுதான்; சுத்தோதனன் உடலம் நடுங்கியது; கையிலிருந்த மணி மகுடம் தரையில் உருண்டோடியது.

தவத்தினால் இளைத்துச் சாந்தம், எளிமை, ஞானம், எல்லாம் பூத்து மலர்ந்த புண்ணியன் இள நகையுடன் நின்றான்.

தரும மூர்த்தியை, தெய்வமெல்லாம் புகழ் தெய்வ மகனை, மொட்டைத் தலையுடன், காவி ஆடையுடன், கையில் தாங்கிய பிக்ஷைப் பாத்திரத்துடன், கண்ட சுத்தோதனனின் கோபம் கரைபுரண்டோடியது.

மாயாதேவியின் குல விளக்கமாக வந்த சித்தார்த்தன், குவலயத்திற்கு அறவிளக்கமாகத் தன் எதிரில் காட்சி யளிக்கிறான் என்பதைச் சுத்தோதனன் அறிந்துகொள்ள முடியவில்லை.

உள்ளம் கொதித்துக் கொப்பளிக்க, கோபக் கனல் குமுற, வார்த்தைகளைக் கொட்டினான்.

"வேத சாட்சியாக மணந்த மனைவியையும், பச்சிளங் குழந்தையையும், நள்ளிரவில் விட்டுப் பிரிந்து, கண்ட இடமெல்லாம் சுற்றிவிட்டுக் கடைசியாகப் பிச்சைக்காரனாக ஊர் திரும்ப உனக்கு வெட்கமில்லை. அட பாவி, சாரமற்றிருந்த என் வாழ்க்கையை ஈர முள்ளதாகச் செய்ய வந்தாய் என நினைத்த என் எண்ணத்தைப் பாழ் படச்செய்துவிட்டாயே. உலகனைத்தும் உன் குடைக்குள் வந்துவிடும் என்றெல்லாம் கனவு கண்டுகொண்டிருந்தேனே, ஏடா! என இந்தக் கோலம்? நினைத்தமாத்திரத்தில், உலகச்

செல்வமெல்லாம் உன் காலடியில் வந்து விழுமே—''

கருணையின் சாகரம் பதிலளித்தான் :

"ஐயனே, உலகச் செல்வமெல்லாம் பெறத் தாங்கள் விரும்புகின்றீர்களா ?'' என்று சொல்லிக் கொண்டே அந்திப் பொழுது மறையும் அவ்வின்ப வேளையில், தந்தையை ஒரு கரத்தால் பிடித்து அழைத்துக்கொண்டு, ஜனத் திரளைத் தாண்டிச் சென்றான். தன்னைப்பெற்ற தந்தைக்கு ஹிதோபதேசம் செய்ய வேண்டுமென்று விரும்பினான் சாக்கிய முனி.

கபிலவஸ்துவிலிருந்த சகல ஜீவராசிகளும் அவர்களிருவரையும் பின் தொடர்ந்து சென்றன.

ஊருக்கு வெளியே உத்தியானவனம்; அதன் நடுவில் ஓர் உயர்ந்த பீடம். அதன்மீது சென்றமர்ந்தான் புத்தபிரான்; அவன் வலக்கையண்டை சுத்தோதனும், பாதங்களைத் தாங்கிய வண்ணம் யசோதரையும் அமர்ந்தனர்; சுற்றிலும் நகர மாந்தர்கள்.

பூரணச் சந்திரனும், வானத்து நட்சத்திரங்களும்,-ஏன்-மூன்று உலகும், அவன் வாயிலிருந்து உதிர இருக்கும் அமிர்த மொழிகளைக் கேட்கத் தயாராயின; விண்மீன்கள் கண்சிமிட்டவில்லை; வானக் காவில் அசைவற்று நின்று, அவன் அருள் முகத்தையே நோக்கிக்கொண்டிருந்தன; நகர மாந்தர்களும் ஞானதயாபரனையே கவனித்துக்கொண்டிருந்தனர்.

பெருமானின் கருணை முகத்தில் ஓர் இள நகை மலர்ந்தது; மழையெனப் பெய்தான்.

சொற்களில் அமுதை வைத்துத் தான் கண்ட உண்மைகளை ஐயன் எடுத்துச் சொல்லச் சொல்ல,

சகல புவனமும் அந்த அருட்பிரவாக வெள்ளத்தில் மயங்கி நின்றது.

'சிற்றெறும்பும் ஆண்டவனின் திருக்கோவில் ஜீவ ஹிம்சை நினைவுகூடக் கொடிய பாவம்; பலி, கொலை, இவைகளெல்லாம் தருமமல்ல' என்று சர்வ ஜீவதயாபரன் அலறுவதைக் கேட்டுக் கூடியிருந்தோர் அனைவரும் அவ்விநாடி முதல் ஜீவஹிம்சை செய்வதில்லை எனத் தத்தமக்குள் பிரதிக்கினை செய்து கொண்டனர்

அலை விசிறும் மலர்க்கண்களுடைய புத்த முனிவர் உபதேசத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் கேட்கக் கேட்க, பழம்பிறப்பால், ஓர் ஆத்மா செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி இம்மையில் அதன் வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகின்றது, என்பதை யாவரும் உணர்ந்தனர். கொலை, களவு, பொய், விபசாரம் இவைகளைத் தவிர்ப்போம் எனச் சங்கல்பம் செய்து கொண்டனர்.

அம்மகா போதத்தின் உண்மை கண்ட சித்தார்த்தனின் மனைவியாக இருந்த இளவரசி யசோத்ரை, புத்த முனியின் சிஷ்யை யசோதரை ஆகிவிடத் துணிந்தாள்.

நள்ளிரவு கடந்து சூரிய உதய சமயம். புத்த பகவானை மும்முறை வலம் வந்தாள். "குருநாதா, அடியாளைத் தங்கள் சிஷ்யையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என ஞானசிரியனின் பாதங்களில் விழுந்தாள் யசோதரை.

"சாக்கிய முனியே, அடியேனையும் தங்கள் சிஷ்யர்களில் ஒருவனாகக் கொள்ளவேண்டும்" என்றான் சுத்தோதனன்!

அவனும் கருணை வள்ளலின் காலடி நிழலில் விழுந்தான்.

காலைச் சூரியனின் முதற் கிரணங்களும் ஆசிய ஜோதியின் பாதங்களில் விழுந்தன.

புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி.

# சார்ஜெண்டும் சமாதியும்

இரவு இரண்டு மணி யிருக்கும். அவ்வீட்டின் வெளிப்புறம் நீலவானையும் நெடு மரங்களையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே நின்றான் சார்ஜெண்ட் இயூபர்ட். பழைய கால சம்பவங்களை நினைத்து நினைத்து அவன் மனக் கடல் கொந்தளித்தது. அலை வீசிப் பிரளயம்போலப் புரள ஆரம்பித்தது. கைகளைப் பிசைந்துகொண்டான்; கரங்களால் தன் தலை மயிரைப் பிய்த்துக்கொண்டான். பெருமூச்செறிந்தான்.

எத்தனையோ யுத்தங்களில் லட்சக்கணக்கான வீரர்கள் யுத்த பூமியிலேயே மடிவதைக் கண்டவன் தான்; பீரங்கிக் குண்டுகளாலும், வாட்களாலும் சேதிக்கப்பட்டு மரண அவஸ்தையில் ஓலமிடும் குரல்களைக் கேட்டுக்கேட்டு மனம் கல்லானவன் தான். தந்தையரை இழந்த குழந்தைகளையும், கணவன்மார்களைப் பறிகொடுத்த யுவதிகளையும், செல்வக் குமாரர்களை யுத்தப் பேய்க்கு இரையாக்கித் தவிக்கும் பெற்றோர்களையும் கவலையில்லாது நோக்கினவன்தான்.

ஆயினும் ஆஸ்டர்லிட்ஸ், ஜீனு, மாரங்கோ, இன்னும் கணக்கற்ற யுத்தங்களை நடத்தி வெற்றி கண்ட வீரமகன், இன்னும் சிறிது நேரத்தில் மரணமடையப் போகின்றான் என்பதை நினைக்க நினைக்க அதுவரையில் அவன் நெஞ்சிலேயே அடைபட்டு வெளிவர இயலாது புழுங்கிக்கொண்டிருந்த துக்கம்

அணைகடந்து நெஞ்சையும் உடைத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டது.

அவனது மனம் பட்ட பாட்டை இயற்கையாலும் பொறுக்க முடியவில்லை.

கருமேகப் படலங்கள் வான வீதியை மறைத்தன. 'ஐயோ' என்ற பேரிரைச்சலுடன் கிளம்பிய கொடுங்காற்று, வேருடன் பெரு மரங்களைப் பிய்த்தெறிந்து, தலை சாய்த்துத் தரையில் விழும்படிச் செய்தது.

"ஓ" வென்று அலறி யழுதான் இயூபர்ட்.

"சோ" எனக் கொட்டியது பெரு மழை.

தன்னுடைய வருத்தங்கள் யாவும் இயற்கையில் பிரதிபலிப்பதைக்கூட இயூபர்ட் கவனிக்கவில்லை. வீட்டினுட்புறம் சென்றான்.

துடிப்பு நிறைந்த மன்னனின் உடல் படுக்கையில் துவண்டு கிடந்தது; ஐந்தாறு நண்பர்கள் கட்டிலைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். உட்புறம் நுழைந்த இயூபர்ட், உடல் நடுங்க, மருண்ட விழிகளுடன் படுக்கையில் இருந்தவனையே கவனித்துக் கொண்டு நின்றான்.

உளுத்திருந்த பிரெஞ்சு நாட்டிற்குப் புத்துயிரும் பெரு வாழ்வும் அளித்த அக்காலத்தில் "போன பார்டி, போன பார்டி" என முழங்காதவர், புகழாதவர் இலர். அவன் வாயிலிருந்து என்ன வார்த்தைகள் சிந்துமோ என, அன்று எதிர்பார்த்துக் கைகட்டி வாய் புதைத்து நின்ற தொகை என்ன! அவனுக்குச் சிறிது உடல் நலம் குன்றியிருக்கின்றது என்றாலும், உலக முழுவதும் ஒவ்வொரு விநாடியும், "மன்னர் மன்னனின் உடல்நிலை எவ்வாறு இருக்கின்றது?"

என வினவிய காலம் எங்கே! எல்லாம் மலை யேறின.

அதே நெப்போலியன் போனபார்ட், இன்று கவனிப்பாரற்றுத், தேய்ந்த உடலுடன், கிணற்றுள் இரு கண்களுடன், உற்ருர் உறவினர் எவரும் அரு கில்லாமல் மரணதேவனை எதிர்நோக்கி நிற்கின் ருன்.

நெப்போலியனின் உதடுகள் அசைந்தன; இயூ பர்டின் செவிகள் உற்றுக் கேட்டன.

அவ்வேந்தர் வேந்தனின் வாயிலிருந்து, ஈன ஸ்வரத்தில், "பிரான்ஸ் — ஜோஸபைன் — சேனை — சேனுதிபத்யம்" என்ற வார்த்தைகள் வெளிவந்தன.

சாகும் சமயத்திலும் தன் நாட்டின்மீதும் உயிர்க்காதலி மீதும் மனநாட்டம்!

எதிர்த்தாற்போலச் சுவரில் மாட்டி யிருந்த, ஆசைக் குமரனின் மாசற்ற உருவத்தை அவன் கண் கள் ஒருமுறை உற்று நோக்கின; உடனே தாமாகவே கண்கள் மூடிக்கொண்டன.

வெற்றி எங்கே யிருக்கின்றது என மோப்பம் பிடிக்கக்கூடிய சக்தி பெற்றிருந்த நாசித் துவாரங் கள் வழியாக நீண்ட மூச்சு வெளியே ஓடிற்று. பின் னர் பேச்சுமில்லை; மூச்சுமில்லை.

அவன் பிணமாகி விட்டான்.

கார்ஸிகாவில் தோன்றி, பிரெஞ்சுப் புரட்சி கண்டு, ஐரோப்பாவின் பெரும் பகுதியைத் தன் வசப் படுத்திய ஜோதி விளக்கு அணைந்துவிட்டது; பிண மலையும் ரத்த ஆறும் பெருக்கெடுத்தோடும் யுத்த களத்தில் மரணத்துயில் கொள்ள அருகதையுள்ள அவன், ஹெலினு தீவின் மண்ணில் மாண்டான்.

"வற்றாத நீர்ப் பெருக்குடைய ஸீயன் நதி தீரத்தில், என் உயிரினும் மேலாக நான் நேசிக்கும் என் அருமைப் பிரெஞ்சு மக்களிடையே என் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும்" என விரும்பினான் அவ்வீரமணி. விரும்பிய காரியம் எளிதில், விரைவில் நிறைவேறுவது உலக இயல்பு இல்லையே; அதற்கென்ன செய்வது?

ஹெலினா தீவின் மண்ணில் மன்னன் உடலைப் புதைத்துவிட்டு, நண்பர்கள் சொந்த மண்ணை நாடிக் கப்பலேறினர்.

இயூபர்ட் மாத்திரம் பிரான்ஸ் திரும்ப மறுத்து விட்டான். அன்றொருநாள் "சார்ஜெண்ட் இயூபர்ட்! என் அருகிலேயே என்றும் இரு" என நெப்போலியன் ஆணையிட்டிருந்தான். இட்ட கட்டளையை மீறி பிரான்ஸ் திரும்புவதா? ஒருக்காலுமில்லை.

வேந்தர் வேந்தன், மண்ணினுள் கவலையற்றுத் தூங்கினான்; அவன் சமாதி யருகில் இயூபர்ட் காவல் நின்றான்.

* * *

வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் பத்து வருஷங்களாகப் பெருகின.

உயிர்ப்பிணமாக நெப்போலியன் ஹெலினாவிற்குள் கொண்டுவரப்பட்ட அன்று நடுத்தர வயதுடையவனாயிருந்த இயூபர்ட், இன்று வயோதிகனாகி இளைத்துக் காணப்பட்டான்

அநேக இடங்களில் கிழிந்து அழுக்கேறிய ராணுவ உடை; நீண்ட தாடி; கையில் துருப்பிடித்த துப்பாக்கி. காக்கை, குருவிகூட சமாதிமீது எச்சமிடலாகாது; உட்காரவும் கூடாது; இலை, சருகுகூட உதிரலாகாது.

ஆகாயப் பரப்பு முழுவதும் இருள் திரையால் மூடப்பெற்றுப் பேய் நடமாடும் அந்நடுநிசி வேளை யில், சமாதி யருகில் ஜாக்கிரதையாய்க் காவல் புரிந்து கொண்டிருந்தான்.

சமாதிமீது ஒரு கையை வைத்தான்; அக்கரத் திற்கு உடனே ஒரு முத்தம் அளித்தான். சமாதியைக் குனிந்து கனிந்து நோக்கினான்; பேசினான்.

"ஐயா, இறந்தவர் மீண்டும் தோன்றுவது இயற்கைக்கு விரோதமா யிருக்கலாம். ஆனாலும் என் மீது கருணை யிருந்தால், தாங்கள் எனக்குக் காட்சி யளிக்கலாமே. தளபதி, நான் இங்கு தன்னந் தனி யாய்த்தா னிருக்கின்றேன். எவரும் அருகிலில்லை. நான் காவல் புரிகையில் எவனால் இங்கு வர முடியும்? ஒரே ஒரு முறை என் எதிரில் தோன்றி, 'இயூபர்ட்' எனக் கூப்பிட்டாலும் போதுமே. சுவாமி! இந்த அடிமை நாயின் இருதயத்தில் தங்களுக்குத் தானே மகோன்னத ஸ்தானம்! இது தங்களுக்குத் தெரி யாததா?"

சமாதி யருகில் மண்டியிட்டான்; அழுதான்; அலறினான்; கெஞ்சினான்; கதறினான்; விம்மினான், அழுது அழுது ஓய்ந்து அரைக்கணம் மௌனமாக நின்றான்.

"இயூபர்ட்! ஸீயன் நதிப்பிரதேசத்தில் என் பிரஞ்சு மக்களிடையே நான் துயில் கொள்ளவேண் டாமா?" என்ற வார்த்தைகள் சமாதியின் உட்புறத்தி லிருந்து வெளிவந்தனவோ என்னவோ தெரிய வில்லை.

துள்ளிக் குதித்தான் கிழவன்; மங்கியிருந்த அவன் கண்கள் சுடர்விட்டுப் பிரகாசித்தன. சுற்று

முற்றும் பார்த்தான்; எவருமில்லை. சமாதியிலிருந்து தான் வார்த்தைகள் பிறந்திருக்கின்றன!

சமாதியை உற்றுக் கவனித்தான். "பாவி, என்னால் ஒன்றும் இயலவில்லையே. எனக்கு இறக்கைகள் இருக்குமாயின், கண் இமைப்பதற்குள் தங்களை ஸீயன் நதி அருகில்கொண்டு சேர்த்திருப்பேனே; அன்றி, என் வசம் ஒரு சிறு படகிருந்தாலும் போதுமே" என மனம் கசிந்து உருகினான்.

ஏதேதோ யோசித்தான்; திடீரென்று ஓர் அதியற்புத முடிவிற்கு வந்தவன்போலக் காணப்பட்டான். 'அதுதான் சரி' என அவன் வாய் முணுமுணுத்தது. கடும் பனியிலும் சுடு வெயிலிலும் கொட்டும் மழையிலும் சமாதியை விட்டு அதுவரையில் நீங்காதிருந்த இயூபர்ட், "இதோ வருகிறேன்" எனச் சமாதியிடம் விடைபெற்றுக் கொண்டான். கடற்கரையைநோக்கி அவனது கிழக்கால்கள் விரைந்தன.

கடல் என்னவோ அமைதியாகத்தானிருந்தது. கடற்கரையில் நின்றுகொண்டு, பிரான்ஸ் இருக்கும் திசையை நோக்கி உரத்த குரலில் பேசலுற்றான்:

"ஏ, பிரெஞ்சு மக்களே! உலர்ந்த நெஞ்சுடைய கோழைகளாயிருந்த உங்கள் அனைவரையும் நெஞ்சுரங்கொண்ட சிங்கங்களாக்கி, பிரான்ஸ் என்றாலே அகில உலகும் மரியாதை காட்டச்செய்த என் அண்ணல் மனம் புழுங்குவதை நீங்கள் அறிய மாட்டீர்களா? சை! வெட்கம்! ஹெலினா தீவின் பாழும் மண்ணா ஸீயன் நதி தீரம்!"

பதில் இல்லை. மேலாடையைக் கழற்றிக் கடல் நீரில் நனைத்தான்.

அவ்வாடையுடன் சமாதிக்கு ஓரே ஓட்டம்; துணியிலிருந்த கடல்நீரைச் சமாதிமீது பிழிந்தாகி விட்டது.

"ஐயனே! ஸீயன் நதியின் புனித ஜலம் நிச்சயம் இக்கடல்நீரில் கலந்திருக்கின்றது. ஸீயன் தீரத்தைத் தாங்கள் காண முடியாவிட்டாலும் அப்புண்ணிய தீர்த்தத்தின் நீர் கலந்திருக்கும் இவ்வுப்பு நீரால் தங்கள் சமாதியைக் கழுவினேன். சிறிதளவாவது மனம் சாந்தியடையுங்கள்."

* * *

கடற்கரையில் நின்று நடுநிசியில் இயூபர்ட் கதறிய வார்த்தைகளை வயிரூர உண்ட காற்று, அவைகளைச் சமுத்திரத்தின்மீது பிரான்சுக்குச் சுமந்து சென்றது.

அடுத்த விநாடி பிரெஞ்சு நாடு முழுவதும் ஒரே அல்லோகலம்; நெப்போலியனின் உருவம் ஒவ்வொரு பிரெஞ்சுக்காரனின் இருதயத்திலும் ஆழப் பதிந்து சதா காலமும் மனக்கண்கள் முன்பு காட்சியளித்துக் கொண்டேயிருந்தது.

"நெப்போலியனின் உடல் பிரான்சுக்கு வரப் போகின்றதா, அல்லது உலகனைத்தையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கவேண்டுமா?" எனக் கொதித்துக் கொக்கரித்து நின்றனர் பிரெஞ்சு மக்கள்.

தேசத்தின் ஒருமுகமான இச்சையை எவரால் தடுக்க முடியும்?

* * *

சமாதிக் காவல் புரிந்துகொண்டிருந்த இயூபர்டின் பாம்புச் செவிகளில், "வைவ்லா நெப்போலியன்" "வைவ்லா பிரான்ஸ்" ("நெப்போலியன்

நீடூழி வாழ்க", "பிரான்ஸ் நீடூழி வாழ்க") என்ற கோஷங்கள் விழுந்தன. அவனேயுமறியாது "வைவ்லா எம்பரர்" எனக் கோஷித்தான்; சத்தம் வந்த கடற்கரையை நோக்கி ஓடினன்.

பிரெஞ்சு நாட்டின் செல்வ மகனை, வீர வடிவைச் சொந்த நாட்டிற்குக் கொண்டு சேர்க்க, ஆவலுடன் தயாராய் நின்றுகொண்டிருந்த இரு பிரம்மாண்டமான கப்பல்களை இயூபர்ட் கண்டான்; அவன் தேகம் கட்டுமீறி ஆடியது. அவன் மகிழ்ச்சிக்கு வரையேது? கத்தினன்; கூத்தாடினன்; கப்பலில் வந்த பிரெஞ்சு தேசப் பிரதிநிதிகளுடன் சமாதியை அடைந்தான்; சமாதியைச் சுற்றி நர்த்தனம் புரிந்தான்.

* * *

கடுந்துயிலில் ஆழ்ந்திருந்த நெப்போலியனுக்குத் தொந்தரவு அளித்துக்கொண்டு மண்வெட்டிகளும் கடப்பாரையும் சமாதியைத் தாக்கின. தன் உயிரினும் மேலான அருந் தலைவனைக் காணவேண்டும் என்ற ஆசை பிடர் பிடித்துத் தள்ள, எல்லோரையும் விடப் பரபரப்பாய் இயூபர்ட் வேலை செய்தான்.

கல்லையும் மண்ணையும் அப்புறப்படுத்தி விட்டனர்; சவப்பெட்டி வெளியே கொண்டு வரப்பட்டது. என்ன அதிசயம்!

அடக்கம் செய்து பத்தொன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்படி யிருந்தும் சவத்திற்கு யாதொரு சிறு கெடுதல்கூட உண்டாயிருக்கவில்லை, ராணுவ உடை யணிந்து, சாந்தம் தவழும் முகத்துடன் தரிசனம் அளித்தான் புரட்சி வீரன் நெப்போலியன்.

உன்மத்தன்போல் மௌனமாக நெப்போலிய

னின் முகத்தழகைக் கண்களால் வெகுநேரம் அள்ளி அள்ளிப் பருகினன் இயூபர்ட். ஸீயன் நதி தீரம் புறப்படப் போகின்ருேம் என்ற மகிழ்ச்சியால் அவ் வீர மகனின் ஜோதி வதனத்தில் ஒரு புன்முறுவல்; எல்லே காண முடியாத அமைதி.

"வைவ்லா எம்பரர்" கோஷம் ஆகாயப்பரப்பை நோக்கி விரைந்தது. குளிர்ந்த உள்ளங்களிலிருந்து வெளிப்பட்ட அக்கோஷம் மேகக் கூட்டங்களைத் தாக்க ஆனந்தமாரி பெய்தது. வானமும் "வைவ்லா" என இடித்தது. அவ்வீர கர்ஜனை பிரான்ஸ் தேசத் தையும் எட்டிப் பிடித்தது. பிரெஞ்சுநாடு முழுவதும், "வைவ்லா எம்பரர்" கோஷம்; உலகெல்லாம் எதி ரொலி.

சரியாகப் பதினுயிரத்து நூற்று முப்பத்திரண்டு தினங்களுக்குமுன் மனமுடைந்து நடைப் பிணமாய் ஹெலினுவிற்குள் ஊர்ந்து வந்த கைதி நெப்போலி யன், இன்று ஆனந்தமாகப் பரிவாரங்கள் புடைசூழ சக்கரவர்த்தி நெப்போலியனுக பிரெஞ்சுக் கரையை அணுகிக்கொண் டிருக்கின்ருன். இதை அறிந்த இயூபர்டின் இருதயம் பூரித்தது.

ஸீயன் நதியைக் கப்பல்கள் அடைந்தன. நிமி ஷத்துக்கு நிமிஷம் முழங்கிய வரவேற்புப் பீரங்கிக ளின் சந்தோஷ கர்ஜனை, இயூபர்டின் செவிகளைத் தாக்கிச் சென்றது. கப்பலின் மேல்தளத்தில் நின்று கொண்டு நதியின் இரு கரைகளையும் நோக்கினுன். கண்ணுக்கெட்டிய வரையில் ஜனத்திரள்!

நெப்போலியன் விரும்பிய இடம் வந்தாகிவிட் டது. நதிக்கரையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சக்கர வர்த்தியின் ஆசைக் காதலி, ஜோஸப்பைனின் பிரம்

மார்ண்டமான சிலையை, இயூபர்டின் கண்கள் பார்த்து விட்டன. அவ்வளவுதான். கப்பலை விட்டிறங்கிச் சிலையை நோக்கி ஓடினான்.

இரு கரங்களையும் நீட்டி நாயகனை வரவேற்கும் பாவனையிலிருந்த அச்சிலைக்கு உயிரில்லை என்று இயூபர்ட் நினைக்கவேயில்லை. பல வருஷங்களை மனித சஞ்சாரம் இல்லாத தீவில் கழித்தவன். திடீரென்று கடந்த சில தினங்களில் நடந்த அற்புத சம்பவங்களால் அவன் மூளைகூட அச்சமயம் சிறிது குழப்பமடைந்திருந்தது,

சிலையை நோக்கினான். "அம்மா, அம்மா! அதோ பாருங்கள். ஐயன் வந்துவிட்டார் பாருங்கள், பாருங்கள்."

கண்ணீரும் கம்பலையுமாய் நின்றான். விழித்த கண் விழித்தபடியே இயூபர்டை ஜனங்கள் நோக்கினர். தன் ஆவி நிகர்த்த தலைவனுடன் இருபத்தைந்து ஆண்டுகள் அஞ்ஞாதவாசம் செய்த இயூபர்டின் தளரா உறுதியையும் எஜமான விசுவாசத்தையும் அறிந்திருந்த ஜன சமுத்திரத்தின் கண்களிலிருந்து பெருகிய நீர் ஸீயன் நதியில் ஒரு திடீர் வெள்ளத்தை உண்டாக்கிவிட்டது.

தலை நிமிர்ந்து நோக்கினான் இயூபர்ட்.

நூற்றைம்பது அடி உயரமுள்ள ஸ்தூபி; அதன்மீது பொன்னால் வார்க்கப்பட்ட பெரும் கழுகு. தன் இரு சிறகுகளையும் அகல விரித்து ஸ்தூபியின் அடிப்பீடத்தைப் பட்சிராஜன் நோக்கிக்கொண்டிருந்தான்.

அடி பீடத்தின்மீது, "ஸீயன் நதிப் பிரதேசத்தில், என் உயிரினும் மேலாக நான்நேசிக்கும் பிரெஞ்சு

மக்களிடையே என் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும்'' என்ற எழுத்துக்கள் பொன்னால் பொறிக் கப்பட்டிருந்தன.

வீதிகளில் எங்கு நோக்கினும் வளைவுகள்; தோரணங்கள்; வெற்றி ஸ்தூபிகள். பதினாறு கருங் குதிரைகள் கட்டிய தங்க ரதத்தில் நெப்போலியச் சக்ரவர்த்தியின் சவம் பவனி வந்தது.

ஸீயன் நதிப் பிரதேசத்தில் கட்டப்பட்டிருந்த மணிக் கோவிலை ரதம் சென்றடைந்தது. சிற்பக்கலை வல்லுநர், தம் திறமை முழுவதையும் உபயோகித்து நிர்மாணித்த அக்கலைக் கோவிலின் உட்புறத்தில் ஆறாயிரம் மனிதர்கள் அமர்ந்திருந்தனர்; வெளிப்புறத்திலோ பத்து லட்சத்திற்கும் அதிகமான ஜனங்கள்.

பாரிஸ் நகர மாதாகோவிலின் வெண்கல மணிகள் ஓயாது ஒலித்தன; பீரங்கிகள் சலியாது முழுங்கின.

திடீரென்று எங்கும் நிசப்தம். புத்தம் புதிய ஆடைகளணிந்து, பளபளப்பான நீண்ட வாளைக் கரத்தில் தாங்கி இயூபர்ட் கம்பீரமாக மண்டபத்தினுள் நுழைந்தான். அவன் பின்னால் கருப்புடை அணிந்து, நீர் பெருகிய விழிகளுடன் நெப்போலியனின் சவப்பெட்டியைப் பதினாறு வீரர்கள் சுமந்து வந்தனர்.

அமர்ந்திருந்த ஆறாயிரவரும், எழுந்து மரியாதை செய்தனர். விலங்கற்ற கைதியாய் தன் தேசத்திற்குத் தொலை தூரத்தில் நெப்போலியன் உயிருடன் வாடி வதங்குகையில், பல வருஷங்கள் அவனைப் பற்றியே நினையாது கவலையில்லாதிருந்த இவர்கள்

அவன் மடிந்தபின் அவன் சவத்திற்கு அன்பும் மரி யாதையும் செலுத்துகின்றனர். என்ன உலகம்!

தேசத்தின் சார்பில் சவம் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

நூற்றுக் கணக்கான வாத்தியங்கள் முழங்கின; சவப்பெட்டி யருகில் நின்ற இயூபர்ட் நெப்போலிய னின் முகத்தை நோக்கி, "ஸீயன் நதி தீரத்தை அடைந்தாய் விட்டது. இனித் திருப்திதானே?" என் ருன் சிரித்துக்கொண்டே.

"மனம் ஆறுதல் அடைந்தது" என்ற மொழிகள் அவன் செவிகளுக்கு மட்டும் எட்டின.

"ஹா" என்ருன் ஆச்சரியத்துடன், ஆனந்தத் துடன்.

முழங்கிய வாத்தியங்கள் ஓய்ந்தன; கூடியிருந்த அனைவரும் மௌனமாக இருந்தனர்.

சவத்தருகில் நின்ற இயூபர்ட், மார்பை அகட்டி, முன்னுக்குத் தள்ளி வாயை அகலத்திறந்து, மண்ட பத்தின் மேற்கூரையை நோக்கி, வெகு உரத்த குர லில் கர்ஜித்தான்.

"வைவ்லா எம்பரர்"

ஜன சமுத்திரம் சும்மாவா யிருக்கும்? வானைக் கிழிக்கும் சத்தம் மேலே சென்றது.

"வைவ்லா எம்பரர் நெப்போலியன்"

# ஹைதர் ஆலி கண்ணீர்

உயர்ந்த ஆசனத்தில் நவாப் ஹைதர் ஆலி அமர்ந்திருந்தார். அவருக்கு இரு மருங்கிலும் கையில் குதிரைச் சவுக்குகளுடன் இருநூறு வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். வீரர்களுக்கு அருகில் பயத்தினால் கால்கள் நடுங்க, நவாபை விழித்த கண் விழித்தபடியே பார்த்துக்கொண்டு பத்துப் பதினைந்து மனிதர்கள் இருந்தார்கள். நவாபின்முன் உடலெல்லாம் ரத்தக்காயங்களுடன், "ஐயோ, ஐயோ," என்று அலறிக்கொண்டே தரையில் ஒருவர் உருண்டுகொண்டிருந்தார். அவரருகில் கையில் குதிரைச் சவுக்குடன், அரசனைப் பார்த்துக் கொண்டே ஒரு வீரனிருந்தான்.

தரையில் உருளும் அவன் யார்? அவன் செய்த குற்றம் என்ன?

நவாபுக்குச் சேரவேண்டிய பொதுஜனங்களின் வரிப்பணத்தைக் கையாடிவிட்டான் தக்கனஹள்ளி தாசில்தார், ராமப்பா. அதற்குத் தண்டனை இருநூறு கசையடிகள்.

தாட்சண்யமற்ற கண்களால் ராமப்பாவைப் பார்த்தார் நவாப்.

"ராமப்பா, என் மகனாயிருந்தாலும் சரி எவனாயிருந்தாலும் சரி. ஏற்கெனவே நடந்த யுத்தங்களுக்குத் தம் பொருளையெல்லாம் சந்தோஷத்துடன் அளித்துத் தியாகம் செய்த ஜனங்களின் பணத்தைக் கையாடிய உனக்கு இத் தண்டனை போதாது. நீ செய்த அக்கிரமத்திற்காக உன்னை உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட

லாம்; சிறையிலிடலாம்; மரண தண்டனை விதிக்க லாம். ஆனால், உன்போன்ற மற்றவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக நான் உன்னை இத்துடன் விட்டுவிடு கிறேன். இதற்காக உன்னை நான் வேறொன்றும் செய்யப் போவதில்லை. இன்னும் நீ தக்கனஹள்ளி தாசில்தார்தான். இனி ஜாக்கிரதையாயிரும்."

அச்சமயம் அங்கு சுமார் பதினைந்து வயது நிரம்பியிருந்த ஒரு சிறுவன் ஓடிவந்தான். தன் ராஜ் யத்திலிருந்த அநாதைச் சிறுவர்களை ஹைதர் தன் மக்கள்போல் அரண்மனையில் வளர்த்து வந்தார். அவர்களில் ஒருவன் தான் சித்தலிங்கன்.

"சித்தா, இங்கு எங்கே வந்தாய்?"

ராமப்பாவிடம் நெருப்பைக் கக்கிய அதே கண்கள் சித்தனைக் கனிந்த அன்புடன் நோக்கின.

"இல்லை, அப்பா. கொஞ்ச நாழிகைக்குமுன் சிலம்ப வித்தைப் பயிற்சியில் நான் திப்புவை வென்று விட்டேன். அதைச் சொல்லத்தான் வந்தேன்."

"சபாஷ். அந்தப் புலிக்குட்டியையே ஜயித்தாயா? பேஷ். ராத்திரி என் அந்தரங்க அறைக்கு வா. உனக்கு ஓர் இனாம் தரப்போகிறேன்."

பையன் திரும்பிப்போக ஓர் அடி எடுத்துவைத் தான். தரையில் கிடந்த ராமப்பாவைப் பார்த்து விட்டான்.

"ஓஹோ! இவரும் ஜனங்கள் காசைக் கொள்ளை யடித்தாரோ, நன்றாக வேண்டும்" என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு மறைந்தான்.

* * *

தன் கூடாரத்திற்கு வெளியே ராமப்பா நின்று கொண்டிருந்தான். கூண்டிலடைக்கப்பட்ட நரிபோல்

அவன் உலவினன். மறுபடியும் நின்றான். சித்தலிங்கன், சிறிது நேரத்திற்கு முன் சொன்ன வார்த்தைகளை அவனால் மறக்கமுடியவில்லை. அவன் கபட நெஞ்சம் சிறிது நேரம் யோசித்தது. "யார் வெளியே?"

இரு வீரர்கள் அவன் எதிரில் வந்து நின்றனர். நிதானமாக "சிறிது நேரத்திற்குமுன் நான் நவாபுடனிருந்தேனல்லவா? அப்போது, அங்கு ஓர் அநாதைப் பயல் வந்தானே. அவனை எப்படியாவது இங்கே கொண்டு வாருங்கள்."

கீழே "ஓ" வென்ற சத்தத்துடன் அலறிவிழும் நீர்வீழ்ச்சி; மலையின் பின்புறம் மறையும் மாலைச் சூரியனின் பொன் கிரணங்கள்; நிஷ்களங்கமான ஆகாயம்; இவைகளையெல்லாம் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே தனியாக நின்றான் சித்தலிங்கன். இயற்கை மனோகரக் காட்சிகளுக்குத் தன் மனதைப் பலியிட்டுவிட்டான்.

தன் பின்னால் சத்தமின்றி இருவர் வந்தது அவனுக்குத் தெரியாது. மாலைக் காட்சிகளில் மயங்கியிருந்த அவன், தன் இரு கைகளையும் இரண்டு முரட்டுக்கரங்கள் கெட்டியாகப் பிடித்தபின்தான் தன் சுய உணர்வைப் பெற்றான். அவன் வாயில் துணியடைக்கப்பட்டது; இடையில் செருகியிருந்த சிறு குத்துவாளும் நீர் வீழ்ச்சிக்குத் தத்தம் செய்யப்பட்டது.

* * *

நாலைந்து நாழிகை கழிந்தது.

அந்த நிர்மானுஷ்யமான பிரதேசத்தில் தன் கூடாரத்திற்கு வெளியே, ஒரு கட்டிலில் படுத்துக்

கொண்டிருந்தான் ராமப்பா. அடிகளால் வீங்கிய அவன் உடல் அவனுக்கு மிக்க வேதனையை உண்டாக்கிற்று. பனிகாலமாதலால் அவன் ஆட்கள் யாவரும் ஒரு பெரிய நெருப்புக் குழிக்கருகில் அமர்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தனர்.

"கொண்டுவா அந்த நாயை, இங்கே." சித்தன் அவன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

"டேய், சாயங்காலம் என்னைப் பார்த்து என்ன சொன்னாய்?"

சித்தன் அலட்சியமாய் நின்றான்.

நிதானமான குரலில், "ஏன்? விசேஷம் ஏதாகிலுமுண்டா? பொதுஜனத்தைக் கொள்ளையடித்ததுமன்றி, நவாபின் உப்பைத் தின்றுவிட்டு, அவருக்கே துரோகம் செய்தாய் என்று சொன்னேன். அதற்கென்ன இப்பொழுது? உடம்பு எவ்வாறிருக்கிறது?"

சித்தன் சிரித்தான்,

கோபத்தால் ராமப்பாவின் கண்கள் சிவந்தன; மீசைகள் துடித்தன.

"அடேய், என்னடா என்னைப் பரிகாசம் செய்கிறாய். அதே குதிரைச் சவுக்கால் உன்னையும்—"

மறுபடியும் சித்தன் சிரித்தான்.

"அடிபட்ட நாய் குரைக்கின்றது. உன் குதிரைச் சவுக்குக்கு இந்த சித்தன் பயப்பட மாட்டான்."

"வெளு இவனை."

அவ்வளவுதான். அடிமீது அடி சித்தன் உடலை வாட்டியது. ஆனால், அவன் வாயே திறக்கவில்லை, அதே அலட்சியச் சிரிப்புடன் ராமப்பாவைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

* * *

சிறு பையன்தானே. எவ்வளவு அடிகள்தான் அவனால் தாங்கமுடியும்? தாங்கமுடியாமல் 'தொப்' பென்று கீழே விழுந்தான். மறுபடியும் குதிரைச் சவுக்கால் ஐந்தாறு அடிகள். ஆனால், அப்பொழுதும் அவன் வாயிலிருந்து 'ஐயோ' என்ற வார்த்தைகூட வரவில்லை.

"கல்லுளி மங்கன், குறவன்" என்றான் ராமப்பா.

மனவலிமையைக் குறத்தனம் என்று நினைத்த இவன் எவ்வளவு விவேகி!

சிறிது நேரம் சென்றது. சிறுவன் மெதுவாக எழுந்தான். குதிரைச் சவுக்கின் குறிகள் அவனைக் கொன்ற போதிலும், நிமிர்ந்தே நின்றான்.

"டேய், அவனுக்கு இது போதும், நிறுத்து. இனிமேல், என்னைப் பொதுவான இடத்தில் வைத்து அடித்தானே நவாப், அவனைப் பழி வாங்கவேண்டும். ஏய், அவன் அந்தரங்க அறைக்கு இன்றிரவு உன்னை வரச்சொன்னானே. அந்த இரகசிய அறைக்கு எங்களை அழைத்துப்போ. நீ கேட்பதையெல்லாம் தருகிறேன்."

மறுபடியும் சித்தன் சிரித்தான்.

"என்ன சொன்னாய்? அந்தரங்க அறைக்கு என்னையா வழிகாட்டச் சொல்கிறாய். தூ! ராஜத்ரோகி." காறித் தரையில் உமிழ்ந்தான் சித்தன்.

"அதிகம் பேசாதே, நாயே! நாக்கைத் துண்டித்துவிடுவேன். வழி காட்டுகிறாயா, இல்லையா?

"தாசில்தார்! நான் அநாதைதான். இருந்தாலுமென்ன? நவாபின் உப்பைத் தின்ற நான் என் தலை போனாலும் அவருக்குத் துரோகம் செய்யமாட்டேன். அது உன்போன்ற கயவர்களின் செயல்."

ஒரு சிறிய குத்துவாள் சித்தனின் இடது புஜத்தில் பாய்ந்தது.

"வழிகாட்டுகின்றாயா இன்னும் வேண்டுமா?"

சாவதானமாக, "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்றான் சித்தன்.

ஏற்கெனவே குத்தப்பட்டு உதிரம் கரை புரண்டோடும் காயத்திற்குக் கீழே மறுபடியும் ஒரு குத்து.

"உப்பிட்ட வரை உள்ளளவும் நினை."

* * *

எவ்வளவோ சித்திரவதை செய்தும் சித்தன் அதற்கு அயரவில்லை. அடிக்கடி "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற வீரமுழக்கம்தான். இரும்பு நெஞ்சையுடைய சித்தனை அச் சிறிய இரும்புக் குத்துவாள் ஒன்றும் செய்ய இயலவில்லை. ராமப்பன் அலுத்துவிட்டான்.

ஆத்திரத்துடன், "இந்தப் புழுவை இந்த நெருப்புக்குழியில் போட்டால்தான் என்ன?" என்றான்.

சித்தன், ராமப்பன் பக்கம் திரும்பினான். உதிரப் பெருக்கால் அவன் சோர்ந்துதானிருந்தான். இருந்தாலும் தீரமான குரலில் பேச ஆரம்பித்தான்:

"ராமப்பா, இந்த அநாதைக்குச் சோறூட்டும் பொழுது நவாப் திடசித்தத்தையும் உடன் ஊட்டிவிட்டார். ஹைதர் நவாபின் உண்மை ஊழியன் எப்பேர்ப்பட்டவன் என்று காட்டுகிறேன் பார்."

நிமிர்ந்த தலையுடன் நெருப்புக்குழி அருகில் சென்றான். ராமப்பாவையும் அவன் ஆட்களையும் வெறுப்பாகப் பார்த்தான். கொழுந்துவிட்டெரியும் அந்தத் தீயின் நடுவில் தன் வலது கையை, முழங்கை வரையில் நீட்டினான்.

ஒரு நிமிஷமாயிற்று. இரு நிமிஷங்கள் ஆயின. ஐந்து நிமிஷங்கள் கழிந்தன.

நெருப்பிலிடப்பட்ட மாம்சத்தின் துர்கந்தம் காற்ருேடு கலந்து வீசியது.

நீட்டிய கை நீட்டிபடியேதான்.

'பட்' என்று எலும்பொன்று வெடித்தது.

முழங்கை என்ற உறுப்பு நெருப்புக்குழியில் மறைந்தது,

பையன் கையை வெளியே எடுத்தான். ராமப்பனை நோக்கினுன்,

அந்த வீர முகத்தில் அதே புன்முறுவல்! அதே அலட்சியப் பார்வை!!

"எப்படி வேடிக்கை! நவாப் சாஹிப் வளர்க்கும் அநாதை எப்பேர்ப்பட்டவன் என்று தெரிகிறதா? என்னுடன் இருக்கும் மற்ற அநாதைகள் என்னைக் கோழை என்பார்கள். இதிலிருந்து அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களென்பது உனக்கு விளங்கும்."

* * *

மறுநாள் காலையில் உதய சூரியனைப் பார்த்துக் கொண்டே அரண்மனைக் கருகிலுள்ள பசும் புற்றரையில் சித்தனின் உயிரற்ற உடல் கிடந்தது.

சாவிலும் ஒரு சோபை. அப்புன்முறுவலுடன் அவ்வுயிரற்ற முகம் வானவெளியை நோக்கிக்கொண்டிருந்தது.

சிலம்பச் சண்டையில் திப்புவை அவன் ஜயித்ததற்காகப் பரிசாகப்பெற்ற வீரவாளுடன்தான் சித்தன் அடக்கம் செய்யப்பட்டான்.

நவாப் ஹைதரின் 'கருணையற்ற கண்கள்' அவ்வநாதைச் சிறுவனுக்காக இருமுத்துக்களை உதிர்த்தன

# பெண் உள்ளம்

அமிர்தத்தின் கணவன் இறந்து ஒரு வருடம் சென்றது. நான் என் கணவன் வீட்டிற்குச் சென்று விட்டேன். பெற்ருேரையும் இழந்து புருஷனையும் பறிகொடுத்த அமிர்தம் தன் வாழ்நாளை அவள் சகோதரனிடமே கழிக்க வேண்டியிருந்தது.

போனவாரம் அவளிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. பக்கம் பக்கமாய் அவள் எழுதியிருந்த விஷயங்கள் என்னை எங்கெங்கேயோ சுமந்து சென்றன.

அவள் எழுதிய கடிதத்தை அப்படியே தருகிறேன்:

அன்புள்ள ஞானம்,

இந்தக் கடிதத்திற்கு தபால் - தலை வாங்கக் கூட என்னிடம் காசு கிடையாது. அதனுல்தான் தபால் - தலை ஒட்டாமல் இக் கடிதத்தை உனக்கு அனுப்புகிறேன். உன்னிடம் கடிதம் சேர்ந்துவிடும் என்ற நம்பிக்கையுடன்தான் இதையெல்லாம் எழுதுகிறேன்.

இங்கு சில தினங்களுக்குமுன் நடந்த ஒரு சம்பவம்தான் என்னை இதெல்லாம் எழுதத் தூண்டுகிறது. எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது.

தமையன் மனைவியிடம் படும் கஷ்டங்களைச் சகிக்க முடியவில்லை. என்னை ஒவ்வொரு நாளும்

ஆலைக் கரும்பாய்ப் பிழிந்து விடுகிறாள். எல்லா வற்றையும் பொறுத்துக் கொள்வோமென்றாலும், இந்தத் துலாமாத காவேரி ஸ்நானம்தான் என் உடலையும் உயிரையும் வாட்டுகிறது. காலை நாலு மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டும். உடனே நதிக்குச் செல்லவேண்டும். ஸ்நான தானங்களை முடித்துக்கொண்டு ஐந்தரை மணிக்குள் திரும்ப வேண்டும். நான் ஈரப்புடவையுடன் குளிரால் கஷ்டப்படுவது என் சகோதரனுக்கும் அவன் மனைவிக்கும் தெரிவதேயில்லை. ஆற்றிலிருந்து நான் திரும்பிவந்து வெகு நேரம் கழித்து எழுந்திருக்கிறார்கள்; உடனே இருவரும் காப்பி அடுப்பண்டை குளிர் காய ஆரம்பித்துவிடுகிறார்கள்.

* * *

அன்று நான் ஆற்றிலிருந்து திரும்பிவர சிறிது நேரமாகிவிட்டது. எங்கள் வீட்டிற்கு முன்புறம் தெருவில் ஒரு பிச்சைக்காரச் சிறுவன் நின்றுகொண்டிருந்தான். வாசல் பக்கம் ஒருவருமில்லை. நான் வீட்டின் முதற்படியில் காலை வைத்ததும் "அம்மா! ரெண்டு பிச்சையம்மா! வீட்டிலே என் தாய்க்கு உடம்பு நல்லாயில்லை, அம்மா! பிச்சை போடுங்க" என்று கெஞ்ச ஆரம்பித்தான்.

அவனுடைய தோற்றம் பரிதாபகரமாயிருந்தது. "இரு, இதோ வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வீட்டினுள்ளே போனேன். ஒரு பிடி அரிசி கொண்டு வந்து அவன் கந்தைத் துணியில் போட்டேன்.

அச் சமயம் அவனைப்போலவே கந்தைத் துணியும் பரிதாபகரமான தோற்றமும்கொண்ட ஒரு சிறுமி ஓடிவந்தாள். சிறுவனிடம் அவசரம்

அவசரமாக ஏதோ ஒரு முக்கிய விஷயத்தைத் தெரிவித்தாள்.

சிறுவன் திடுக்கிட்டான்; கலங்கினுன், அவன் கண்களில் நீர் துளிர்த்தது. அவசரமாகத் திரும்பி ஓடினுன். பாவம்; ஒரு கல் தடுக்கத் தடாரென்று தெருவில் விழுந்துவிட்டான். அரிசியெல்லாம் சிந்தியது; சிதறிற்று. அதைத் திரட்டிக்கூட எடுத்துக் கொள்ளவில்லை, ஓடிவிட்டான்.

பிச்சைக்காரச் சிறுவன் கீழே விழுந்த காட்சியை என் சகோதரன் என் பின்னுல் பார்த்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தான் போலிருக்கிறது.

" இந்த சோம்பேறிப் பயல்களுக்கெல்லாம் இரங்கவே கூடாது. என்ன திமிர் பார்த்தாயா ? அரிசியைக் கொட்டிவிட்டு ஓடுகிறுன் " என்ருன். நான் பதிலே சொல்லவில்லை.

* *

மறுநாள் காலையிலும் பிச்சைக்காரச் சிறுவன் வந்தான். அவனைக் கண்டதும் என் தமையனுக்கு ஆத்திரமூண்டது. "வாடா பிரபு, நேற்று எவ்வளவு திமிராய் அரிசியை விட்டெறிந்துவிட்டு ஓடினுய். பிச்சை கிடையாது போடா."

சிறுவன் கைகூப்பி என் சகோதரனுக்கு நமஸ்காரம் செய்தான். "சாமி! எங்க அம்மாவுக்கு உடம்பு சரியாயில்லைன்னு என் தங்கச்சி வந்து சொல்லிச்சு. அதுக்காகத்தான் ஓடினேன். பிச்சை போடுங்க சாமி." பையன் கெஞ்சினுன்; பிரயோசனமில்லை. என் சகோதரன் அவனை வெருட்டினுன். நானும் ஒன்றும் செய்ய இயலாது சும்மா நின்றேன்.

எதிர்த்தாற்போலுள்ள டாக்டர் வீட்டுக்குச்

சென்று பிச்சை கேட்டான். திண்ணையில் நின்று கொண்டிருந்த டாக்டர், "கம்பவுண்டர்! இந்தப் பிரபு தாயாருக்கு உடம்பு சரியாயில்லையாம். 'மூன்று டோஸ் மிக்ஸ்சர்' கொடுத்தனுப்புங்கள்" என்று ஏளனமாகச் சொல்லிவிட்டு, 'போடா, போ நாயே!" என்று திட்டி அனுப்பிவிட்டார். சிறுவன் பேசாது சென்றான். அவன் பார்வையில் திகில் நிறைந்திருந்தது.

இது நடந்த மறுநாள் காலை நான் எழுந்திருக்கச் சிறிது நேரமாகிவிட்டது. காலை ஆறுமணி இருக்கும். வேகம் வேகமாக நதியை நோக்கி நடந்துகொண்டிருந்தேன்.

தெருவின் ஓரத்தில் ஒரு தடித்த முரட்டு ஸ்திரீ இடியாப்பம், தோசை, பிட்டு முதலியவைகளை விற்றுக் கொண்டிருப்பாள். அவள் கடைப் பக்கம் அன்று என் கண்கள் திரும்பின. என்ன அக்கிரமம்!

எங்கள் வீட்டுக்குத் தினம் பிச்சை கேட்க வரும் சிறுவனின் கரத்தை அவள் தன் இடது கையால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தாள். வலது கையில் ஒரு கொள்ளிக்கட்டை. ஏழைச் சிறுவனின் கையிலும் உடலிலும் ஐந்தாறு இடங்களில் 'விறு விறு' என்று சூடு போட்டுவிட்டாள். சிறுவன் கதறினான். அவளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஓடினான்.

பத்துப் பதினைந்து கஜதூரம்தான் அவனால் ஓட முடிந்தது. வீதியின் ஓரத்தில் சரளைக் கற்களைக் கொட்டியிருந்தனர். கற்குவியலருகில் சென்று உட்கார்ந்து கொண்டான். சூடு போட்ட இடங்கள் கன்னிவிட்டன. நெருப்புக் கொப்புளங்களைப் பார்த்

துப் பார்த்து அழுதான்; வாயால் உடலையும் வலது கையையும் அடிக்கடி ஊதினான்.

அவனருகில் சென்று நின்றேன். அவன் என்னைப் பார்க்கவில்லை.

"டேய் பையா! ஏனடா அந்த ஸ்திரீ உன்னைச் சுட்டாள்?" என்றேன்.

தலையைத் தூக்கி என்னைப் பார்த்தான். என்னைப் பார்த்ததும் அவன் அழுகையும் ஆத்திரமும் அதிகமாயின. 'கோ'வென்று கதறினான். கடைசியில் விசும்பிக்கொண்டே, "இதற்குத் தான் அம்மா" என்றான்.

அதுவரையில் கெட்டியாக விரல்களால் மூடிக் கொண்டிருந்த தன் இடது கையைத் திறந்தான். அதில் என்ன இருந்ததென்று நினைக்கிறாய்? ஒரு சிறிய ஆப்பம் இருந்தது.

"அதைத் திருடினாயா?" என்றேன்.

"ஆமாம், அம்மா."

"திருடுவது மகா தப்பிதம் அல்லவா?"

"தப்புதான் அம்மா. என் தாயாருக்கு ரொம்ப ஜூரம் அடிக்குது. காச்சலடிக்கிறபோது தண்ணி சோறு திங்கக்கூடாது. கையிலே காசே இல்லை. சுடுசோறு யாரம்மா போடுவாங்க? எங்க அம்மாவுக் காகத்தான் திருடினேன்." மறுபடியும் கதற ஆரம் பித்தான்.

மெதுவாக எழுந்தான். அந்த ஆப்பத்துண்டை விடவேயில்லை. நடந்தான். என் கால்கள் அவன் பின்னாலேயே சென்றன.

* * *

அவன் 'வீடு' ஒரு பெரிய ஆலமரத்தடிதான்

ஒரு சட்டி, இரண்டு மூன்று தகரக் குவளைகள், ஒரு சிறிய கந்தைத்துணி மூட்டை, இவைகள் தாம் அவன் சொத்து.

ஒரு கந்தைத் துணியை விரித்து அதன்மேல் ஒரு பெண் படுத்திருந்தாள். தேகம் துரும்பா யிளைத் திருந்தது. கிணற்றினுள் இரு கண்கள், தலை மயிர் எண்ணெய்ப் பசையையே கண்டிராது போலிருக் கிறது.

அதிகாலை நதி ஸ்நானத்தை வெறுத்த நான் அந்தப் பேதையை ஒரு மறைவான இடத்தில் நின்று கவனித்தேன். மழை, குளிர், காற்று இவைகளுக்கு பயப்படாமல் எவ்வாறுதான் அவள் படுத்திருந் தாளோ தெரியவில்லை.

முனகிக்கொண்டே படுத்திருந்தாள். பிச்சைக் காரச் சிறுவன் அவளருகில் அழுதுகொண்டே சென் றான். அவர்கள் சம்பாஷணை இன்னும் என் காது களில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

"ஏண்டா, அழறே? உடம்பெல்லாம் என்னடா, ஐயோ!"

சிறுவன் அழுதுகொண்டே ஆப்பக் கடையில் நடந்த விஷயங்களைச் சொன்னான். 'எரியுதே' என்று மறுபடியும் கதறினான்.

கவலைக்கிடமான நிலையிலிருந்த அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சல்லவா? சிறுவன் உடல் முழுவதையும் தட வித் தடவிப் பார்த்தாள். அவளும் அலறினாள்.

தான் உடுத்தியிருந்த கந்தைத் துணியைக் கிழித்துக் குவளையிலிருந்த தண்ணீரில் நனைத் தாள். சூடுபட்ட இடங்களை அந்த ஈரத்துணியால்

துடைத்தாள். அதுதான் அவளுக்கு 'ஜாம்பெக்'. அவளுக்குத் தெரிந்த வைத்தியம் அவ்வளவுதான். அதற்குமேல் அவளால் ஒன்றும் செய்ய இயலவில்லை. மறுபடியும் சோர்ந்து விழுந்துவிட்டாள்.

அவளுடைய நிலையைக் கண்டு என் நெஞ்சம் துடித்தது. மேலும் என்ன நடக்கிறதென்று கவனித்தேன்.

தன் கையிலிருந்த ஆப்பத்தைச் சிறு துண்டுகளாக விண்டு தன் தாயின் வாயில் செலுத்தினான் சிறுவன். பையனுக்குத் தாய்மீது எவ்வளவு வாஞ்சை!

அச்சமயம் எங்கோ வெளியே போயிருந்த அவன் தங்கை வந்துவிட்டாள். தனக்கும் ஒரு ஆப்பம் வேண்டுமென்று அழுதாள்.

ஆப்பம் முழுவதையும் தாயே தின்றுவிட வேண்டுமென்று செல்வச் சிறுவனுக்கு ஆசை. அடுத்தாற்போல் தங்கையைத் திருப்தி செய்யவேண்டுமென்ற கவலை. தத்தளித்தான்.

* * *

அதற்குமேல் என்னால் பொறுக்கவே முடியவில்லை. தாம்பூலம், பழம், தட்சிணை ஆகியவைகளுக்காக என் சகோதரன் தினம் இரண்டணா கொடுப்பான். பிச்சைக்காரச் சிறுமியினருகில் சென்றேன். அவள் தாயும் சகோதரனும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தனர். என்னிடமிருந்த இரண்டணாவை அச் சிறுமியிடம் கொடுத்து, "பாப்பா! போய் ஆப்பம் தின்றுவிட்டு உன் அண்ணனுக்கும் வாங்கி வா" என்றேன்.

அச் சிறு பெண்ணுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. கூவிக்கொண்டே ஓடிவிட்டாள்.

சிறுவன் திகைப்புடன் என்னை நோக்கினுன். ஈனஸ்வரத்தில், "அம்மா ! நீங்க நல்லாயிருக்கணும்" என்ற மனப்பூர்வமான ஆசீர்வாதங்கள் அவன் தாயின் வாயிலிருந்து உதிர்ந்தன.

மெதுவாக அவளுடைய சரித்திரத்தை விசாரித்தேன். அவள் கணவனிறந்து ஒரு வருடமாகிவிட்டதாம். பதினைந்து நாளாய் ஓயாத ஜுரமாம்.

சிறிது நேரம் அவளிடம் பேசிவிட்டு ஆற்றங்கரையை நோக்கி நடந்தேன்.

தினம் என் தமையன் கொடுக்கும் இரண்டணுவை அவ்வேழைச் சிறுவனிடமே கொடுத்து வந்தேன். தாம்பூலமும் பழமும் வாங்கிக் கண்டவர்களுக்கு அளிப்பதை விடுத்து, இவ்வேழைச் சிறுவன் குடும்பத்திற்குக் காசைக் கொடுப்பதில் எனக்கும் பரம திருப்தியாய்த்தா னிருந்தது.

ஐந்து தினங்களாயின. துலா மாதமும் முடிந்து விட்டது. இனி நான் ஆற்றுக்குப் போக முடியாது.

அன்று காலையில் வீட்டு வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்தேன். பிச்சைக்காரச் சிறுவனும் இளைத்த அவன் தாயாரும் என் வீட்டண்டை வந்தார்கள். அவர்களை என் சகோதரன் பார்த்து விட்டான்.

"என்னடா ! 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ் !' மகாராணி யார்டா ?" என்ருன்.

சிறுவன் என் சகோதரன் பக்கம் திரும்பவேயில்லை. அப்பெண் என்னை நோக்கி, "அம்மா ! நீங்கள் தெனம் ரெண்டணு கொடுக்காட்டி நான் இத்தனை நாட்களுக்குள் செத்துப்போயிருப்பேன்" என்ருள்.

குடி முழுகிவிட்டது. என் சகோதரன் அவளிட மிருந்து விஷயங்களைக் கிரகித்துக்கொண்டான். என்னை நோக்கினன். "அடி நாயே! சாஸ்திரிகளுக்கும், பழம் தாம்பூலத்திற்கும் செலவிடவேண்டிய காசை இப்படியா செலவழித்தாய்? உனக்கு அவ்வளவு நெஞ்சுத் துணிவா?" என்று கத்தினன். அவன் மனைவியும் அவனுடன் சேர்ந்துகொண்டாள். என் சகோதரனின் கடூர வார்த்தைகளைச் சகியாதவர் போல் பிச்சைக்காரச் சிறுவனும் அவன் தாயும் மெதுவாக நழுவி விட்டனர்.

* * *

என் சகோதரன் வார்த்தைகளை நான் சட்டை செய்யவேயில்லை. என் மனதிற்கு எது சரியென்று தோன்றியதோ, எது மனித வர்க்கத்தின் முக்கிய கடமையோ, அதைச் செய்து முடித்ததாகவே நினைத்துச் சந்தோஷப்பட்டேன்.

அன்று காலையில் வீட்டு முன்புறம் நின்றிருந்தேன். சகோதரன் மார்க்கெட்டுக்குப் போயிருந்தான். அவன் மனைவி அடுப்பங்கரையிலிருந்தாள். பிச்சைக்காரச் சிறுவன் மறுபடியும் என் முன் நின்ருன். அவனைப் பார்த்து ஆறு நாட்களாகிவிட்டன.

"என்னடா?" என்றேன்.

"மறுபடியும் எங்க அம்மா கீழே படுத்திடுச்சி. ரொம்ப ஜொரம் அடிக்குது. நான் என்ன பண்ணுவேன்?"

நானும்தான் என்ன பண்ணுவது? இனி என்னை நம்பி என் சகோதரன் என்னிடம் ஒரு தம்பிடிகூடக் கொடுக்கமாட்டான். என்னிடம் ஒரு காலணுகூடக் கிடையாது. கடனும் ஒருவரும்

கொடுக்கமாட்டார்கள் ; திருடுவோ மென்றாலும் எங்கு சென்று திருடுவது ?

பிரமாதமாக 'ஸோஷலிஸம்' பேசுகிறார்கள் தொழிலாளிகளின் குறைகளைப்பற்றி ராமாயணம் படிக்கிறார்கள் ; ஏழைகளுக்காக நீலிக்கண்ணீர் விடு கிறார்கள். இந்த ஏழைச் சிறுவனுக்கு உதவி செய்ய யாரும் இல்லையே !

என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. கடைசியாகச் சிறுவனை நோக்கி, "நாளைக்குக் காலை யிலே வா. காசு தருகிறேன்" என்றேன். அவன் ஆனந்தத்துடன் ஓடிவிட்டான்.

இரண்டு மூன்று தினங்கள் காலை வேளைகளில் வந்தான். ஒவ்வொரு தினமும் "நாளைக்கு வா" "நாளைக்கு வா" என்று சொல்லி அனுப்பினேன். என்னிடம் காசில்லையே! வேறு நான் என்ன செய்வது?

இந்த இரு தினங்களாகச் சிறுவன் வரவில்லை. தினமும் ஏமாற்றிக்கொண்டேயிருந்தால் அவனுக் குக் கோபம் வராமல் என்ன செய்யும் ?

இன்று அமாவாசையல்லவா ? காலையில் ஆற் றுக்குச் சென்றேன். தெருவின் ஓரத்தில் சிறுவன் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். என்னைக் கண் டதும் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான். அவனைக் கூப்பிட்டு,

"உங்கள் அம்மாவுக்கு உடம்பு எவ்வாறிருக் கிறது ?" என்றேன்.

அவ்வளவுதான். கதற ஆரம்பித்துவிட்டான்.

"நீங்கதான் காசு தரல்லியே. ஜொரத்திலே பட்டினி கிடந்து முந்தாநாள் மத்தியானம் செத்துப் போயிடுச்சு."

"என்ன? செத்துவிட்டாளா? பிறகு?"

"'அப்புறம் என்ன? முனிசிபாலிட்டிகாரங்க பொதைச்சுப்புட்டாங்க. நீங்க காசு கொடுத் திருந்தா, எங்கம்மா உயிரோடு இருக்கும்."

* * *

ஞானம், நான்தானு அப் பிச்சைக்காரி இறந்த தற்குக் காரணம்? 'ஆம்' என்றே என் நெஞ்சம் கூக் குரலிடுகிறது. என்னைவிட துர்ப்பாக்கியம் செய்த அவள் சாவுக்குக் காரணம் நான்தான். இன்னதென விவரிக்க இயலாது நான் தத்தளிக்கிறேன். அவளை யும் அவள் மகனையும் என்னல் மறக்கவே முடிய வில்லை. நான் என்னென்னவோ பேசிக்கொள்கிறேன். பேசிக்கொண்டே நடக்கிறேன். வீட்டு வேலைகளைச் செய்கிறேன். பிறகு நானே வாய்விட்டுப் பேசுவதை உணர்ந்து நிறுத்திக்கொள்கிறேன். உன்னுடைய இளமைப் பருவத்தில், இந்தப் பித்துப் பிடித்தவளின் நட்பை ஏனடி ஏற்படுத்திக்கொண்டாய்?

பித்துப்பிடித்த ஒருத்தி எனக்குக் கடிதம் எழுதி யிருக்கிருள் என்று நீ முணுமுணுப்பது என் காதில் கேட்கிறது.

உன் துர்ப்பாக்கிய

அமிர்தம்.

இக் கடிதம் வந்த ஒரு வாரத்திற்குப்பின் நான் என் தாய் வீட்டிற்குப் போனேன். ரயிலில் போகும் பொழுதெல்லாம் என் ஞாபகம் அமிர்தத்தின் கடி தத்தைப்பற்றியேதான். ஊர் போய்ச் சேர்ந்ததும் அமிர்தத்தின் வீட்டுக்கு ஓடினேன். ஐயோ! நான் அங்கு கண்ட காட்சியை என்ன என்று சொல்வது?

படுக்கையோடு படுக்கையாய்க் கிடந்தாள் அமிர்தம். கண்களை உருட்டி உருட்டி எங்கேயோ பார்த்தாள். "ஐயோ, அவனைச் சூடு போடாதே" என்று யாரையோ பார்த்துக் கெஞ்சுவாள். "என்ன? நானு உன் தாயாரைக் கொன்றேன்?" என்று ஆச்சரியப் படுவாள். உடனே அழுவாள். அவ்வளவும் ஜன்னி யின் சேஷ்டைகள்.

இந்த ஒரு வாரமாக இதே பல்லவிதான். நேற்றுக் காலை ஆறு மணியிருக்கும். நான் அவள் அருகிலேயே யிருந்தேன். கண்களை அகலத் திறந்தாள். "பையா! உங்கள் அம்மாளைப் புதைத்தாவிட்டார்கள்?" என்று உரத்த குரலில் கத்தினள் சுவரைப் பார்த்து.

அடுத்த விநாடி உயிர் போய்விட்டது.

அந்த "மொட்டைச்சி"யின் உடலைக் குட்டைச் சமூகம் கொளுத்திவிட்டது.

அவள் இறந்ததற்குக் காரணம் கணவனிறந்த துக்கமா? அன்றித் தன் தலையை அவள் இஷ்டத்திற்கு விரோதமாகச் சிரைத்தார்களே அதுவா; அல்லது துலாஸ்நான மகாத்மியமா? இல்லாவிடில் ஏழைச் சிறுவன் தாயின் மரணமா?

எதுவென்று எனக்குத் தெரியவில்லை. கடவுளுக்குத்தான் தெரியும்!

## கான் ஷரீப்

காளைப் பருவம். வாலிப முறுக்கு. முகத்தில் அப்பொழுதுதான் மீசை அரும்பு விட்டுக்கொண்டிருந்தது. இடது கையால் அந்த மீசையை முறுக்கி மேலேயேற்றினான் கான் ஷரீப். தீங்கற்ற அவன் கண்கள் எதிரிலிருந்த உசேன் ஆலியை அலட்சியமாய் நோக்கின.

உசேன் ஆலியும் வாலிபன்தான். கபடம் நிறைந்த கண்களை உருட்டி உருட்டி கான் ஷரீபைப் பார்த்தான். கைகளைப் பிசைந்தான். மனதோ, "அடே, கான்! அற்பப் புழுவை நசுக்குவதுபோல் நான் உன்னை நசுக்குகின்றேனா இல்லையா பார்" என்று சொல்லிக்கொண்டது.

இருவருக்கும் வெகுநாளைய மனஸ்தாபம். அச்சில் வார்த்த பதுமைகள்போல ஒருவரையொருவர் விழித்த கண் விழித்தபடியே பார்த்துக்கொண்டு நின்றனர்.

அச்சமயம் அங்கு வந்த பெரிய மனிதர் உசேன் ஆலியின் முதுகில் தட்டினார்.

"தம்பி, குலாம் ஷரீபின் வீடு எது?"

உசேன் பதிலே சொல்லவில்லை. கான் ஷரீபோ, புதிதாக வந்தவரின் அருகில் வந்தான்.

"எந்த குலாம் ஷரீபைத் தேடுகிறீர்கள்?"

"அக்பர் பாதுஷாவிடம் போர்வீரனாக—"

"நான்தான் அவர் மகன். என் தந்தை வெகு

நாட்களுக்கு முன்பே யுத்தகளத்திலிறந்துவிட்டாரே."

"தெரியும். சித்தூர் முற்றுகையின்போது அவர் மரணமடைந்தது எனக்குத் தெரியும். உன்னைத் தான், தம்பி, நான் பார்க்க வந்தேன். பாதுஷா அக்பர் இக் கடிதத்தை உன்னிடம் சேர்ப்பிக்க உத்தரவிட்டார். இந்தா காகிதம்."

இருவரும் பேசிக்கொண்டதை உசேன் ஆலி கேட்டுக்கொண்டேயிருந்தான். அவன் 'நரி நெஞ்சம்' சஞ்சலப்பட்டது. "மன்னன் அக்பரிடமிருந்து கடிதம் என்றால், அதில் கண்டிப்பாய் ஏதேனும் விசேஷமிருக்கவேண்டும். கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறதென்பதை நான் எப்படியும் அறியவேண்டும்."

* * *

மன்னுதி மன்னனிடமிருந்து கடிதம் என்றால் எவ்வளவு கௌரவம்! கான் ஷரீபுக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. கடிதத்தைப் படித்துக்கொண்டே தன் வீட்டை நோக்கி ஓடினான். உசேனும் அவனுக்குத் தெரியாமல், பின் தொடர்ந்தான்.

சிறு வீடு. வெகு காலத்திற்குமுன் வேய்ந்த கூரை. வீட்டினுள்ளே சதைப்பற்றின்றி, நரம்பும் தோலும், எலும்புக்கூடுமாய் ஒரு கிழவி ஒரு ராட்டினத்தில் நூற்றுக்கொண்டிருந்தாள். பரிதாபகரமான தோற்றம். பாதாளத்தில் இரு கண்கள். பார்வைகூடச் சரியாக இல்லை. கணவனை யுத்தப் பேய்க்குப் பலிகொடுத்த அவள் இன்னும் ஏன் இப்பாழுலகில் உயிருடனிருக்கவேண்டும்?

மரணத்தை வரவேற்க அவள் தயார்தான். ஆனால், தன் ஒரே புதல்வன், தன் ஆருயிர்க் கான் மீதுள்ள ஆசை வெள்ளம்தான் அவளை இன்னும் உயிருடன் வைத்திருக்கின்றது. கான் ஷரீபைக் காணும்போதெல்லாம் அவள் உள்ளம் அன்பால் துடிக்கும்; கான் வீட்டிலில்லாத சமயமெல்லாம் ஆசையும் மனமும் துடிக்கும்.

"அம்மா, அம்மா" என்று கத்திக்கொண்டே உள்ளே நுழைந்தான் கான்.

அவன் வாயிலிருந்து இனி வருவனவற்றைக் கேட்க, உசேன் ஆலியின் காதுகள் வெளியே தயாரா யிருந்தன.

'ஏன் கான்! என்ன அது?'

கையிலிருந்த கடிதத்தால் தாயின் முகத்தை ஐந்தாறு தடவை விசிறினான்.

"இக்கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறது, தெரியுமா? அக்பர் பாதுஷாவிடமிருந்து."

தாயைச் சுற்றிச்சுற்றி நர்த்தனம் புரிந்தான். குதித்தான். விளையாட்டுப் பிள்ளை!

"என்ன கடிதம்? படி."

"வீரசுவர்க்கம் புகுந்த நம் அருமை குலாம் ஷரீபின் குமாரன் கான் ஷரீபுக்கு, அபுல்பாத் ஜலாலுதீன் முகமது அக்பர் பாதுஷா காஸி எழுதிக்கொண்டது:

மகனே, நம் இளைய சகோதரனும் காபூல் அரசனுமான முகமது ஹகீம் மிர்ஸா, ஆண்டவனால் நமக்கு அருளப்பட்ட ராஜ்யத்தை அபகரிக்கக் கருதி உன் பிரதேசமாகிய பஞ்சாபுக்குப் படைகளுடன் வந்து தங்கியிருக்கும் விஷயம் உனக்குத் தெரியாத

தல்ல. பஞ்சாபிலுள்ள அநேக செல்வவந்தர்கள் நம் தம்பிக்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றார்கள் என்பது வெளிப்படையான ரகசியம். அவர்கள் எல்லோருடைய நடவடிக்கைகளையும் கவனித்து நமக்கு அவ்வப்போது தகவல் கொடுக்கக்கூடியவர்கள் பஞ்சாபில் ஒருவருமில்லை. ஒருவரையும் நாம் தற்போது நம்ப முடியவில்லை. உன்னையும் உன் அன்னையையும் தான் நம்புகின்றோம். எல்லா விஷயங்களையும் தெரிந்து அடிக்கடி நீதான் நமக்குச் செய்தி அனுப்ப வேண்டும். உன் தந்தையை எவ்வாறு நாம் நம்பினோமோ அதேபோல் உன்னையும் நம்புகிறோம்."

கடிதத்தின் கடைசி வாக்கியத்தைக் கிழவி கவனிக்கவேயில்லை. பழைய காலத்திய அச்சம்பவம் அவள் நினைவுக்கு வந்தது.

மீவார் கோட்டை முற்றுகை வெகு மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. அக்பர் பாதுஷாவும் முன்னணியில் நின்று போர்புரிந்து கொண்டிருந்தார். அவர் அருகில் குலாம் ஷரீபும் இருந்தான். தன் கையாலேயே ரஜபுத்ர தலைவனை ஜெய்மாலை அக்பர் சுட்டுத் தள்ளினார். இதைப் பார்த்தான் குலாம் ஷரீப். 'அச்சா! பாதுஷா' என்று கத்தினான். உடனே திடுக்கிட்டான். ஜெய்மால் மடிந்ததைக் கண்டு கோபம்கொண்ட ரஜபுத்ர வீரனொருவன் அக்பர் மார்புக்குத் தன் துப்பாக்கியைக் குறிவைப்பதைப் பார்த்துவிட்டான். இன்னும் அரைக்கால் விநாடி தாமதித்தால் அக்பர் உயிரற்றுத் தரையில் விழுந்திருப்பார். பாதுஷாவின் உடலைத் தன் உடலால் மறைத்தான். மன்னனைக் கொள்ளைகொண்டு

போகவேண்டிய குண்டு குலாம் ஷரீபின் உயிரைக் குடித்தது. அவன் உடல் தரையில் சாய்ந்தது.

உயிரைக் கொடுத்துத் தன்னைக் காப்பாற்றிய உத்தமனை அக்பரால் மறக்க முடியவில்லை. போர் வீரர்களுடன் அவர் மனைவியரும் தொடர்ந்து வந்து, யுத்த களத்திற்கு ஐந்தாறு மைல்களுக்கப்பால் கூடாரங்களில் தங்குவது அக்காலத்திய வழக்கம். சித்தூர் தன் வசமானவுடன் பாதுஷா நேராகத் தானே குலாம் ஷரீபின் மனைவி தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார். தன்னுடன் தலைநகருக்கு வந்து தங்கும்படி அவளை வேண்டிக்கொண்டார்; ஏராளமான பொருளையும் தருவதாக வாக்களித்தார். அதற்கு அவள் இசையவில்லை. மரியாதையாக மறுத்துவிட்டாள்.

மன்னன் எவ்வளவோ சொல்லியும் பிரயோசனமில்லை. அப்பொழுது எட்டு வயது நிரம்பியிருந்த தன் மகனுடன் பஞ்சாப்பிற்குச் சென்று விட்டாள்.

கணவன் மாண்ட துயரத்தால் உடல் தேய்ந்து தேய்ந்து அரைக்கால் ஆகிவிட்டது; உயிர்தான் ஒட்டிக் கொண்டிருந்தது; அதுவும் சுமந்து பெற்ற மகனுக்காகவே.

* * *

கான் ஷரீப் அவள் யோசனைகளைக் கெடுத்தான்.

"என்ன அம்மா, யோசிக்கிறாய்?"

அந்தக் கேள்விக்கு அவள் பதிலே சொல்லவில்லை. போர்வீரன் என்பவன் யார்? இக்கேள்விக்கு விடையையே அவள் யோசித்துக்கொண்டிருந்தாள்.

உடல், பொருள், ஆவியைத் தேசத்திற்குத்

தானம் செய்தவர் அரச சேவகர் நாட்டின் ஊழி யர் என்று அவள் நினைக்கவேயில்லை. போர்வீரன் என்றால் ‘ தன் வாழ்நாள்மீது கோபம் கொண்டவன் ’ என்ற முடிவுக்குத்தான் வந்தாள். மெதுவாக ஆசை மகனைப் பார்த்தாள்.

“ கான், உனக்கு வாழ்க்கையின்மீது வெறுப்புத் தட்டிவிட்டதா ?”

“ இல்லையம்மா. ஏன் இந்தக் கேள்வி ?”

“ உன் வாழ்நாள்மீது உனக்கு விருப்பமிருக்கு மாயின், அரச சேவை வேண்டாம். யுத்தம் என்றாலே என் தேகம் நடுங்குகிறது. நீயும் உன் தந்தை போல் மரணமடைந்து விட்டால் நான் என்ன செய் வேன் ? மகனே நமக்கு அரச சேவையும் வேண்டாம்; வீர சுவர்க்கமும் வேண்டாம்.”

“ கான், அக்பர் பாதுஷா உன்னை வேவு பார்க்கச் சொல்கிறார். வேண்டாம், வேண்டாம் ” என்று பயந்து நடுங்கிய குரலில் கதறினாள். ஆசை மகனை அரை நாழிகைகூடப் பிரிவதென்றால் அவ்வளவு பயம் !

“ எனக்கு நெடுநாளாகப் பாதுஷாவின் கீழ் ஊழியம் செய்ய ஆசை, அம்மா. அவரிட்ட இம் முதற் கட்டளையை நிறைவேற்றி விட்டேனேயாகில், பிறகு ஸுபேதார், மான் ஸுபேதார் ஆகிவிடுவேன். கடைசியாக ஜாகீர்தாருமாகி விடுவேன். ஜாகீர் தார் கான் ஷரீப் அவர்களின் அன்னை என்றால் உனக்கு எவ்வளவு பெருமை ! சரி, நான் வெளியேபோய் வரு கிறேன். மன்னரிடமிருந்து வந்த இந்தக் கடிதத்தை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்.”

பேதைத் தாய் எவ்வளவோ கதறியும் கேளாது

"விஷயங்களைத்தெரிந்து கொள்ள" வெளியே சென்றான் கான்.

குடிசைக்கு வெளிப்புறம், கான் கூறிய அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த உசேன் ஆலியும் கான் பின்னாலேயே தொடர்ந்தான்.

*    *    *

அப்பெரிய மாளிகையி னுட்புறத்தில் பத்துப் பதினைந்து பேர்வழிகள் அமர்ந்திருந்தனர். அவர்களுடைய முகங்கள் கோபத்தால் கொதித்துச் சிவந்து காணப்பட்டன. அவர்கள் நடுவில், மன்னன் அக்பரின் சகோதரர், முகமது ஹகீம் மிர்ஸா அமர்ந்திருந்தார்.

"காஸி, தங்களைச் சேனையுடன் இப்பிரதேசத்திற்கு நாங்கள் வரவழைத்த காரணம் அக்பரின் இக் கட்டளைதான். தர்பாரிலுள்ளவர்கள் ஒப்புக் கொண்டு கைச்சாத்திட்டால் நாங்களும் அதற்கு அடங்கி நடக்கவேண்டுமென்பது என்ன நியாயம்? முடியாது. ஒருக்காலும் முடியாது. அக்பரைத் தொலைத்தே தலைமுழுகவேண்டும்" என்று கர்ஜித்தார் ஒருவர்.

ஹகீம் மிர்ஸா ஹுக்காவை ஒருதரம் உறிஞ்சினார். "எங்கே, அக்'கட்டளை'யை ஒருதரம் வாசியும் கேட்போம்."

"இஸ்லாம் மன்னரும் ஆண்டவனின் பிரதிநிதியுமான அபுல் பாத் ஜலாலுதீன் முகமது அக்பர் பாதுஷா காஸி அவர்கள் நெறி தவறாத, நீதியை நிலைநாட்டுவதிலேயே கண்ணும் கருத்துமுள்ளவர் என்பதை அவருடைய தேச மௌல்விகளாகிய நாங்கள் முக்காலும் ஒப்புக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் ஏதாவது மதசம்பந்தமான பிரச்னை ஏற்பட்டு, முல்லா

தாஹிக்களுள் அபிப்பிராய பேதங்கள் உண்டாஞ லும் உண்டாகலாம். அவ்வாறு ஏதாவது தகராறு ஏற் பட்டால், தம்முடைய ஊடுருவிப் பார்க்கும் பேரறி விஞல், தேச நலனே உத்தேசித்து அக்பர் பாதுஷா அளிக்கும் தீர்ப்பானது எங்களேயும், மற்றவர்களே யும் தேச மக்களேயும் கட்டுப்படுத்துவதாகும்.

இன்னும்—"

"போதும், போதும். இதனுல் உங்களுக்கு ஆத்திர முண்டாவதேன்!"

"இந்தக் கட்டளேயை எல்லோரும் ஒப்புக் கொண்ட பிறகு அக்பர் விளேவித்த அக்ரமங்கள் அனந்தம். மெக்கா யாத்திரை கூடாதாம்; பொதுப் பிரார்த்தனே செய்யலாகாதாம்; ரம்ஸான் நோன்பு அனுஷ்டிக்கப் படாதாம்.—" மேலே அவர் பேசுமுன் ஒரு காவலன் உள்ளே நுழைந்தான்.

"காஸி, ஒரு வாலிபன் தங்கள் சமூகத்தை நாடி வந்திருக்கின்ருன்."

"யார் அது? வரச்சொல்."

உசேன் ஆலி, மிர்ஸாமுன் வந்து நின்ருன்.

"யாரப்பா நீ? எங்கு வந்தாய்?"

"காஸி, அடியேன் தங்களிடம் அன்புகொண்ட அடிமைகளில் ஒருவன்."

பின்னர் கான் ஷரீப் குடிசையில் தான் கேட்ட வைகளேயெல்லாம் சொன்ஞன். "கான் இந்த வழி வந்து கொண்டிருக்கின்ருன். சமூகத்தில் தகவல் கொடுக்க ஓடோடியும் வந்தேன்."

எல்லோரும் யோசித்தனர். கான் ஷரீபிடம் எவ்வாறு நடந்துகொள்வது என்று ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

முடிவு கபடமான முடிவுதான். ஓர் எலியிடம் பல பூனைகள் எந்த எண்ணத்துடன் விளையாடுகின்றனவோ, அதேபோல் கான் ஷரீபிடம் விளையாட வேண்டுமென்ற முடிவுதான். உசேன் ஒருபுறம் மறைந்து நின்றான். "பயலே! ஸுபேதார், ஜாகீர் தார் பதவியா! என்னை எவ்வளவு ஏளனம் செய்தாய்? உன்னை இன்னும் விட்டேனா பார்" என்று மனதில் சொல்லிக்கொண்டான்.

கொஞ்ச நேரமாயிற்று. மாளிகையினுள் கான் நுழைந்தான். ஒருவரும் அவனைத் தடை செய்யவேயில்லை. அவன் உள்ளே வருகிறான் என்று அறிந்துகொண்டதும், மிர்ஸா உரத்த குரலில் பேச ஆரம்பித்தார்.

"ஆகையால், சகோதரர்களே, நாம் அனைவரும் பாதுஷா அக்பரிடம் உள்ளன்புகொண்டு ஒழுக வேண்டும். அவர்தான் நம் தெய்வம்."

உள்ளே நுழைந்த கானின் பக்கம் தலையைத் திருப்பினார். "யார் நீ? எங்கு வந்தாய்?"

உள்ளே வரும்போது மிர்ஸா பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் கானை ஏமாற்றிவிட்டன.

"ஐயா, நான் அக்பர் பாதுஷாவின் அடிமை. அவர் கட்டளையைச் சிரமேற்கொண்டு சில விஷயங்களை அறிய இங்கு வந்தேன். நீங்கள் அனைவரும் இம் மாளிகையில் அடிக்கடி கூடிப் பேசுவது எனக்குத் தெரியும். உங்களையெல்லாம் அக்பரின் விரோதிகள் என்று இதுவரையில் நினைத்தேன். உங்களுக்கு வேண்டியவன்போல் நடித்து, விஷயங்களை அறிந்து அக்பருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன். இதோயிருக்கும் இவர் மொழிகளைக்கேட்ட

பின்னர்தான் எவ்வளவு பைத்தியக்காரத்தனமாக உங்கள் எல்லோரையும்பற்றி நினைத்தேன் என்று வருத்தப்படுகிறேன். நீங்களும் பாதுஷாவின் நண்பர்களா! பேஷ்! அந்த மிர்ஸாப் பயலை விடக் கூடாது.”

* * *

கள்ளங் கபடற்ற ஏழைச் சிறுவனுக்கு எதிரிலிருப்பது மிர்ஸா என்று தெரியாது.

மிர்ஸா பையனை நோக்கி, “நாங்களும் பாதுஷாவின் நண்பர்களே. அவர் உனக்கு அனுப்பிய கட்டளையை நாங்கள் பார்க்கலாமோ?”

“ஓ, தடையில்லாமல். வீட்டில் என் தாயாரிடம் கொடுத்து வைத்திருக்கிறேன்.”

“அப்படியா, சந்தோஷம். உன்னைப் பார்த்தால் சிறு பையனுகக் காணப்படுகின்றாய். நீ எவ்வாறு பாதுஷாவின் எதிரிகளிடம் வேவு பார்க்கமுடியும்?”

கபட உலகம் அறியாச் சிறுவன் மார்பைத் தட்டிக்கொண்டான்.

“உங்களுக்கு என் சமாசாரம் தெரியாது. நான் பெரிய குள்ள நரி.”

“அப்படியா?”

காஸி கைகளைத் தட்டினார். இரு வீரர்கள் அவர் எதிர் வந்து வணங்கினர்.

“இந்தச் சிறுவன் ஒரு பெரிய குள்ளநரியாம். எங்கே இந்தக் குள்ள நரியை ஒரு கூண்டில் அடைத்துவையுங்கள், பார்ப்போம்.”

“என்ன! என்னையா?”

அறியாத சிறுவன் திமிறினன். என்ன பிரயோசனம்? மாளிகையின் பின்புறமிருந்த குதிரை

லாயத்தில் அவனைத் தள்ளிக் கதவைப் பூட்டிவிட்டார்கள்.

மிர்ஸாவும் அவர் நண்பர்களும் கான் ஷரீபின் குடிசையை அணுகினார்கள். உசேன் ஆலிதான் அவர்களுக்கு வழிகாட்டினான். கிழவியின் குடிசையை அடைந்தாய்விட்டது.

பலமற்ற கதவை உசேன் கரத்தால் தட்டினான்.

வெகு நேரமாக மகனைக் காணாது தவித்துக் கொண்டிருந்த தாய், ஆவலுடன், "யார் அது? கானா?"

"ஆமாம், கதவைத் திற. அவசரம்."

மைந்தனுக்கு என்ன ஆபத்தோ என்று ஏங்கினாள். அக்கிழ உருவம் அவசரம் அவசரமாகத் தட்டித் தடவி நடந்துவந்து கதவைத் திறந்தது.

* * *

கிழவியிடம் நயத்தாலும் பயத்தாலும் எவ்வளவோ தடவை கேட்டும் அக்பரிடமிருந்து வந்த கடிதத்தைத் தர அவள் மறுத்துவிட்டாள். ஹகீம் மிர்ஸாவுடனிருந்தவர்களில் ஒருவனுக்கு அதிகக் கோபம் உண்டாயிற்று. கிழவியின் கையைப் பிடித்திழுத்தான்.

"ஏ கோட்டான், மரியாதையாகக் கடிதத்தைக் கொடுக்கிறாயா என்ன?"

பயத்தால் கிழவி நடுங்கினாள். பளார் என்று ஓர் அறை அவள் வலது கன்னத்தில் விழுந்தது.

"ஐயோ" என்று துடித்தாள். அவளால் அந்த முரட்டு அடியைத் தாங்கக்கூடிய சக்தியில்லை. பட்ட மரம் தரையில் சாய்ந்தது.

மிர்ஸாவிடம் விடைபெற்றுக் கொண்டு உசேன்

ஆலி, ஆனந்தத்துடன் கான் அடைபட்டிருந்த 'கூண்டு'க்கருகில் வந்துசேர்ந்தான். சுற்றிப் பார்த்தான். எவரும் அருகில் இல்லை.

"கான்! கான்!"

"யார் அது? உசேனு?"

"பயலே, என்னை எவ்வளவு ஏளனம் செய்தாய்? உன் தாயை அங்கே சித்ரவதை செய்கிறார்கள். நீயும் இறப்பாய். படு பயலே படு. வேண்டும், நன்றாய் வேண்டும்."

தாய்க்கு ஆபத்து என்றதும் கான் கலங்கினான். உசேன் ஆலியைக் கெஞ்சினான். தான் வெளியில் தப்புவதற்கு உதவி செய்யும்படி வேண்டினான்.

"நானு உனக்கு உதவி செய்வது! என்னால் தானே நீ இப்பொழுது இங்கு அடைபட்டுக்கிடக்கிறாய்? ஜாகீர்தார் முகத்தைப் பாருங்கள்."

ஆஹா! உசேன் வேலையா இவ்வளவும். கான் கொதித்தான்.

"மானமற்றவனுக்குத் துணை நின்ற ஊனமுற்ற நாயே! நான் உன்னை என்ன பாடு படுத்துகிறேன் பார்."

"போடா, போ" என்று பரிகாசம் செய்து விட்டு உசேன் போய்விட்டான்.

ஆண்டவா! தப்பி வெளியே போக ஒரு மார்க்கமுமில்லையே. சிறுவன் என்ன செய்வான்? சுற்று முற்றும் உற்றுப் பார்த்தான். மேற் கூரையை நோக்கினான். கதவிடுக்கைக் கவனித்தான். இருட்டில் செங்கற் சுவர் முழுவதையும் தடவினான் கரங்களால்.

சுவரின் மேலண்டை மூலையில் ஓரிடத்தில்

ஒரு செங்கல் இல்லை. பெயர்ந்து தரையில் விழுந்து கிடந்தது. யோசித்தான், வெகுநேரம் யோசித்தான்.

தன் இடையிலிருந்த வாளை உருவினான். வாள் முனையைச் சுவரில் ஏற்பட்டிருந்த சந்தில் கொடுத்து செங்கற்களைப் பெயர்த்தெடுக்க ஆரம்பித்தான். மனம் படபடவென்று அடித்துக்கொள்ளுகிறது. வியர்வை ஆறுகப் பெருகிற்று. காதுகளில் 'உன் தாய், உன் தாய்' என்று ஏதோ ஒன்று ஒலித்துக் கொண்டேயிருந்தது. எவ்வளவு நாழிகையாகிறது? ஒவ்வொரு செங்கல்லாக வல்லவா எடுக்கவேண்டியிருக்கிறது?

கான்! கான்!! ஜல்தி! ஜல்தி!! நீ எடுக்கும் ஒவ்வொரு செங்கல்லும் உனக்கும் உன் அன்னைக்கும் இடையிலுள்ள தூரத்தைக் குறைத்துக் கொண்டே வருகின்றது. சீக்கிரம்!

அப்பா! கடைசியாகச் சுவரில் அவன் நுழையக்கூடிய அளவு ஒரு துவாரம் ஏற்பட்டுவிட்டது.

விழுந்தடித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினான். கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது.

"அம்மா! அம்மா!!" என்று அலறினான் வாலிபன்.

"உசேன்! மறுபடியுமா உன்தோழர்களுடன் வந்துவிட்டாய்? திரும்பவும் என்னை ஏமாற்றப் பார்க்கிருயா?" இந்த வார்த்தைகள் கிணற்றினுள்ளிருந்து வருவனபோல் தோன்றியது.

"உசேன் இல்லை அம்மா, நான் தான் கான். ஐயோ! கதவைத் திற."

"முடியவே முடியாது. என்னையா ஏமாற்ற நினைத்தாய்?"

கதவைக் கைகளால் ஆட்டினான்.

"அம்மா, என் குரல்கூட உனக்குத் தெரியவில்லையா?"

என்ன சொல்லியும் பிரயோசனமில்லை. உடலால் கதவை முட்டினான்.

"டேய், உள்ளே வந்தாயோ என்கையிலிருக்கும் கத்தியால் குத்திக்கொள்வேன். ஜாக்கிரதை."

செல்வச் சிறுவனுக்குத் தாயை எப்படியும் பார்க்கவேண்டுமென்ற ஆவல். வாளால் கதவைப் பிளந்தான். உட்புறம் ஓர் அடி எடுத்துவைத்தான்.

"துரோகி" என்ற குரல் குடிசையை இரண்டாக்கிற்று.

கான் திடுக்கிட்டான். தாய் கீழே தரையில் கிடந்தாள். நீண்ட குத்துவாள் ஒன்று கிழவியின் மார்புக்குள் வெகுதூரம் சென்றிருந்தது. ஆம், அவள் கணவனின் குத்துவாள்தான். 'உள்ளே நுழைந்தால் குத்திக்கொள்வேன்' என்று சொன்ன சொல்லை நிறைவேற்றி விட்டாள்.

மண்டியிட்டான் கான். உட்கார்ந்து கொண்டான். கிழவியின் தலையைத் தன் தொடைமீது கிடத்தினான். அலறினான்.

"அம்மா, என்ன காரியம் செய்து விட்டாய்! ஐயோ, அம்மா, அம்மா!"

கண்களைத் திறந்தாள் கிழவி.

"யார்! உண்மையாகவே கான்தானா?"

"ஆம், அம்மா, நான் எவ்வளவு கூறியும் நீ நம்பவில்லையே. ஐயோ! என்னால்தானே நீ சாகப்போகிறாய்? உன்னைக் கொன்றதற்குக் காரணம் இப்பாவியல்லவா? என்னை மன்னிப்பாய்."

"நான் குத்திக் கொண்டதற்குக் காரணம் நீயா? இல்லையடா கண்மணி! அது என் தலைவிதி. நீ என்ன குற்றம் செய்துவிட்டாய்? எதற்காக உன்னை நான் மன்னிப்பது? உன்னை என்மனதார வாழ்த்துகின்றேன். பேரும் புகழும் பெற்று நெடுங்காலம் நீ சிரஞ்சீவியாக வாழ்வாய்."

அவள் உயிர் அதிர்ந்தது; கானின் உடலும் அதிர்ந்தது.

"அம்மா, ஜன உதவியுள்ள இடத்திற்கு உன்னைக்கொண்டு போகிறேன்."

"வேண்டாம். உயிர் போகும்போது எங்கிருந்தால் தானென்ன? உன்னைப் பார்த்துவிட்டேன். இனி சந்தோஷமாக உயிரை விடுவேன். எதிரிகள் மறுபடியும் உன்னைப் பிடித்துக்கொள்ளப் போகிறார்கள். ஓடு, ஓடு."

அந்திக் காலத்திலும் மகனைக் காப்பாற்ற வேண்டுமென்ற கவலை. "ஓடு, ஓடு" என்று மைந்தனிடம் சொன்னாளோ யன்றித் தன் உயிரிடம் கட்டளை யிட்டாளோ! பேதை.

கான் கண்களில் நீர் கரைபுரண்டோடியது.

"ஐயோ, அம்மா. நான் அல்லவா உன்னைக் கொன்றேன்."

"ஆமாம், ஆமாம்" என்று சொல்லிக் கான் தோளில் ஒருவர் தட்டினார். யார் அது? முகமது மிர்ஸாதான். கிழவியின் குடிசையிலிருந்து மாளிகைக்குப் போனவர் அங்கு குதிரை லாயத்திலிருந்து கான் தப்பிப்போனதை யறிந்து மறுபடியும் குடிசைக்குத் தம் ஆட்களுடன் திரும்பி விட்டார்.

"அடே பயலே, சுவரில் துவாரம் செய்தா தப்பினாய்? கொண்டு போங்கள் இவனை."

மிர்ஸாவின் காலில் விழுந்தான்; கதறினான்; கெஞ்சினான் கான். "ஐயா, இன்னும் சிறிது நேரத்தில் என் தாயின் உயிர் போய்விடும். அவள் உடல் மீது மண்ணைப் போட்டு மூடும் வரையிலாவது அவளுடனிருக்க உத்தரவு கொடுங்கள். பிறகு என்னைக் கொண்டுபோய்க் கொன்றாலும் கவலையில்லை."

"போடா, போ. அம்மாவாவது மண்ணாவது."

சிறுவன் விம்மினான்; விழுந்தான்; தலையை மோதிக்கொண்டான். என்ன பிரயோசனம்? அவனை பலாத்காரமாக வெளியே கொண்டுபோய்விட்டார்கள்.

* * *

வெகு தொலைவில் அக்பர் பாதுஷாவின் சேனையின் முன்னணி கம்பீரமாக வந்துகொண்டிருந்தது. மிர்ஸாவும் படைகளுடன் அண்ணனை எதிர்க்கத் தயாராய்க் காத்துக் கொண்டிருந்தான்.

இரு சேனைகளும் ஒன்றை யொன்று நெருங்கி விட்டன.

யுத்தம் ஆரம்பமாய்விட்டது. ஒருவரையொருவர் நெருங்கினர்; மோதினர்; எக்காளமூதுபவன் எக்காளமூதும் எதிரியுடன் மோதினான்; குதிரை குதிரையோடு மோதியது. பீரங்கிகளும் துப்பாக்கிகளும் நெருப்பைக் கக்கின.

பிறகு?

யுத்த காயங்களின் ஆரம்பந்தான். சாவின் பேய்க் கூத்து.

அகோர யுத்தம் முடிந்தது. மிர்ஸாவின் சைன்

னியம் புறமுதுகிட்டு ஓடிற்று. ஓடுகிறவர்களை வெட்டித் தள்ளுகிருர்கள் துரத்துபவர்கள். அப்பப்பா!

* * *

மாலை சூரியன் அஸ்தமிக்கும் சமயம். கான் அப்பெரிய மரத்தடியில் நிற்கின்முன். அவனைச் சுற்றி மிர்ஸாவும் அவர் ஆட்களுமிருந்தனர். யுத்தத்தில் தோற்ற அவர்கள் கோபத்திற்கு இலக்குக்கு கான்தான்.

"நாயே, உன்போன்றவர்களால் அல்லவா அக்பருக்கு எங்கள் விஷயங்கள் அனைத்தும் தெரிந்துவிட்டது? உன்னுல்தான் நாங்கள் இன்று தோல்வியடைந்தோம். அக்பருக்கு என்ன தண்டனையை நிச்சயித்திருந்தோமோ அத் தண்டனையை நீதான் அனுபவிக்க வேண்டும். அது தூக்கு தண்டனைதான்."

கண்களுக்கெட்டிய வரையில் கான் நோக்கிஞன். அதோ தெரியும் வயல்களின் வரப்புகளில்தான் சிறு வயதில் ஓடிஞன்; அங்கு காணப்படும் பள்ளத் தாக்குகளில்தான் ஆடு மாடுகளை மேய்த்தான்; பெருமூச்செறிந்தான்.

இயற்கையின் செல்வங்களான மலர்ச் சோலைகளும் ஓடைகளும் மகா ரம்யமாகத்தானிருந்தன. ஆனுல் குற்றமற்ற சிறுவனைக் காப்பாற்ற எவருமருகிலில்லையே!

* * *

அக்பரும் அவர் மெய்க்காப்பாளர்களும் வெகு வேகமாகக் கிழவியின் குடிசையை அடைந்தனர். வாயிற்படியில் கிழவி துடித்துக்கொண் டிருந்தாள்.

மங்கிய கண்களின் வழியாக உயிர்போகக் காத்துக் கொண்டிருந்தது. மகனை மறுபடியும் காணலாம் என்ற ஆசைதான் இன்னும் அவள் உயிருடனிருந்த தற்குக் காரணம். முகம்மதிய பெண் அல்லவா, சாகும் சமயத்தில்கூட அன்னியரைக் கண்டதும் அவள் பலமற்ற கரங்களால் முகத்தை மூடிக் கொள்ள விரும்பினுள்; ஆனல், பயமில்லையே.

அவள் நிலையைக்கண்டு அக்பர் தவித்தார். எங்கே கான்?

விஷயத்தை அவளிடமிருந்து கிரகிக்க ஒரு நாழிகையாயிற்று. அவ்வளவு மெதுவாக வார்த் தைகள் வந்தன. உயிர் திணறும் சமயமல்லவா?

"கானை ஐந்தாறு பேர்வழிகள் இழுத்துக் கொண்டு அதோ அக்குன்றின் பக்கம் போனுர்கள். கானை விட்டுவிடும்படிமன்ருடிக்கொண்டே அவர்கள் பின்னுலேயே வந்தேன். வாயிற்படி வரையில் தான் வர எனக்கு முடிந்தது. அதற்குமேல் சக்தி யில்லை. விழுந்துவிட்டேன். ஐயோ, கான்! கான்!'

அக்பர் மன்னனிடம் தன் புதல்வனின் ஆபத் தான நிலையைத் தெரிவிப்பதற்காகத்தான் அவள் உயிர் அதுவரையில் தங்கியிருந்தது போலும்!

அரை விஞடியாயிற்று. அக்கிழ உயிர் ஆண்ட வனின் திருவடியை அடைந்தது.

மன்னனும் மற்றவர்களும் கிழவி குறிப்பிட்ட குன்றின் பக்கம் விரைந்தார்கள்.

அப் பெரிய மரத்தின் உயர்ந்த கிளையில் கானின் உடல் கயிற்றில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

உயிர் போனபின் வந்து என்ன செய்வது; வந்து தான் என்ன பலன்?

அன்று நள்ளிரவு. அச் சிறிய தோட்டத்தின் மத்தியில் கிழவியைப் புதைத்தார்கள்.

கடைசி முறையாகக் கானின் முகத்தை அக்பர் பார்த்தார். இவன்தானு கான் ஷரீப்? அவன் தலை ஏன் ஒரு பக்கமாய்ச் சாய்ந்திருக்கிறது? ஆடை விலகிப்போனதுகூடத் தெரியாது தூங்குகிருனே.

தூக்கம்தான். மரண தூக்கம்தான். குற்ற மற்ற அச் சிறுவன், அவன் தாய், தந்தை இம் மூவரும் அக்பரின் சாம்ராஜ்யத்திற்காக பலியிடப்பட்டார்கள்.

தாயைப் புதைத்த இடத்திற்கு அருகிலேயே கானையும் புதைத்தார்கள். சவக்குழியண்டை அனைவரும் சிறிதுநேரம் மௌனமாக நின்ருர்கள்.

என்ன பைத்தியக்காரத்தனம்!

உயிர்போன பிறகா, சவத்திற்கு மரியாதை.

# நீதி

அடைமழைக் காலம். அமாவாசை இருட்டு. சூரியன் மறைந்து எட்டு நாழிகையாகிவிட்டது. அச் சிறிய குன்றின் உயர்ந்த சிகரத்தில் மன்னன் சிவாஜி தன்னந் தனியாக நின்றுகொண் டிருந்தான். மேகப் படலங்கள் ஆகாயத்தை மறைத்தன. மன்னனின் கண்களிலிருந்து ஆறுக ஓடிய நீர்ப்படலமும் அவன் கண்களை மறைத்தது. அவன் உள்ளத்தில் அமை தியே யில்லை. வாய், ஓயாமல் 'பவானி மாதா! பவானி மாதா!' என்று முழங்கிக்கொண்டே யிருந் தது.

கால் நாழிகை சென்றது. தட தடவென்று மழை பொழிய ஆரம்பித்தது. மறுபடியும் சிவாஜி யின் கண்களிலிருந்து பொலபொலவென்று நீர் உதிர்ந்தது. மண்டியிட்டான். கதறினன்.

"தேவி, ஏழைமீது உனக்குக் கருணை கிடையா தா? ஆறு நாட்களாக நானும் பார்க்கின்றேன். ஒவ் வொரு நாளும் காலையில், கொடூரமாகக் கொலை செய் யப்பட்ட ஒரு மகமதிய மங்கையின் சவம் என் கோட் டையினுள் கிடக்கின்றது. இத் தீச்செயல் புரிந்த கிராதகன் எவன்? எனக்குச் சொல்லக் கூடாதா? அவனைப் பழிக்குப் பழி வாங்குவேனே. என் கோட் டையிலேயா இந்தக் கோரம் நடக்கவேண்டும்?' என்னைப்பற்றி வருங்காலத்தவர் எது சொன்ன போதிலும், 'பரஸ்திரீகளைத் தன் சகோதரிகளாகவே

சிவாஜி கருதினுன்' என்று சொல்லப்போவது உனக்கு இஷ்டமில்லையா? எனக்கா இந்த விஷப் பரீட்சை? வேண்டாம், தாயே!"

'போரில் காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டிய' மணிவிளக்குத்தான்; ஆனுலும் இச்சமயம் குழந்தைபோல் குமுறினுன். கண்ணீரும் கம்பலையுமாய் நின்ருன்.

* * *

மற்ருெரு நாழிகையும் சென்றது. தீவட்டிகளுடன் அநேகர் அக்குன்றின் உச்சிக்கு வந்துகொண்டிருந்தார்கள். 'மகராஜ்! மகராஜ்!' என்று ஆடவர் செய்யும் சத்தம் ஒரு பக்கம். 'சிவாஜி! சிவாஜி!' என்று தீனக் குரலில் கதறும் அபலையின் குரல் மற்ருெரு புறம்.

ஹா! அது என்ன! மழையில் பாறையில் யார் படுத்திருப்பது? சிவாஜியா? ஓடோடியும் வந்தாள் சிவாஜியின் தாய்.

பாறையில் சிறு பள்ளம். பள்ளத்திற்குள் சிவாஜியின் முகம். பக்ஷிராஜனின் அலகைப்போன்ற நாசித்துவாரங்கள் வரையில் தண்ணீர். மழை ஜலத்தால் பள்ளம் நிரம்பிற்ரே, அன்றி சத்ரபதி சிவாஜியின் கண்ணீர்ப் பெருக்கால் நிறைந்ததோ, பவானி மாதாவுக்குத்தான் தெரியும்.

'ஆ!' என்று அலறினுள் தாய். 'ஐயோ' என்று ஒலித்தது குன்று.

சிவாஜியின் தாய் அங்குவந்து சேருவதற்கு இன்னும் ஒரு வினுடி தாமதம் ஏற்பட்டிருந்தால், மராட்டியர்களின் வீரச் சரிதமே இருந்திருக்க முடியாது.

வீர மைந்தனைப் பெற்றெடுத்த வீரத் தாய் தான்; மிருகேந்திரனைத் தன் உந்திக் கமலத்தில் வைத்திருந்த பாக்கியம் செய்தவள் தான். இருந்தாலும் என்ன? என்றும் எப்பொழுதும், தாய், தாய் தான்.

தன் குழந்தையை இரு கரங்களாலும் வாரியணைத்தாள்; தூக்கினாள். பேச்சு மூச்சில்லாமல் கிடந்தான் சிவாஜி. அவன் உடல் முழுதும் நெருப்பாய்க் காய்ந்தது.

'பவானித் தாயே, என் மகனுக்கு உயிர்ப்பிச்சை அளி' என்று கதறினாள்.

குன்றிலிருந்த பெரும் பாறை ஒன்று எங்கோ சரிந்த சத்தம் காதில் விழுந்தது.

கல்லும் அவள் அலறலைச் சகியாது கரைந்தது போலும்!

'என்ன, என்ன?" என்று கதறிக்கொண்டே வெகு தூரத்திலிருந்து ஓடிவந்தான் ராம ராவ். சிவாஜியின் பால்ய நண்பன். சத்ரபதியின் கமல வதனத்தை நோக்கினான். அவன் கண்களும் கலங்கின.

* * *

நடுநிசியுமாயிற்று. துடிப்பு நிறைந்த மன்னனின் உடல் படுக்கையில் துவண்டு கிடந்தது. கட்டிலின் அருகில், அவன் தாய், ராம ராவ், வைத்தியர்கள் முதலானோர் நின்றுகொண்டிருந்தார்கள்.

கண்களைத் திறந்தான். பிதற்றவும் ஆரம்பித்து விட்டான்.

"தாயே, தாயே—' இன்னும் மேலே ஏதோ சொல்வதற்குள் அவன் தாய் இடைமறித்து 'இதோ யிருக்கின்றேன். என்ன வேண்டும்?" என்றாள்.

'உன்னையில்லை, அம்மா. பவானி மாதாவை அழைத்தேன். நீ படுத்துக்கொள். நேரமாகிவிட்டது.' பிதற்றும்பொழுதும் தன்னைப் பெற்ற தாயை அவனால் மறக்கமுடியவில்லை.

மறுபடியும், 'தேவி, தேவி!'

மறுநாள் அஸ்தமித்து வெகு நேரமாகிவிட்டது. திடீரென்று படுக்கையை விட்டெழுந்தான். அவன் கண்கள் சுடர்விட்டுப் பிரகாசித்தன. அருகில் அவன் தாயைத் தவிர வேறொருவரும் இல்லை.

'ஆஹா, அப்படியா சமாசாரம்? காமப்பேய் கொண்ட நாயே' என்றான் சுவரைப் பார்த்து.

'என்ன! என்ன அது!' என வினவினாள் தாய்.

தாயின் பக்கம் திரும்பினான். 'ஒன்றுமில்லையம்மா, தேவி காட்சி அளித்தாள்.' தாயின் காதுக்கு மட்டும் கேட்கும்படி ஏதோ ஒரு முக்கியமான சமாசாரத்தைச் சொன்னான். கையில் குத்துவாளை எடுத்துக்கொண்டான். தன்னைப் பெற்ற தகப்பனாயிருந்தாலும் நீதியைப் பரிபாலிப்பதுதான் முதற் கடமை.

தாயை நமஸ்கரித்தான், 'போய் வருகின்றேன், அம்மா.'

'போய்வாடா, கண்மணி!' சிவாஜி தன் அந்தரங்க அறைக்குள் நுழைந்தான்.

* * *

மனித சஞ்சாரமற்ற சிறிய தெரு. நடுநிசி. அச் சிறிய வீட்டின் உட்புறத்தில், உடலெல்லாம் நடுங்க மிரண்ட விழிகளுடன், ஒரு மகமதிய மங்கை, சிவாஜியின் நண்பன் ராம ராவுடன் மன்றாடிக்கொண்டிருக்கிறாள்.

'மரியாதையாக ஒரு முத்தம் தருகின்ருயா, என்ன?' என்ருன் ராம ராவ்.

'அட பாவி, உனக்காகத்தான் சிவாஜி எங்களைத் தன் கோட்டைக்குள் வைத்திருக்கின்ருனே? பரஸ்திரீகளைத் தாயாக மதிப்பது எவ்வளவு நன்ருயிருக்கின்றது! யாரிடம் வார்த்தையாடுகின்ருய் என்பது ஞாபகமிருக்கட்டும்.'

'என் மனதைக் கவர்ந்த உன்னுடன்தான் பேசுகின்றேன். யுத்தத்தில் பிடிபட்ட உனக்கு எவ்வளவு திமிர்? சிவாஜிக்குப் பரஸ்திரீகள் தாய். எனக்கென்ன? சிவாஜிக்கு என் விஷயம் தெரிந்தால் தானே எனக்குப் பயம்? உன் வாயை மூடிவிட்டால், யாருக்கு என்ன தெரியும்? எங்கே முத்தம்?

'சீ, நாயே! அருகில் வந்தால் கூக்குரலிடுவேன்."

'எங்கே, கூச்சலிடு பார்ப்போம்.'

'ஆண்டவனே, ஐயோ.'

பேதை அலறினுள்; ராம ராவ் சிரித்தான்.

'உன் ஆண்டவன் என்னை என்ன செய்யமுடியும்? ஆறு பெண்கள் இவ்விதம்தான் அலறினுர்கள். அவர்கள் இப்போது எங்கே? உனக்கும் அவர்கள் கதிதான். அருகில் வருகின்ருயா, இல்லையா?' அவள் இடையைச் சுற்றிப் பிடித்தான்.

'என்னைக் காப்பவர் ஒருவருமில்லையா?' என்றலறினுள் அனுதை. திடீரென்று வெளிக் கதவு திறந்தது. ராம்ஜி, நில்?

யாரது? ராம ராவ் திரும்பிப் பார்த்தான். மகமதியப் பக்கிரி ஒருவன் வாசற்படியில் நின்றுகொண்டிருந்தான். அவன் விழிகள் நெருப்பைக் கக்கின. கையிலோ நீண்ட குத்துவாள்.

'யாரடா உன்னை உள்ளே விட்டது? போ வெளியே' என்று அதிகாரம் செய்தான் ராம ராவ்.

அவ்வளவுதான். புலிபோல் பக்கிரி ராம ராவ் மேல் பாய்ந்தான்.

'ஜெய பவானி' என்ற சங்கநாதம். காற்றில் பாய்ந்தது குத்துவாள். கண்மூடித் திறப்பதற்குள் ராம ராவின் வயிற்றிலும் பாய்ந்தது; கிழிந்த வயிறு வழியாக இரு குடல்களும் சரிந்தன.

* * *

விடுதலை பெற்ற பேதைப் பெண், பக்கிரியையே பார்த்துக்கொண்டிருந்தாள்; ஆனால், அவளிருந்த பக்கம் பக்கிரி திரும்பவே யில்லை.

'அம்மணி, தாங்கள் மகமதிய ஸ்திரீயல்லவா? தங்களை நான் பார்ப்பது தகாது. முதலில் தங்கள் முகமூடியை அணிந்துகொள்ளுங்கள். பிறகு ஆக வேண்டியதைச் செய்வோம்.'

முகமூடியை அணிந்துகொண்டாள். பக்கிரியைப் பார்த்தாள். ஆஹா! ஒரு வினாடிக்குமுன் தன்னிடம் தகாத வார்த்தைகளைப் பேசியவனுக்கும் இம் மகானுக்கும் எவ்வளவு வித்தியாசம்! இவர் யார்? நிச்சயமாக ஆண்டவன் தன்னைக் காப்பாற்ற அனுப்பிய திருத் தூதனாகத்தா னிருக்கவேண்டும்.

மெக்கா புண்ணிய ஸ்தலத்தை நோக்கி மண்டியிட்டாள். 'நபி நாயகமே, நின் கருணையே கருணை—'

பக்கிரியும் மண்டியிட்டான். 'பவானி மாதா, உன் கருணையே கருணை—' இருவரும் எழுந்தார்கள். 'தாயே, வெளியே ஒரு பல்லக்குக் காத்துக்கொண்டிருக்கிறது. வாருங்கள் தங்களை பீஜபூருக்கு பத்திரமாக கொண்டு சேர்த்துவிடுகின்றேன்.'

விடிய ஒரு ஜாமம். பீஜபூர் எல்லைக்குப் பல்லக்கு வந்துவிட்டது. பல்லக்கினருகிலேயே குதிரையில் பக்கிரி வந்துகொண்டிருந்தான். பல்லக்கை நிறுத்தினான். பெண்ணை அழைத்தான்.

அம்மணி, இனி நான் வருதல் கூடாது. பயமில்லாமல் தாங்கள் இனிச் செல்லலாம். போய் வருகின்றேன், நமஸ்காரம்!'

'ஐயா, சற்று தாமதியுங்கள். எனக்கு உயிர்ப் பிச்சை அருளிய தாங்கள் யார்?

'அம்மா, நான் மராட்டியர்களின் தலைவன்; ஆனால், பவானி மாதாவின் அடிமை. என் பெயர் சிவாஜி.'

"சிவாஜியா! தாங்களா! என்னைக் காப்பாற்றியது சிவாஜியா?"

அவள் இதைச் சொல்லி முடிப்பதற்கு முன், சிவாஜியின் குதிரை வந்த வழியே ஒரு காதம் ஓடி மறைந்தது.

* * *

இரண்டு ஆண்டுகள் சென்றன. சிவாஜியால் காப்பாற்றப்பட்ட அதே பெண் தன் மரணப் படுக்கையில் கிடக்கின்றாள். அப்பொழுதுதான் பிறந்த அவள் ஆண் குழந்தை கதறிக்கொண்டேயிருந்தது.

மெதுவாக அம்மங்கை சிரித்தாள். வாயைத் திறந்தாள். அவள் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைகளைக் கேட்பதற்காகவோ, அன்றி எதற்காகவோ குழந்தையும் அழுகையை நிறுத்தியது. தாயுடன் சேர்ந்துகொண்டு அதுவும் சிரித்தது தீனமானகுரலில்.

'சிவாஜி மகாராஜாவுக்கு' என்றாள் பேதை.

'ஜே' என்று முழங்கிய உயிர் உடனே அகன்றது.

## யஸ்வந்

உமாரதக்கோட்டையில் ஒரே குதூகலம். மாவலியர்கள் யாவரும் ஆனந்தக் கடலில் முழுகியிருந்தனர். மறுதினம் புலர்ந்ததும் அவர்களின் மாபெரும் தலைவனும் கண்கண்ட தெய்வமுமாகிய தாணுஜி மாலஸுரேயின் மைந்தனுக்குத் திருமணம்.

தன் மைந்தனுக்குக் கல்யாணம் என்றால் எந்தத் தந்தைக்குத்தான் மகிழ்ச்சியிராது? தாணுஜியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தன் குல தெய்வமான பவானிக்குப் பூஜை செய்துவிட்டு மாளிகையை நோக்கித் தாணுஜியும் மற்றைய மாவலித் தலைவர்களும் வந்துகொண்டிருந்தார்கள். சிறிது தூரத்தில் வெகு வேகமாக வரும் ஒரு குதிரையின் காலடிச் சத்தம் தாணுஜியின் காதில் விழுந்தது. "வருகின்றவன் யார்? சிவாஜியா? கல்யாணத்திற்கு முன்தினமே வருகிறேன் என்று சொன்னான்."

"ஸுபேதார், சிவாஜி மகாராஜா பரிவாரமில்லாமல் தனியாகவா கல்யாணத்திற்கு வருவார்? வரமாட்டார். வருவது வேறு யாரோ தெரியவில்லை."

குதிரை வீரனும் வந்து சேர்ந்தான். தன் கையிலிருந்த கடிதத்தைத் தாணுஜியிடம் சேர்ப்பித்தான் "கல்யாணத்திற்கு வரமுடியாததற்குக் காரணங்கள் எழுதியிருக்கின்றானோ?" என்று சொல்லிக்கொண்டே கடிதத்தைப் பிரித்தான். படித்தான், "உடனே ராயகாட் கோட்டைக்குப் பனிரண்டாயிரம் வீரர்களுடன் வந்து சேரவும் - சிவாஜி."

சரி, ஏதோ யுத்தம் வந்துவிட்டது. தாஞஜியின் சந்தோஷம் கரைபுரண்டோடியது. மகன் மணத்தை விட மராட்டிய திலகத்தின் கட்டளைதான் முக்கிய மானது.

சிவாஜியிடமிருந்து வந்த கடிதத்தை இடையில் செருகிக்கொண்டான். வலது கரம் நீண்ட வாளைப் பற்றி யிழுத்தது. வாள் ஆகாயத்தை நோக்கிற்று. உரத்த குரலில், "ஜய பவானி!" என்று யுத்த சங்க நாதம் செய்தான் தாஞஜி; "ஜய பவானி!" என்று ஒலித்தார்கள் அருகிலிருந்தவர்கள். இரு வினடி யில் "ஜய பவானி!" முழக்கம் கோட்டையைப் பிளந்தது.

* * *

அரை நாழிகை கழிந்தது. கோட்டை மைதா னத்தில் மாவலியர்கள் யுத்த சன்னத்தராய் நின் ஞர்கள். சற்றுநேரத்திற்குமுன் தாஞஜி மாளிகையில் தோரணம் கட்டிக் கொண்டிருந்தவன் இப்பொழுது நீண்ட கத்தியை இடையில் கட்டிக்கொண்டிருந் தான்; தாம்பாளங்களைத் தாங்கி நின்ற கரத்தில் கேடயம் ஏறியிருந்தது; விடிந்தவுடன் மனைவியுடன் முகூர்த்தத்திற்குப் போக நினைத்திருந்தவன், மனைவி யிடம் விடைபெற்றுக்கொண்டு கோட்டை மைதா னத்திற்கு ஓடிவந்து கொண்டிருந்தான்.

வீர வாசகமே விளம்பும்; சுதந்தர நாதம் செய்யும் தியாக வாழ்வையே விரும்பிக் கேட்கும் மாவலிய வீரர்கள் அன்றிரவே தாஞஜியின் தலைமை யில் ராய காட்டுக்குக் கிளம்பிவிட்டார்கள்.

மூன்றும் நாள் மாலை மனஉறுதி பெற்ற தாஞஜி வாக்கினிமையுடைய சிவாஜி மன்னனின்

எதிரே நின்ருன். இருவரும் பால்ய முதற்கொண்டே இணைபிரியா நண்பர்கள்.

"எதற்காக என்னை உடனே வரவேண்டு மென்று கட்டளை யிட்டாய்? என்ன அவசரம்?"

"என் தாயார் தமக்கு, அவர்கள் விரும்பும் ஒரு வஸ்துவை எப்படியாகிலும் நான் கொண்டுவந்து தரவேண்டுமென்று ஆசைப்படுகிருர்கள். அதைக் கொடுக்க எனக்குத் திறமையில்லை. அதனுல்தான் உன்னை அழைத்தேன்."

"என்ன? ஜீஜீபாய் அம்மையார் விரும்பு வதையா உன்னுல் கொடுக்க முடியாது? அது எதுவாயிருந்தாலென்ன? உயிரைக் கொடுத்தாகி லும் அன்னையைத் திருப்தி செய்யவேண்டும். என்ரு கிலும் ஓடவேண்டிய அற்ப உயிர், அன்னைக்காக, இன்றே ஓடட்டுமே. வா அன்னையிடம்."

ஜீஜீயின் முன் நின்ருன் மாவலி வீரன். "தாயே, தாங்கள் விரும்புவது யாது?"

ஜீஜீபாய் தானுஜியை அழைத்துக்கொண்டு தன் உப்பரிகையின் கிழக்கே சென்ருள். அங்கிருந்த ஜன்னலைத் திறந்து இடது கரத்தை வெளியே நீட்டி, "அதோ தெரிகின்றதே, அதுதான் வேண்டும்," என்ருள்.

தானுஜி எட்டிப் பார்த்தான். மாலைச் சூரிய னின் பொன் கிரணங்கள் தூரத்திலிருந்த சிம்மகட் கோட்டைமீது பிரகாசித்தன. ஜீஜீ இருந்த பக்கம் திரும்பினுன். தன் பக்டியை (தலைப்பாகை)க் கழற்றி அவள் பாதங்களில் வைத்தான். "மாதா, என் தலையை அடகு வைப்பதற்குப் பதிலாக என் தலைப் பாகையைத் தங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்

றேன். சிம்மகட்டைத் தங்கள் புனித கரங்களில் சேர்த்த பிறகுதான் இனி பக்டி அணிவேன். போய் வருகின்றேன்."

ஜீஜீயின் பாதத்தில் தன் உயிரைச் சமர்பித்துத் தானுஜி தன் வீரர்களுடன் ஆனந்த பரியை அடைந்தான். பிறகு மேலே என்ன செய்வது?

உயர்ந்த குன்றின்மீது சிம்மகட் கட்டப்பட்டிருந்தது. கோட்டையைச் சுற்றிப் பெரிய சுவர்கள். சந்திர சூரியர்கள் கூட உத்தரவு வாங்கிக்கொண்டு தான் உள்ளே போகவேண்டும். நாலு பக்கங்களிலும் அவ்வளவு கடுங்காவல். குன்றின்மீது எவ்வாறு போக முடியும்?

தானுஜி யோசித்தான். தன் வீரர்களையெல்லாம் ஆனந்த பரியிலேயே நிறுத்திவிட்டு மாறு வேடத்துடன், சிம்மகட் கோட்டைக்கு இரண்டு மைல் தூரத்தில் வந்து சேர்ந்தான். அவனது பணிவும் கனிந்த வார்த்தைகளும் அங்கிருந்த கோலி ஜாதியினரை வசப்படுத்திவிட்டன. சிறிது நேரத்தில் அவர்களிடமிருந்து சில முக்கிய விஷயங்களை கிரகித்துவிட்டான். இடது கைப்புற மிருக்கும் டோங்கிரிக் குன்றில் ஏறிவிட்டால் பின்னர் பாக்கி விஷயங்கள் வெகு எளிது.

* * *

இரவு வெகு நேரமாகிவிட்டது. டோங்கிரிக் குன்றின் அடிவாரத்தில் இருநூறு மராட்டிய வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஒரே செங்குத்தான பாறையை எவ்வாறு கடப்பது? தன் கையில் தயாராய்க் கொண்டுவந்திருந்த மூங்கில் கூடையைத் தானுஜி திறந்தான். அன்பு

தவழும் குரலில், "யஸ்வந்த், வா வெளியே," என்ருன்.

ஒரு பெரிய உடும்பு கூடையிலிருந்து துள்ளித் தரையில் குதித்தது. நடுவில் பெரிய முத்து ஒன்று கோக்கப்பட்டிருந்த தங்கச் சங்கிலி யஸ்வந்த் கழுத்தை அலங்கரித்தது. அன்புடன் யஸ்வந்தைத் தூக்கினுன். அதன் நெற்றியில் பவானி மாதாவின் பிரசாதமாகிய குங்குமத்தைத் தடவினுன்.

"யஸ்வந்த், இதற்குமுன் இருபத்தேழு கோட்டைகளைப் பிடிக்க நீதான் உதவி செய்தாய். இன்றும் உன்னைத்தான் உதவி செய் என்று கெஞ்சுகிறேன். இந்தக் கோட்டை ஜீஜீபாய்க்கு வேண்டுமாம்." யஸ்வந்தின் இடுப்பைச்சுற்றி ஒரு மணிக் கயிறு இறுக்கப்பட்டது.

தானுஜி யஸ்வந்தைத் தட்டிக்கொடுத்தான் "யஸ்வந்த் தயார்தானு?"

தலையைத் திருப்பி அகம்பாவத்துடன் ஒரு முறை பார்த்தது யஸ்வந்த். சரி, தயார்தான்.

குன்றை நோக்கி வேகமாக நடந்தது. இடுப்பில் கட்டிய கயிறுடன் சரசரவென்று மேலே ஏறியது. குன்றைக் கடந்தாய்விட்டது; இனிமேல் கோட்டைச் சுவர்தான் பாக்கி. 'சட்'டென்று யஸ்வந்த் மேலே போவதை நிறுத்தியது. தலையைக் கீழே சாய்த்து அடிவாரத்திலிருந்த தானுஜியை நோக்கிற்று.

"தானுஜி, யஸ்வந்த் ஒருநாளுமில்லாது திரும்பிப் பார்க்கின்றது. இது அபசகுனம். இன்று நாம் மேலே போகவேண்டாம். நாளைக்குப் போய்க் கொள்ளலாம்" என்று ஒரு பெரியவர் ஆலோசனை கூறினுர்.

ஜீஜீபாயின் உள்ளத்திலெழுந்த ஆசைத் தீ, தாஞ்ஜியின் உள்ளத்தைப் பற்றி, உயிர்க்கனலாய்க் கொழுந்து விட்டெரிந்தது. சீறி விழுந்தான்.

யஸ்வந்தை நோக்கினுன். "என்ன யோசனை யஸ்வந்த்? மேலே போகின்ருயா, அன்றி உன்னைக் கொன்று தின்றுவிடவா? போ மேலே!"

யஸ்வந்த் பெருமூச்செறிந்தது. "நிழல்விடாது தொடரும்; வினையும் அவ்வாறே. உன் இஷ்டம்," என்று சொல்லுவதுபோல் தன் உடம்பை ஒருமுறை ஆட்டிக்கொண்டது.

ஒரு நாளுமில்லாது தாஞ்ஜி தன்னைக் கோபித்துக் கொண்டதில் யஸ்வந்துக்கு வருத்தந்தான். கோபமும் உண்டாயிற்று. வேகமாகக் கோட்டைச் சுவரைக் கடந்து, உட்புறம் சென்றது. உட்புறச் சுவரைக் கெட்டியாகப் பாதங்களால் பற்றிக் கொண்டு, தன் வாயால் இடையில் கட்டப்பட்டிருந்த கயிற்றை உலுக்கியது.

தாஞ்ஜி தயாராகயிருந்தான். கையை ஒன்ருேடொன்று தட்டினுன். வாளை வாய் கவ்விற்று. கண் மூடித் திறப்பதற்குள் கோட்டைச் சுவரின்மீது நின்ருன். அவனுக்குப் பிறகு ஒருவர்பின் ஒருவராக நூறு வீரர்கள் கயிற்றினுதவியால் மேலே வந்து கொண்டிருந்தார்கள்.

யஸ்வந்த் அலுக்கவில்லை. அசையவுமில்லை. கயிறு தான் களைத்துவிட்டது. ஐம்பது வீரர்கள் கோட்டைச் சுவரை அடைந்தார்கள். குன்றில் உராய்ந்து கொண்டேயிருந்த கயிறு திடீரென்று அறுந்துவிட்டது. அந்தரத்தில் வந்துகொண்டிருந்தவர்கள் கிளம்பிய இடத்திலேயே வந்து விழுந்தார்கள். கோட்டை

மீதிருந்தவர்கள், தரையில் விழுந்தவர்களின் கதி யென்னவாயிற்ருே என்ற கவலையுடன் பார்த்துக் கொண்டே நின்றனர்.

தாஞ்ஜிமட்டும் யஸ்வந்தையே கவனித்துக் கொண்டிருந்தான். அவனிருந்த பக்கம் யஸ்வந்த் திரும்பவேயில்லை. 'என்னைக் கோபித்துக்கொண் டாய் அல்லவா? அதனுல்தான் இந்த ஆபத்து. என் மீது குறைசொல்லாதே. ஆயிரம் யானைகள் கயிற் றின்மீது வந்தாலும் நான் தாங்கத் தயார்" என்று தனக்குள்ளே முணுமுணுத்துக்கொண்டது. யஸ்வந் தைத் தூக்கிக்கொண்டான் தாஞ்ஜி. தனக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றிய யஸ்வந்த் தாஞ்ஜியின் மேலாடைக்குள் சென்று மறைந்துகொண்டது.

ஐம்பது வீரர்கள் தானிருந்தனர். பாதகமில்லை. இந்தத் தொகையே போதும். "உருளுக தலைகள்; மான மோங்குக" என்று முழங்கிக்கொண்டே கோட்டை வாசலை நோக்கித் தாஞ்ஜி நடந்தான். ஐம்பது வீரமணிகளும் அவன் பின்னர் சென்றனர்.

முதற் கோட்டைவாசலைக் காவல் செய்துகொண் டிருந்தவர்களுக்கும் மராட்டியர்களுக்கும் பெரும் போர் மூண்டது. மராட்டியர்களின் வீரா வேசத் தைக் கோட்டைக் காவலர்களால் தாங்கமுடியவில்லை. பிணமலை குவிந்தது; ரத்தவெள்ளம் பெருக் கெடுத்தது.

* * *

ராஜபக்தி ஒருபுறம்; திடசித்தம் ஒரு பக்கம். இரண்டும் துணையிருக்கும்பொழுது மராட்டியர்களுக் குக் கவலையேது! அடுத்த வாயிற்படியிலிருந்த காவ லர்களையும் மராட்டியர்கள் கொன்று குவித்தார்கள்.

தோளில் வீரலக்ஷ்மி; கையில் வாள்; முகத்தில் மலர்ச்சி; வீரத்தின் வடிவங்களான மராட்டியர், அகத்திலே ஆண்மைகொண்ட தானாஜியின்பின் மேலே விரைந்தனர்.

மறுபடியும் எதிர்த்துவந்த கோட்டைக் காவலன் உதேபானனின் பனிரண்டு குமாரர்களும் தானாஜியின் வாளுக்கு இரையானார்கள்.

அந்தப்புரத்தில் ஆனந்தமாயிருந்தான் உதேபானு. நடந்த சமாசாரங்களைக் கேட்டவுடன் ரௌத்ராகாரமான கோபம்கொண்டான். இடையிலிருந்த வாளை உருவினான்; வெளியே பாய்ந்தோடினான்.

தானாஜிக்கும் உதேபானனுக்கும் பெரும் போர்; மலையும் மலையும் மோதின; ஐந்தாறு வீரர்கள் தானாஜியைச் சூழ்ந்துகொண்டனர். புலி போல் அங்கு மிங்கும் பாய்ந்தான்; என்ன பிரயோசனம்? அன்று முழுவதும் குதிரையில் சவாரி; கயிற்றின் உதவியால் கோட்டைமீது ஏறியது; உடனே பெரும் படையை எதிர்த்து யுத்தம்.

தானாஜி களைத்துவிட்டான்; தனி மனிதன் எவ்வாறு அநேகரை எதிர்த்துப் போரிடமுடியும்? தன் பின் பக்கம் வந்த வீரனொருவனை எதிர்க்கத் தன் தலையைத் திருப்பினான்; அதே வினாடி உதேபானுவின் வாள் தானாஜியின் தலையை இரு பிளவாக்கிற்று. அடுத்த வினாடி மாவலியர்கள், உதேபானுவை வெட்டி வீழ்த்தினார்கள்; உதேபானனும் இமயம் சாய்ந்ததுபோல் தரையில் சாய்ந்தான். தானாஜியும் தரையில் கிடந்தான்.

...சரிப்பட்ட தலைகள், தலையற்ற முண்டங்கள்,

அறுபட்ட கைகள், இவைகளுக்கிடையே தாணுஜி யின் கம்பீர உருவம் கிடந்தது. மண்டையிலிருந்து உதிரம் ஆறுகப் பெருகியது.

உடைக்குள் ஒளிந்திருந்த யஸ்வந்த் தலையை வெளியே நீட்டியது. தாணுஜியின் சிரத்திலிருந்து பெருகிய ரத்த ஆற்றைப் பார்த்தவுடன் துக்கம் அதன் நெஞ்சை அடைத்துக் கொண்டது. ஏன் தலை யில் ரத்தம்? வெளியே வந்து வெகு வேகமாக தாணு ஜியின் முகத்தையடைந்தது. தலையைப் பார்த்தது. ரத்தம் அதிகமாக வெளியே போய்விட்டால் பிறகு தாணுஜியை உயிருடன் பார்க்கமுடியாது. ரத்தம் வெளியே போகக்கூடாது; தாணுஜி உயிருடனிருக் கத்தான் வேண்டும்.

உதேபானுவின் வாளால் பிளக்கப்பட்டு, ரத்தம் பெருகும் சிறு சந்தைத் தன் உடலால் அடைத்தது யஸ்வந்த். தன் இரு நாக்குகளாலும் தாணுஜியின் முகத்தைத் தடவியது.

* * *

ஐந்து முறைகள் பீரங்கிகள் அலறின. தாணுஜி சிம்மகட்டத்தைப் பிடித்துவிட்டான் என்று சிவாஜி மன்னர் தெரிந்துகொண்டார். தம் வீரர்களுடன் வெகு வேகமாகச் சிம்மகட்டை அடைந்தார்.

மண்ணில் கிடந்த மாவலியர்களின் தலைவனை, தன் ஆருயிர்த் தாணுஜியை, ஜீஜீபாய்க்கு கொடுத்த வாக்குறுதியை வெகுவிரைவில் நிறைவேற்றி முடித்த வீரமகனை, கண்டார் மன்னர். அழுதார்; அலறி ஞர்; துடித்தார்.

அப்பொழுதும் தாணுஜியின் உயிர் போகவில்லை. வலது கை ரத்தம் தோய்ந்த வாளை விடாமல் கெட்டி

யாகப் பிடித்திருந்தது; இடது கையோ தன் தலையை அதிஜாக்கிரதையாகக் காத்துவந்த யஸ்வந்தைத் தட விக் கொண்டேயிருந்தது.

மண்டியிட்டார் சத்ரபதி; தாணுஜியின் புனித உடலைத் தன் கரங்களால் தொட்டுக் கண்களில் ஒற் றிக்கொண்டார். தாணஜி முகத்தோடு தன் முகத்தை வைத்தார்.

யஸ்வந்த் தலையை மட்டும் தூக்கிற்று; தலையை மன்னனின் வலது காதிற்குள் செருகியது. அதன் கண்களிலிருந்தும் நீர் வடிந்து கொண்டேயிருந்தது.

'சிவாஜி, உன் தாயால் வந்த கேட்டைப்பார்த் தாயா? தாணுஜியின் தலைப்பாகையை உன் தாய் ஏன் வாங்கிவைத்துக்கொண்டாள்? தலைப்பாகை தலையில் இருந்தால் வாள் எவ்வாறு தாணுஜி தலை யைப் பிளக்க முடியும்! இந்த ஆபத்தும் நேர்ந்தி ராதே!' என்று சிவாஜியின் காதில் சொல்லியதோ என்னமோ?

யஸ்வந்தை அன்புடன் தூக்கித் தன் வீரர்களி டம் ஒப்படைத்துவிட்டு தாணுஜியையே சிவாஜி பார்த்துக்கொண்டிருந்தார்.

வலது கையில் பிடித்திருந்த வீரவாளைத் தோள் பட்டை வரையில் தூக்கினுன், வெற்றிவீரன் தாணுஜி சாகும் சமயத்திலும் தன் தலைவனை வணங்கினுன் வீர மைந்தன்.

உடலில் சக்தியில்லை; உயிர்போகும் தருணம். வாள்பிடித்த கரம் தரையில் விழுந்தது. யஸ்வந்தை ஒருதரம் கண்கள் நோக்கின. சிரித்தான்.

கண்களை அகலத்திறந்து சிம்மகட்டின் உயர்ந்த சிகரத்தை ஒருமுறை உற்று நோக்கினுன். திறந்த

கண்களின் வழியாக அச்சிங்கத்தின் வீர உயிர் சிம்ம கட் கோட்டையின் சிகரத்திற்கே பறந்து போய் விட்டது.

*  *  *

வெகு நேரம் ஒருவரும் பேசவில்லை. கடைசியாக யஸ்வந்தனை வைத்துக்கொண்டிருந்த வீரன், மன்னனின் வருத்தத்தைத் தணிப்பதற்காக, "இனி சிம்மகட் கோட்டை தங்களுடையதுதான்" என்றான்.

யஸ்வந்தை உற்று நோக்கினார் சிவாஜி: கலங்கிய குரலில் பேசினார். "சிம்மகட்டத்தைப் பிடித்தாய்விட்டது. ஆனால், என் ஆருயிர்ச் சிங்கத்தையல்லவா இழந்துவிட்டேன்!" தாங்கமுடியாத துக்க வெள்ளம், துளிகளாக மன்னன் கண்களின் வழியாக ஓட ஆரம்பித்தது.

"'சிங்கத்தை இழந்துவிட்டேன்' என்று ஏன் பொய் சொல்லுகின்றாய்? அதோ தான் தானாஜி படுத்திருக்கின்றானே. சிங்கத்தை இழக்கவில்லை. இல்லை. இல்லை," என்று சொல்வதுபோல் தன் தலையைக் கடகடவென்று யஸ்வந்த் ஆட்டியது.

பேதை யஸ்வந்த்! தலைப்பாகை யிருந்தால் தலையை வாளால் பிளக்கமுடியாது என்று சிறிது நேரத்திற்கு முன் நினைத்தாய். இப்பொழுது இன்னும் தானாஜி உயிரோடிருக்கின்றான் என்று மனப்பால் குடிக்கிறாய்.

*  *  *

கோட்டையின் அடிவாரத்தில் ஒரு பெரிய ஆல விருக்ஷம். மறுநாள் காலை தானாஜியின் உடலை மரத்தடியில் தகனம் செய்தார்கள்.

சாம்ராஜ்யத்தின் ஆணிவேர் எரிந்து சாம்பலாகி, ஓங்கி வளர்ந்து நின்ற ஆல விருக்ஷத்தின் ஆணி வேருக்கு உரமாகிவிட்டது.

அன்று மாலை கோட்டையில் யாவரும் தாணுஜி யின் பெருமைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த னர். அவர்களின் வருத்தத்தைக் கண்டு யஸ்வந்த் கோபமடைந்தது. எதற்காக இவர்களெல்லோரும் பிதற்றிக்கொண்டிருக்கிறார்கள்? இனி இவர்களுடன் ஒரு வினாடியுமிருக்கக் கூடாது.

மெதுவாக மூங்கில் கூடையை விட்டு வெளியே வந்தது. ஒருவருமறியாமல் கோட்டையின் அடி வாரத்தை யடைந்தது. தாணுஜியைத் தகனம்செய்த மரத்தடிக்கு வந்தது. அந்த இடத்தைவிட்டு அசை யவே இல்லை. 'தாணுஜி எங்கேயோ வெளியேபோயி ருக்கிறான். வருவான்' என்று வழிபார்த்துக் கொண்டே நின்றது.

* * *

பத்து தினங்கள் கழிந்தன. மரத்தடியைவிட்டு யஸ்வந்த் நகரவேயில்லை. வீரமணி வருகையை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும்போது வயிற்றுக் கவலையா ஏற்படப்போகிறது! பத்து தினங்களாக ஆகாரமே உட்கொள்ளவில்லை.

"தாணுஜி! தாணுஜி! சீக்கிரம் வா" இதே புலம்பல்தான்.

ஒரு மாதமும் ஓடி மறைந்தது. அன்றிரவு திடீ ரென்று வானம் கறுத்தது. மேகப்படலங்கள் ஆகா யத்தை மறைத்தன. பேய்க்காற்று அடித்தது. தாணுஜி இன்னும் வரவில்லை.

சிம்மகட்டின் சிகரத்தில் பறந்துகொண்டிருந்த

மணிக்கொடி காற்றினுல் பட படவென்று சப்தித்தது.

"என்ன சப்தம் அது?" கொடியிருந்த பக்கம் கண்களைச் சாய்த்தது யஸ்வந்த். என்ன ஆச்சரியம்!

காற்றில் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது கொடி; கொடியருகில் தாணுஜியின் உயிர் காவல் காத்து நின்றது.

வீரப் புதல்வனின் புகழுடம்பு வெற்றியின் சிகரமாகவே யஸ்வந்துக்குக் காட்சியளித்தது. மலர்ந்த முகம் வெற்றிக்களைபுடன்தானிருந்தது. எடுத்த காரியத்தை முடித்தோம் என்ற மகிழ்ச்சியால், முகத்தில் ஓர் அகம்பாவம்; ஓர் புன்முறுவல்; எல்லையற்ற அமைதி.

வெகு சீக்கிரம் தாணுஜியருகில் செல்லவேண்டுமென்று ஆசைதான். ஆனுல் உடலில் வலுவில்லையே! எந்த வழியாக முதல் முதல் இடுப்பில் மணிக்கயிறுடன் சர சரவென்று ஏறிற்றோ அதே வழியாகத் தள்ளாடித் தள்ளாடி மேலே சென்றது.

* * *

சூரியன் உதயமாகிவிட்டான். முதல் நாளிரவு சிம்மகட் கோட்டையில் சிவாஜி தங்கியிருந்தார். முதலிரவு அடித்த பெருங்காற்றில் கொடிக்கு ஏதாவது தீங்கு நேரிட்டதோ என்ற கவலை. கோட்டையின் சிகரத்தை அடைந்தார்.

அண்ணாந்து மேலே பார்த்தார். ஆனந்தமாகக் கொடி ஆடி அசைந்து கொண்டிருந்தது. கொடிமரம் கெட்டியாகத் தரையில் புதைக்கப்பட்டிருக்கின்றதா; பலமாகயிருக்கின்றதா; காற்றினுல் ஆபத்து ஒன்றும் நேரிடவில்லையே? குனிந்து தரையை நோக்கினுர்.

கொடிமரத்தைக் கெட்டியாக உடலால் சுற்றிக் கொண்டு, உடல் இளைத்த யஸ்வந்த் உயிரற்றுக் காணப்பட்டது. குனிந்தார் மன்னன்.

"ஐயோ! யஸ்வந்த்." மன்னனின் கூக்குரல் வானைப் பிளந்தது.

# முப்பது நாழிகைக்குள்

வானம் கருத்து மழை கொட்ட ஆரம்பித்தது. பளிச் பளிச் என்று வெட்டியது மின்னல்; "ஹோ ஹோ" எனப் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டு, காற்றும் உடன் சேர்ந்துவிட்டான், சிறிது தூரத்தில் காணப்பட்ட அக் கோட்டையை, காற்றும் மழையும் கலந்து தாக்கின. சத்ரபதி சிவாஜியின் தாக்குதலை மும்முறை சமாளித்து நின்ற அக்கோட்டை, மழைக்கும் காற்றுக்குமா பயந்து விடப் போகின்றது? கவலையற்று கம்பீரமாக நின்றது.

கோட்டைக்குச் சுமார் நான்கு மைல்களுக்கப்பா லிருந்த சிற்றூரின் வழியாக அவன் வந்துகொண் டிருந்தான். கொட்டும் மழைக்கும், கொடுங்காற்றுக் கும் அஞ்சிய அச்சிற்றூர் வாசிகள், தத்தம் இல்லங் களிலேயே தங்கியிருந்தனர். ஆயினும் இயற்கையின் சேஷ்டைகளைப் பொருட்படுத்தாது சென்றுகொண் டிருந்த அத்தனி மனிதனுக்கு வீடுவாசல் கிடையாது போலும்!

முகத்திலும், நீண்டு வளர்ந்திருந்த தாடியிலும் வழியும் மழை ஜலத்தை ஒரு கை வழித்து எறியும்; மின்னல் ஒளியில் அவன் கண்களுக்குத் தோன்றி மறையும் கோட்டைச் சுவர்களைக் கண்டு, "அதோ அதோ" என வாய் முழங்கும்; நீண்டவாளை வலக் கரம் பற்றி யிழுக்கும்.

அவன் மாற்றலர்தம் புலநாற்றம் விரும்பாத மராட்டிய சிம்மம்; சத்ரபதி சிவாஜி. நாட்டின் அடிமைத் தளைகளைத் தகர்த்தெறிந்து, தர்ம ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற அவனுடைய வாழ்க்கையின் லட்சியத்தையே சிதற அடித்துவிடும் போலிருந்தது எதிரிலிருந்த அக் கோட்டை.

கோட்டையை வசப்படுத்த மும்முறை அவன் வீரர்கள் முயன்றனர்; பயன் இல்லை. தானே ஓர் முறை தலைமை வகித்து அக்கோட்டையைத் தாக்கிப் பிடிப்பது, அன்றி அம் முயற்சியில் உயிர் துறப்பது என, பவானிதேவி மீது ஆணையிட்டுப் பிரதிக்ஞை செய்துகொண்டான் சிவாஜி. அவன் கட்டளைப்படி இருநூறு வீரர்கள், ஒவ்வொருவராக மாறுவேடத்துடன் அக் கோட்டைக்கும் சிற்றூருக்கும் நடுவிலிருந்த பரந்த காட்டில் வந்து, சிவாஜியின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றனர்.

சிற்றூரையும் கோட்டையையும் பிரிக்கும் அக் காட்டின் அருகில் சிவாஜி வந்து சேர்ந்தான்.

சுற்றுமுற்றும் நோக்கினன்; எவரும் காணப் படவில்லை; சற்று உரத்த குரலில் "ஜய் பவானி" எனக் கோஷமிட்டான்.

அடுத்த வினாடி, பக்கத்திலிருந்த வட விருக்ஷத்தின் கிளையிலிருந்து, தரையில் ஓர் உருவம் குதித்தது; "ஜய் பவானி" என பதிலளித்தது. "புதிதாக வந்து சேரும் வீரர்களை, அதோ இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள மாந்தோப்பிற்குள் அழைத்துச் செல்ல நான் நியமிக்கப்பட்டுள்ளேன். வா, போகலாம்" என்றது சிவாஜியை நோக்கி.

ஒற்றையடிப் பாதை வழியாக, நடந்தனர் இருவரும்.

"எல்லோரும் வந்து சேர்ந்துவிட்டார்களா?" என்று கேட்டான் சிவாஜி.

"அநேகமாக வந்துவிட்டனர். சத்ரபதி வந்த வுடன் கோட்டையைப் பிடிக்க வேண்டும். அவர் இன்னும் வந்து சேரவில்லை. அதே கவலையாக யிருக் கிறோம்" என்றான் வழிகாட்டி.

மாறு வேடத்திலிருந்த தன்னை, அவ்வீரனால் அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை என்று மன்னன் அறிந்துகொண்டான். அவன் அருள் முகத் தில் புன்னகையின் சாயல்தோன்றி மறைந்தது; பேச்சை வளர்த்தினார். எப்போதுமே சிவாஜி மகா மோசம். வீரர்களைத்தான் யுத்த தெய்வத்திற்கு பலி கொடுக்கப் போகின்றானே குறித்த காலத்தில் வந்து சேர்ந்தாலென்ன? மூளை யில்லாதவன்."

வழிகாட்டிச் சென்ற வீரன் "சட்" டென நின்றான்; அவன் முகம் சிவந்தது.

"என்ன சொன்னாய்?"

உறுமினான்.

சாவதானமாகவே சிவாஜி பதில் அளித்தான்.

"ஏன், என்ன கோபம்? சிவாஜி இன்னும் வந்து சேரவில்லை என நீ தெரிவித்தாய். அவன்—"

வீரனின் கோபம் கரைபுரண்டோடியது. "டேய், இன்னுமொருமுறை எம் தலைவனை, 'அவன் இவன்' என பேசினாயோ நாக்கைத் துண்டித்து விடுவேன். ஜாக்ரதை. ஓஹோ!" அவ்விருள்வேளை யில் கர்ஜித்தான் வீரன்.

விஷமமாகச் சிரித்தான் வீரர் நாயகன். "ஐயா

கோபித்துக் கொள்ளாதே. சிவாஜியும் நானும் உயிர் சிநேகிதர்கள். சிநேக வாஞ்சையால் அவ்வாறு பேசி விட்டேன். மன்னித்துக்கொள்."

ஆச்சர்யத்தால் வீரனின் விழிகள் அகன்றன. தன்னுடன் வருபவர் சிவாஜி மன்னரின் நண்பர் எனக் கேட்க அவன் பூரிப்படைந்தான். மன்னவனிடம் தன்னை அறிமுகம் செய்து வைக்கும்படி கெஞ்சினான்.

கால் நாழிகைக்குள் அவன் வரலாறு முழுவதை யும் சிவாஜி கிரகித்துக் கொண்டான்.

அவ் வீரனின் பெயர் மல்லாரி ராவ்; சிவாஜியை அதுவரை நேரில் பார்த்தது கிடையாது. மராட்டிய சைனியத்தில் அவன் சேர்ந்து, சிறிது காலம்தான் ஆயிற்று. அவனுக்கு மணமாகிவிட்டது. பத்து தினங்களுக்கு முன்புதான், அவன் மனைவி ஓர் ஆண் மகவை ஈன்றாள். வயது முதிர்ந்த தாயிடம் மனைவி யும் குழந்தையும் இருக்கின்றனர்.

ஒரே மூச்சில் வரலாறு முழுவதையும் கொட்டி விட்டான் இளைஞன்; சிவாஜியைத் தரிசிக்க வேண்டு மென்று அவ்வளவு ஆசை.

"இன்னுமொரு முக்கியமான விஷயம் இருக் கிறது" என்றான் சிவாஜியை நோக்கி.

"ஓ, அப்படியா? அது என்னவோ?"

"சொந்தத்தில் ஓர் வீடு வாங்க வேண்டுமென என் தாய் ஆசைப்படுகிறாள். பழுத்த கிழம். அவள் ஆசையை எப்படியாவது பூர்த்தி செய்ய வேண்டும். என்ன செய்வது? என் கையிலோ ஒரு மோஹரா கூடக் கிடையாது. அதெல்லாம் சரி. என்னை மன்னர் திருமுன் அழைத்துச் சென்று, அறிமுகம் செய்து வைக்கின்றீர்களா?

சிறிதுநேரம் யோசிப்பது போல சிவாஜி பாசாங்கு செய்தான்; இழுத்தாற் போலப்பேசினான்.

"அரசர் முன்னிலையில் பேசுவதற்கு நீ பழகிக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் யோசிக்கின்றேன். எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. **நான்தான் சிவாஜி என்று வைத்துக் கொள்வோம்**; என் கேள்விகளுக்கெல்லாம் நீ பதில் சொல்லு. ஓர் ஒத்திகை பார்ப்போம் சரிதானா?"

"தயார்."

கனைத்துக் கொண்டான் சிவாஜி.

"உன் பெயர் மல்லாரிராவ் தானே?"

"ஆமாம் சர்க்கார்."

"மல்லாரி, யுத்தத்தின் கோரங்களைவிட மனைவாழ்க்கைதான் சிறந்தது. உனக்கு வயது முதிர்ந்த தாயும், இள மனைவியும் இருப்பதாக எம் நண்பர் தெரிவித்தார். ஒருக்கால் யுத்தத்தில் நீ இறந்துவிட்டால், உன் குடும்பத்தை யார் பாதுகாப்பது?"

விறு விறுப்பாக பதிலளித்தான் மல்லாரி.

"சர்க்கார், யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவது தங்கள் பொறுப்பு; குடும்பக் கவலை எனக்கு."

கடகடவென்று மராட்டியமணி சிரித்தான். "சிவாஜியின் முன்னிலையில் நிச்சயமாக இவ்வாறுகவா பதில் சொல்லுவாய்?"

"சந்தேக மன்னியில். பைத்தியக்காரக் கேள்வியாகவல்லவா இருக்கிறது? தந்தையர் நாடு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடந்த மராட்டியநாடு, சிவாஜியின் மகுடிகேட்டு சீறிப் படம் விரித்தாடும் இப்புனித வேளையில் என்

வீட்டைப் பற்றியா நான் கவலைப்பட வேண்டும். சட் கேவலம்"

சிவாஜி ஸ்தம்பித்துவிட்டான். தன்னைப் பெற்றெடுத்த தாய்த்திருநாட்டின் மீது அவ்விளைஞனுக்குள்ள பற்றைக் கண்டு அவன் உள்ளம் பெருமித முற்றது. மாந்தோப்பை இருவரும் அடைந்தார்கள். சிவாஜியை அங்கேயே விட்டுவிட்டு வந்தவழியே திரும்பினுன் மல்லாரி.

* * *

ஐந்தாறு நாழிகை சென்றது. மராட்டிய வீரர்கள் அனைவரும் அக்காரிருளில் யுத்த சன்னத்தராய் நின்றனர். வலக்கையில் மராட்டியரின் மணிக் கொடியை ஏந்திய வண்ணம் சிறிது தூரத்தில் நின்று கொண்டிருந்தான் மல்லாரி.

எல்லோரும் மௌனமாய் நின்றனர். ஏதேதோ யோசித்தான் சிவாஜி. மடியில் தவழ்ந்த குழந்தைகளை விலக்கி, நாட்டின்பொருட்டு அங்கு குழுமியிருக்கும் தந்தையரைப்பற்றி நினைத்தான்; அன்று வரை மனைவியரைவிட்டு அகலாதிருந்த கொழுநர்களைப்பற்றி யோசித்தான்; கொசு பரவாமல் துயில் காத்த அன்னைமார் கண்பிசைய அவர்களை நீத்து வந்த மைந்தர்களைப் பற்றியும் அவன் சிந்தித்தான். மல்லாரியின் நினைவும் அவனுக்கு வந்தது.

"மல்லாரி ராவ்" என விளித்தான் சிவாஜி. பறந்து வந்தான் மல்லாரி. மன்னவன் அருகில் நின்றுன். தம் வலது கரத்தை அவன் தலைமீது வைத்தான் சிவாஜி.

"குழந்தாய், இன்றைய யுத்தத்தில் என் உயிருக்கு ஏதாவது ஆபத்து நேரிடலாம். இந்தா,

இதோ இருக்கும் உத்தரவை ஜாக்கிரதையாக வைத்துக்கொள். இவ் வுத்தரவைக்கொண்டு, கஜானுவிலிருந்து இருநூறு மோஹராக்கள் பெற்றுக்கொள்; உன் தாய்க்கு அவள் விரும்பிய ஒரு வீட்டை வாங்கிக்கொடு."

மல்லாரிக்கு ஒன்றும் புரியவில்லை. தன்னிடம் இரு நூறு மோஹராக்கள் பெறக்கூடிய உத்தரவை அளித்தவருடைய குரலும், காட்டு வழியாகத் தன்னுடன் பேசிக்கொண்டுவந்தவரின் குரலும் ஒன்ருகவே யிருந்தது. ஒருக்கால் சத்ரபதியிடம் சிபார்சு செய்து இவ் வுத்தரவைப் பெற்றிருப்பாரோ.

தவித்தான் மல்லாரி; எதிரே நோக்கி நின்ருன்.

"ஐயா, மன்னவரிடம் அறிமுகம் செய்துவைக்கிறேனென்றீர்களே"

சாவதானமாகப் பதிலளித்தான் சிவாஜி.

"மல்லாரி, உன்னுடன் காட்டு வழியே வந்த அடியேன்தான் சிவாஜி".

என்ன! திடுக்கிட்டான் மல்லாரி. அவன் உடல் ஆடியது. ஏதேதோ சொல்ல முயன்ருன். அதற்குள் மராட்டிய வீரர்கள் கோட்டையை நோக்கி நடந்தனர்.

கோட்டைக்கு வெகு சமீபத்தில் வந்துவிட்டனர். தலைகால் தெரியாமல் அவர்களுடன் மல்லாரிசென்றுகொண்டிருந்தான்.

தன்னுடன் காட்டுவழியாக வந்தது சிவாஜியா? தான், உதாசீனமாகப் பேசியது சத்ரபதியையா? தவறுகளையெல்லாம் மன்னித்ததுமன்றி, இரு நூறு மோஹராக்கள் சம்மானம் வழங்கியிருக்கின்ருரே! ஊர் திரும்பியதும் இச் சம்பவத்தை கண்டிப்பாகத்

தாய்க்குத் தெரிவிக்கவேண்டும்; பிறந்த ஆண் குழந்தைக்கு சிவாஜி என்றுதான் பெயரிடவேண்டும். அரசர் பெருமான் அளித்த உத்தரவை ஒரு முறை முத்தமிட்டான் இளைஞன்.

சந்தடி செய்யாது, மராட்டிய வீரர்கள் கோட்டைக் கதவுகளை அணுகிவிட்டனர். அந்த நிமிஷம் வரையில் சிவாஜியின் முகத்தை மல்லாரி பார்க்கவில்லை.

நிசப்த நள்ளிரவு; மழையும் நின்றுபோயிருந்தது. எப்போது தீவட்டிகளைக் கொளுத்துவார்கள், உடனே அரசனது வதனத்தைப் பார்க்கவேண்டும் என்று துடியாய் நின்றான் மல்லாரி.

ஏக காலத்தில் ஐம்பது தீவட்டிகள் பிரகாசிக்கத் தொடங்கின.

சிவாஜியை உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் கூர்ந்து ஒரு முறை மல்லாரி பார்த்தான்.

அருள்வழியும் கண்கள்; பரந்த நெற்றி; அகன்ற நாசித்துவாரங்கள்; மலையெனப் பருத்த தோள்கள்.

மல்லாரியின் மகிழ்ச்சிக்கு எல்லையேது? அவனால் தாங்கவே முடியவில்லை.

அவனையுமறியாது, உரத்த குரலில் பலங்கொண்டமட்டில் கர்ஜித்தான்.

"சிவாஜி மகாராஜாவுக்கு"

"ஜே" என்று ஏக காலத்தில் ஜெயகோஷமிட்டுக்கொண்டு மராட்டிய வீரர்கள் முன்னேக்கிப் பாய்ந்தனர்.

பயங்கரமான யுத்தம் ஆரம்பமாகிவிட்டது.

காயமடைந்து தரையில் உருண்டவர்கள்மீது உயிரிழந்தவர்கள் வீழ்ந்தனர்.

போர் ஆயுதங்களின் புலம்பல்களை அடக்கி யெழுந்தது. மராட்டியரின் "ஜே" கோஷம். இவை யிரண்டையும் மீறி எழுந்தது, எதிரிகளின் "ஐயோ" என்ற ஓலம்.

உதய சூரியனின் பொன் கிரணங்கள் தலையை நீட்டின ; யுத்தமும், மராட்டியர்களுக்கு வெற்றியில் முடிந்தது. கருத்தில்கொண்ட கருமத்தை முடித்து ஜயசீலனாகக் கோட்டையுட் புகுந்தான் சிவாஜி.

கதவுகளையெல்லாம் தாண்டிக்கொண்டு கோட்டையின் மேல் தளத்திற்கு வந்துவிட்டான். சுவரின் மேல்புரம் பீரங்கி வைப்பதற்காக ஏற்படுத்தப் பட்டிருந்த சிறிய இடைவெளியில், மராட்டியர் கொடி ஆடி அசைந்துகொண்டிருந்ததை, அவன் கண்கள் நோக்கின. தனக்கும் முன்பாகக் கோட்டையினுட் புகுந்தது யாராக இருக்கமுடியும் ; யோசித்தான் ; சுற்றுமுற்றும் நோக்கினான் ; அடுத்த வினாடி "ஆ" வென்று அலறினான்.

கோட்டை வீரர்கள் மூவர் தரையில் இறந்து கிடந்தனர். அவர்களுக்கு மத்தியில் மல்லாரி காணப் பட்டான். யுத்த கோடரியால் உச்சிமுதல் வாய் வரை, அவன் தலை இருகூறுக்கப்பட்டிருந்தது. வலது கரம், தாயின் மணிக்கொடியைத் தாங்கிநின்ற மூங் கில் கழியை இறுகப் பிடித்திருந்தது ; ஆகாயத்தை நோக்கி அக்கரம் நீண்டிருந்தது. அரசர் பரிசாக அளித்த உத்தரவை இடது கரம் கெட்டியாகப் பிடித்திருந்தது.

இரண்டாக்கப்பட்டிருந்த தலையின் ஒரு பக்கத் துக்கண்; மராட்டிய மணிக்கொடியை கவனித்துக் கொண்டிருந்தது ; சரிந்திருந்த இடதுகண்ணோ

மராட்டிய நாட்டின் தவச்செல்வன் அளித்த உத்தரவை மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தது.

மன்னன் சிவாஜி நடுங்கினான்.

"மல்லாரியா ?"

ஆம். மல்லாரிதான். தாய் நாட்டின் திருப்பணியில், தன் உயிரையே தியாகம் செய்து தரையில் கிடந்தவன் மல்லாரிதான்; பிறந்த ஊரில் பெற்ற தாய்க்கு வீடுவாங்க ஆசைகொண்ட மல்லாரி. தாய் நாட்டின் சேவையில் வீர வீடு பெற்றுவிட்டான்.

மல்லாரியின் உடலையும் கொடியையும் மாறி மாறிப் பார்த்தான் சிவாஜி.

அவன் கண்கள் கலங்கின.

"தன்னைப் பெற்ற தாயையும் தன் ஆசை மனைவியையும்விடத் தாய் நாட்டின் திருக்கொடிதான் சிறந்தது, எனச் சேவை செய்தாய். மல்லாரி"

அதற்குமேல் வார்த்தைகள் வரவில்லை.

"ஓ" வென்று அழுதான் சிவாஜி.

"சோ" என மீண்டும் மழைபொழிய ஆரம்பித்தது.

# அமர வாழ்வு

**அ**ப் பெரிய ஏரியின் கரையில் வளர்ந்து நின்ற ஆல விருக்ஷத்தின் அடியில் படுத்திருந்தான் அகில சிங்கன். அந்தி மறைந்து வெகு நேரமாகிவிட்டது. வான வீதியில் பூர்ணசந்திரன் உல்லாசமாக பவனி வந்து கொண்டிருந்தான். அந்தி மறைந்து அந்த காரம் சூழட்டும்; அன்றி, பூமியே அதிர்ந்து தூள் தூளாகட்டும்; மாயாவதியின் நினைவினுல் வாடும் அகிலன் இவ்வற்ப விஷயங்களை யெல்லாம் கவனிக் கவா போகிறுன்?

மனம் அகிலனை எங்கெங்கோ இழுத்துச் சென் றது. பரந்து குளிர்ந்திருந்த நீல வானிலும், பசுமை பொருந்திய நில வனப்பிலும், சுற்றிலும் இன்ப மூட் டிய இயற்கைக் காட்சிகளிலும் மாயாவதியின் ஜகன் மோகன வடிவை மட்டுமே அவன் கண்டான். போதா தற்குப் பழைய காலக்காட்சிகளெல்லாம் அவன் மனக்கண் முன்பு தோன்ற ஆரம்பித்தன.

அப்போது அகிலனுக்கு வயது ப்ன்னிரண்டு. ஐந்தே வயது நிரம்பியிருந்த மாயாவதியுடன் மாலை வேளைகளை இவ் வேரிக்கரையில்தான் கழிப்பான்.

குறும்பும் அன்பும் நிறைந்தகமலக் கண்கள்; முத்தும் பவளமும் கோத்த ஹாரம் போன்ற பேச்சு- இவைகளுக்கு மாயா சொந்தக்காரி. சாந்தி மயமான சாயங்கால வேளையிலே, ராணி மீராபாயின் கீதங் களையும், கும்பராணுவின் வீரச் செயல்களைக் குறிக்

கும் பாட்டுக்களையும் மாயா தன் குயிலிசைக் குரலால் கொட்டும் போது அகிலனின் உடலும் உயிரும் அணு அணுவாய்க் கசிந்து உருகும்.

பாடி முடிப்பாள்; உடனே அவளது சிறு கன்னங்களில் இருகுழிகள் தோன்றும்; மலர்ச் சிரிப்பொன்று வெடிக்கும். தொடர்ந்தாற் போல, "அகிலா, பத்மினியின் சரிதம் சொல்ல மாட்டாயா?" எனக் கொஞ்சும் கெஞ்சு மொழிகள் வெளி வரும்.

"அலாவுதீன் கரங்களிலே அகப்படுவதா?" எனக் கொக்கரித்து, அக்கினியில் மாண்ட வீரவனிதையின் திருக் கதையை அகிலன் சொல்லிக் கொண்டே போவான். தலையை ஒரு பக்கம் சாய்த்து சுவாரஸ்யமாக மாயா கதை கேட்டுக் கொண்டே வருவாள்.

"பத்மினியின் முகத்தை ஒரே ஒரு தடவை நிலைக் கண்ணாடியிலாவது பார்க்க வேண்டுமென்று அலாவுதீன் ஆசை கொண்டான்" என அகிலன் சொல்ல வேண்டியது தான் தாமதம்; கொதித்தெழுவாள் குழந்தை. "அந்த அலாவுதீனுக்கு அவ்வளவு தைரியமா?" எனக் குதிப்பாள். சினம் கொண்ட காலத்தில் அவள் முகச்சந்திரனில் ஏற்படும் மாறுதல்களை ரசித்துக் கொண்டே யிருப்பான் அகிலன்.

தான் ஒவ்வொரு கணமும் வணங்கி வரும் தன் இஷ்ட தெய்வத்தை இனி பார்க்கவே கூடாது என்று சித்தூர்க் கோட்டையின் மகாராணா தனக்கு இட்ட கட்டளையை நினைக்க நினைக்க அகிலன் மனம் வெந்தது. அவன் கோபம் கரை புரண்டது.

"என்னைத் தடுக்க இவருக்கு என்ன உரிமையிருக்கிறது?" என்று ஏரியை நோக்கி உறுமினான்.

"எனக்கா இல்லை?" என்னும் வார்த்தைகள் அகிலனுக்குப் பின்புறமிருந்து வந்தன. படுத்திருந்த அகிலன் பாய்ந்தெழுந்தான். மாயாவின் நினைவில் உலகையே மறந்திருந்த அகிலனுக்கு மகாராணா வந்தது கூடத் தெரியாதது ஆச்சரியமன்று.

அலட்சியமாக ராணாபேச ஆரம்பித்தார். "மாயாவதியின் மோகத்தில் கடமையை மறந்த அகிலா, உயிர்க் காதலியை விட உயர்நாடுதான் ரஜபுத்ர வீரனுக்கு உகந்ததாகும். அதோ கோட்டையினுள் ரஜபுத்ர வீரர்கள் அனைவரும் நாளைக் காலையில் தொடங்கும் ஓங்தெல்லாக் கோட்டை முற்றுகைக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றனர். நீயோ இங்கே இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருக்கிறாய். உன்னுடன் வார்த்தைகளை வளர்க்க எனக்கு இஷ்டம் இல்லை. காதல் நோயால் வருந்தும் நீ நாளை முற்றுகையில் எவ்வாறு சமர் செய்கின்றாய் என்பதை நான் கவனித்துக் கொண்டே இருப்பேன். போரில் வெற்றி வீரனாகத் திரும்புவாயாகில் மாயாவதி உன் மனைவியாவாள். அன்றி ரத்தப் பெருக்கெடுத்தோடும் யுத்த பூமியில் பின்னும் வாள்களுக் கிடையில் மார்பில் காயங்களுடன் நீ வீர சுவர்க்கம் அடைந்தாலும் கவலை இல்லை; மாயாவதி உன்னை நிச்சயம் பின் தொடர்வாள். போ. உன் கடமையைச் செய்."

அரசர் மறைந்து விட்டார்.

வெற்றி வீரனாய்த் திரும்பினாலும், வீர சுவர்க்கம் சென்றாலும், இனி என்றும் எப்பொழுதும் மாயா தன்னுடையவள் தான் என்ற நினைவினால் அகில

8

னின் உயிரும் உடலும் பூரித்தன; தலையை நிமிர்த்தினான்; சுற்றிலும் அவன் கண்கள் நோக்கின.

சந்திரனின் ஒளியிலே மாயா முகம் காட்டினாள்; அருகில் அரும்புகளாக நின்ற மலர்களிலே சிரித்து நின்றாள்; காற்றில் அசையும் ஏரி ஜலத்தின் சிற்றலைகளில் குதூகலித்து விளையாடினாள்.

மரத்திலும் செடியிலும், மலையிலும் மடுவிலும், ஏரியிலும் ஆற்றிலும் எங்கும் மாயாவின் கோமள வதனம் அகிலனுக்குக் காட்சி அளித்தது.

யுத்த களத்தை நோக்கி அவன் விரைந்தோடினான்.

*　　　*　　　*

குளிர்ந்த காற்றின் ஸ்பரிசம், நெற்றியைத் தடவித் தட்டி யெழுப்பச் சூரியன் கண்விழித்தான். காலைக் கதிரவனின் முதற்கிரணங்கள் ஓங்கெல்லாக் கோட்டையின் மதிற் சுவர்கள்மீது தாக்கின.

கோட்டை வாயிலின் பெருங்கதவுகள் மூடித் தாழிடப் பட்டிருந்தன. யானைப் படையின் உதவியைக் கொண்டு கோட்டைக் கதவுகளைப் பலமாகத் தாக்கி எதிரிகள் உள்ளே நுழைந்து விடாதபடி, கதவுகளின் வெளிப் புறத்தில் ஆயிரக் கணக்கான நீண்ட ஈட்டிகள் மிக அழகாகப் பொருத்தப் பட்டிருந்தன. வாயிலைக், காவல் புரிந்தபடி ஆயிரக் கணக்கான வீரர்கள் நின்று கொண்டிருந்தனர்.

திமுதிமு வென்று குதிரைப் படைகளும் யானைப் படைகளும் வரும் சப்தம் கேட்டது; தூரத்தில் தூள் பறந்தது. சித்தூர் வீரர்கள் கோட்டையை நெருங்கிவிட்டனர்.

கடும் போர் ஆரம்பமாகி விட்டது. 'ஜய் ஏக

லிங்கா !' 'ஜய பவானி' என்ற கோஷங்கள் எங்கும் முழங்கின. ஆயிரக்கணக்கான வாட்களில் சூரிய கிரணம் பாய்ந்து சென்றது. வாளொடுவாள் மோதித் தெறிக்கும் சப்தமும், யானைகளின் பிளிறல்களும் காதைச் செவிடுபடச் செய்தன. எதிரிகள் ஒருவரை ஒருவர் வெட்டி வெட்டி வீழ்த்தினர்; கொன்று குவித்தனர்.

'ஜய் ஏகலிங்கா' என்றோ, 'ஜய் பவானி!' என்றோ அகிலன் முழங்கவேயில்லை. 'மாயா, மாயா' எனக் கோஷித்துக்கொண்டே சித்தூர் வீரர் முன்னணியில் இருந்த அவன் மேன்மேலும் முன்னேறிக் கொண்டிருந்தான். ராஜபக்தி ஒருபுறம் திடசித்தம் மற்றொரு புறம்; போதாததற்குக் கன்னி மேற்கொண்ட காதல் வேறு.

எதிரிகளைத் துவம்சம் செய்தான் அகிலன். அவன் கரம் ஒரு முறை வாளை வீசும்; அவனைத் தடுக்க முயலும் வீரனின் தலை தனியாகப் பூமியில் உருண்டோடும்; உடல் குவியலாகத் தரையில் விழும். சதக் சதக்கென வெட்டினான்; துண்டுகளாகத் தரையில் கொட்டினான்.

ரத்த வெள்ளத்தில் மூழ்கிய யுத்த பூமி சிவப்புச் சகதியாகக் காட்சி அளித்தது. சரிபட்ட தலைகள், சிரமற்ற முண்டங்கள், அறுபட்ட கைகள், கால்கள் என்பவைகளையெல்லாம் அகிலன் கவனிக்கவேயில்லை வாடியிருந்த கழுகுகள் வயிறார உணவுகொள்ள வான வீதியில் தயாராயிருப்பதையும் அவன் நோக்கவில்லை.

தோளில் வீரலட்சிமி, கையில் வாள், முகத்தில் பரபரப்பு, அகத்தில் மாயாவதியின் உருவம்—இவை

களைத் தாங்கிய அகிலனது கவனமெல்லாம் எதிரே காட்சியளித்த கோட்டைக்கதவுகள் மீதுதான் இருந்தது.

எதிரிகளின் எண்ணிக்கை மிகக் குறைந்து விட்டது. அகிலனும் அவனைச் சார்ந்தவர்களும் கோட்டை வாயிலின் சமீபத்திற்கு வந்து விட்டனர்.

கோட்டைக் கதவுகளை அகிலன் கண்கள் ஒரு முறை நோக்கின. கதவு திறக்கப்பட்டால் வெற்றி நிச்சயம்; வெற்றி அடைந்தால் மாயா தன்னுடையவள் தான். அகிலனுக்கும் மாயாவுக்கும் இடையே மலையாக நின்றவை அக்கதவுகளே. மாயாவை அவன் அடைய வேண்டுமானால் கோட்டைக் கதைவுகளைத் தகர்த்தாகிலும் உள்ளே போகவேண்டும்.

"யானைகளைக் கொண்டு கதவுகளைத் தகர்த்தெறியுங்கள்" என்று கத்தினான்.

யானைகளை அங்குசத்தினால் குத்தினர்; உரப்பினர்; பலன் இல்லை. நீண்ட ஈட்டிகள் பொருத்தப் பெற்றிருந்த கதவுகளின் அருகே செல்லவும் அவைகள் மறுத்தன.

அகிலனுக்கோ அவசரம்; என்ன செய்வது என்று ஒரே வினாடி தான் யோசித்தான். தன்னையே அழித்துக் கொண்டாலும் உள்ளே போகத்தான் வேண்டும்.

"வீரசுவர்க்கம் அடைந்தாலும் மாயா உன்னுடையவள் தான்" என்ற மகாராணாவின் மொழிகள் அவன் காதுகளில் ரீங்காரம் செய்தன.

"சரி" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்; அவன் முகத்தில் புன்முறுவல் தோற்றியது.

கண்ணிமைப்பதற்குள் கதவுகளின் சமீபம் சென்று நின்ருன்.

கதவுகளில் நீட்டிக் கொண்டிருந்த ஈட்டிகளில் சிலவற்றை அகிலனின் முதுகு மறைத்தது. தன் எதிரில் நின்ற யானைப்பாகனை நோக்கினுன். கவலையே யற்ற கம்பீரக் குரலில் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

“யானைப் பாகா, என் உடல் மறைத்துக் கொண்டிருக்கும் ஈட்டி முனைகளை உன் யானையால் பார்க்க முடியாது. நானே சீக்கிரம் கோட்டையினுட் புக வேண்டும். ஆகையால் என்னை நோக்கி உன் யானையை முட்டவிடு.”

காதலில் நைந்திருந்த அகிலன் மனம் கல்லாகி விட்டது; தான் விரும்பிய பெண்ணிற்காக ஆயிரம் கழுவில் சித்திரவதை செய்யப்பட்டு மாளவும் தயாராய் நின்ருன்!

யானைப்பாகன் திகைத்தான்.

“என்ன?”

“என்னவா? என் உத்தரவின்படி நடக்கிருயா அல்லது இவ்வாளால் உன் மண்டையைப் பிளக்கட்டுமா?”

மாவுத்தனுக்கு வேறு வழி யில்லை. சுமார் நூறு கஜத்திற்கப்பால், மிகப்பலம் பொருத்திய யானை ஒன்று கொண்டு செல்லப்பட்டது. கோட்டை மீதிருந்தவர்களும், சுற்றி நின்றவர்களும் யுத்தத்தையே மறந்து அகிலனையும், யானையையும் விழித்தகண் விழித்தபடியே நோக்கலானுர்கள்.

“அகில சிங்ஜி, தயார்தானு?” என்ருன் யானைப்பாகன்.

"யுத்த பூமியில் மார்பிற் காயங்களுடன் மரிக்க வேண்டும்" என்ற ராணாவின் கட்டளை அகிலனுக்கு ஞாபகம் வந்தது. யானைப்பாகனை நோக்கி, "ஒரு விநாடி இரு" என்றான்.

கதவுகளை நோக்கித் திரும்பி நின்றான்; வாள் பிடித்திருந்த அவன் வலதுகரம் ஆகாயத்தை நோக்கி உயர்ந்தது. அகிலன் மார்பிற்கும் ஈட்டிக் காட்டுக்கும் நடுவில் அரை அங்குல இடை வெளிதான் இருந்தது.

"சலோ" என்ற உத்தரவு யானையின் காது களில் விழுந்தது; நீண்ட அங்குசம் அதன் மத்தகத் தில் பாய்ந்தது. "ஹோ" என்று பிளிறிக் கொண்டே முன் நோக்கி அந்த மாம்ச பர்வதம் பாய்ந்தது.

"மாயா" என்று அண்டகடாகத்தையே முட் டும் தொனியில் கோஷித்தான் அகிலன்.

வடுக்களே இல்லாமல் மொழு மொழு வென் றிருந்த அகிலன் முதுகில் தன் உடற்பளு முழுவதை யும் சிரசில் கொண்டு வந்த கஜேந்திரன் ஊழிக் காற் றின் வேகத்தில் முட்டியது.

கண்ணிமைப்பதற்குள் கோடி ஊற்றுகளாக அகிலன் உடலிலிருந்து ரத்தம் பீறிட்டடித்தது படாரென்று கோட்டைக் கதவுகளும் திறந்து கொண்டன.

ஜய பேரிகைகள் முழங்கின; மன்னன் இட்ட கட்டளையை நிறைவேற்றி ஜயசீலனாகக் கோட்டைக் குள் முதல் முதலாக அகிலன் பிரவேசித்து விட் டான். சித்தூர் வீரர்களுக்கு எப்பேர்ப்பட்ட வெற்றி!

ராணுவும் மற்றவர்களும் அகிலன் உடலை மெல்ல ஈட்டிகளிலிருந்து விடுவித்தனர். அவனுடைய உடல் துவண்டு விழுந்தது; அப்பொழுதும் ரத்தம் தோய்ந்த வாளை அவன் கரம் கெட்டியாகப் பிடித்திருந்தது. உயிர் இன்னும் போகவில்லை.

மண்டியிட்டார் ராணு; அகிலனின் புனித உடலைத் தம் கரங்களால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டார்; அவன் முகத்தோடு தம் முகத்தை வைத்தார்.

வலது கையில் பிடித்திருந்த வீரவாளை ஒரு முறை தோள்பட்டைவரையில் தூக்கினான் அகிலன்; சாகும் சமயத்திலும் தன் தலைவனை வணங்கினான் அவ் வீரமகன்.

உயிர் போகும் தருணம்; வாள் பிடித்த கரம் தரையில் விழுந்தது. ஈட்டிகள் பாய்ந்து ரத்தம் கசிந்தோடும் கண்களை அகிலன் திறக்க முயன்றான்; முடியவில்லை. வாயைத் திறந்தான்; வாயிலிருந்தும் ரத்தம் வழிந்தோடியது.

"மாயா" என வாய் முணு முணுத்தது. அத் தாரக மந்திரத்துடன் அவளைத் தேடிக்கொண்டே அகிலன் உயிர் உடலை விட்டு வெளியே ஓடி விட்டது.

இந்தக் காட்சியை மகாராணுவால் தாங்க முடியவில்லை. கோடி அகிலர்களைப் பெற்றெடுக்கும் ராஜஸ்தானத்தின் தலைவர், ஆண் சிங்கங்களைத் தன் உந்திக் கமலத்தில் சதா காலமும் வைத்திருக்கும் பாக்கியம் செய்த ராஜபுதன வீர நாட்டின் ராணுதான்; இருந்தால் என்ன?

தாங்க முடியாத துக்கவெள்ளம் நீர்த்துளிகளாக ராணுவின் கண்களின் வழியே ஓட ஆரம்பித்தது.

"ஆ! அகிலா" என்று அவர் அலறினுர்.

"ஐயோ, அகிலா" என ஒலித்தது ராஜபுதனம் முழுவதும்.

* * *

அந்தி மறைந்து வெகு நேரமாகி விட்டது. வான வீதியில் பூர்ண சந்திரன் கொலு வீற்றிருந்தான். அப்பெரிய ஏரிக் கரையில் வளர்ந்து நின்ற ஆல விருக்ஷத்தியினடியில் ஒன்றன்மீது ஒன்ருகச் சந்தனக் கட்டைகள் அடுக்கப் பட்டிருந்தன. சுற்றிலும் கூட்டமாக ராஜபுத்ரர்கள் நின்றனர்.

தலைவன் கட்டளைப்படி மார்பில் எண்ணற்ற காயங்களைப் பரிசாகப் பெற்று வீரசுவர்க்கம் புகுந்த அகிலனைப் பின்பற்ற, மாயா தயாராய் நின்றிருந்தாள். நன்னீராடி மஞ்சள் ஆடை தரித்து நெற்றியில் திலகமணிந்திருந்த அப் பெண் தெய்வம் சோபையுடன்தான் விளங்கினுள்.

அகிலனின் உடலை நோக்கினுர் ராணு.

"அமர வாழ்வு பெற்றுவிட்ட அகிலா, நான் எண்ணிய கருமத்தை இனிதே முடித்தாய். இதோ மாயாவதியைப் பெற்றுக்கொள்!" என்று தழு தழுத்த குரலில் மாயாவை அகிலனுக்கு அர்ப்பணம் செய்தார் மன்னர்.

கட்டைகளின்மீது அகிலன் உடலைக் கிடத்தினுர்கள்.. தீ மூட்டப் பெற்றது.

மும்முறை அக்கினியை வலம் வந்தாள் மாயா; அகிலனின் பாதங்களைத் தன் சிரத்தால் வருடினுள். சுற்றி யிருந்தவர்களைப் பற்றிய நினைவே அவளுக்கு இல்லை. சாவாதானமாக கட்டைகளின் மீது ஏறினுள்; அருகில் படுத்தாள்.

வந்தவர்கள் கோட்டையை நோக்கித் திரும்பினர். சிறிது நேரம் சென்றது. அகிலன் உடலை மாயாவதி கட்டித் தழுவினுள்; அவன் முகத்தில் முத்த மிட்டாள்.

அகிலனையும் மாயாவதியையும் தீ நாக்குகள் கட்டித் தழுவின; முத்தமிட்டன.

# அர்ப்பணமும் தர்ப்பணமும்

**அ**ப்பெரிய குண்டத்திலிருந்து அக்னி கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. மேலும் மேலும் சந்தனக் கட்டைகளைக் குண்டத்தினுள் கொட்டிக் கொண்டே யிருந்தனர். தாம் அடையப்போகும் இன்ப உணவை நினைத்து நினைத்து தீ நாக்குகள் 'சப்பு'க்கொட்ட ஆரம்பித்தன. "வயது முதிர்ந்த கிழவிகள், இளம் பெண்கள், பச்சிளங் குழந்தைகள், உன்னருகில் வந்து உன்னை அணைத்துக்கொள்ள ஒருக்கால் பயப்படலாம். ஆகையால் உன்னைச் சுற்றி நான் கவிந்து கொள்கிறேன். 'நெருப்பு இல்லை. புகை தானிருக்கிறது' என்று நினைத்து வேகமாக ஒருவர் பின் ஒருவராக உன்னிடம் வந்தடைவார்கள்" என்று சொல்வதுபோல் பெரிய புகைப்படலமொன்று தீயை மறைத்தது.

சிறிது தூரத்தில் ஒரு மைதானம். அதன் நடுவில் ஐந்தாறு பெரிய பாத்திரங்களில் மஞ்சள் நீர் நிரப்பி வைக்கப் பட்டிருந்தது. பாத்திரங்களைச் சுற்றி ஒரு சிறிய கூட்டம் யாருடைய வருகையையோ ஆவலோடு எதிர் நோக்கி நின்றது. அங்கிருந்த ஒவ்வொரு ஆண்மகன் முகமும் கவலையற்றுப் பிரகாசித்தது.

இரவு வெகு நேரமாயிற்று. ஒரு சிறிய பல்லக்கு மைதானத்தை யடைந்ததும் கீழே இறக்கப்பட்டது. பல்லக்கினுட்புற மிருந்து வெளியே குதித்தான் ஜயமல்லன். பெத்னூர் பிரதேசத்தில்,

இரு தொடைகளும் துப்பாக்கி குண்டுகளால் தொளேக்கப்பட்டு, ரத்தப் பெருக்கெடுத்து வெளியே போய்விட்டாலும், அவன் கவலேயே இல்லாமல் கம்பீரமாகக் காட்சியளித்தான்.

கூட்டமாக நின்ற ரஜபுத்ர வீரர்களே நோக்கிஞன். முதல் நாள் நடந்த யுத்தத்தில் அங்கஹீனர்களாகி மரணுவஸ்தையுடன் மைதானத்தின் பல பாகங்களிலும் தரையில் முனகிக்கொண்டிருந்த வீரர்கள், ஜயமல்லன் வாயிலிருந்து வரும் வார்த்தைகளேக் கேட்கும் வரையில் யாதொரு சப்தமும் செய்யக்கூடாது என்ற உறுதியுடன் தம் தொண்டைகளிலிருந்து வரும் சப்தங்களே அடக்கிக்கொண்டனர்.

ஜய மல்லன் பேசிஞன்; காரியத்தில் கண்ணுயிருந்த அவன், வார்த்தைகளே அதிகம் கொட்டவில்லே. "சகோதரர்களே! உரம் கொண்ட நெஞ்சுடைய சங்கன் என்ற சிங்கத்தின் வழிவந்த உலர்ந்த நெஞ்சுடைய உதய சிங், யுத்தத்திற்குப் பயந்து ஓடி விட்டான். நமது புண்ணிய பூமியாகிய சித்தூரைத் துறந்து சென்ற அவனே, என் ராஜு என்று நான் ஒப்புக்கொள்ள முடியாது. நேற்று நடந்த போரில் என் இரு கால்களேயும் தன் கரத்தாலேயே மறைந்திருந்து துப்பாக்கிக் குண்டுகளால் தொளேத்த அக்பரையும் அவன் சைனியத்தையும் சூரிய உதயத்தில் எதிர்ப்போம். நமக்கு வெற்றி கிடையாது என்பது உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும். அதனுல் என்ன? வெற்றி யில்லே யெனில் வீர சுவர்க்கம் புகுவோம். ஆனுல் ஒன்று நிச்சயம். நாளே யுத்தத்தில் அக்பரைப் பழிக்குப் பழி வாங்குகின்றேன்."

மஞ்சள் நீர் வைத்திருந்த பாத்திரங்களுக்கருகில் நகர்ந்தான். தன் ஆடைகளைக் கழற்றி, மஞ்சள் நீரில் நனைத்துப் பிழிந்து உடுத்தான்; அவ்வளவு தான்! அங்கிருந்த ரஜபுத்திர வீரர்கள் அனைவரும் அவனைப் பின்பற்றினர்.

சில நாழிகை கழிந்தது. ரஜபுத்ரப் பெண்கள் அக்கினிக் குண்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

பயமேயில்லாது, மலர்ந்த முகத்துடன், நிமிர்ந்த தலையுடன், ஆவலுடன் 'ஜய பவானி' என்ற கோஷத்துடன் ஒருவர்பின் ஒருவராகக் குண்டத்தில் விழுந்து கொண்டிருந்தனர், வனிதா மணிகள். ஜோதியில் கலந்து சதிகளானார்கள். இன்னும் வெகு சிலர் தான் பாக்கி.

* * *

காலைக் கதிரவனின் முதல் கிரணம் கிழக்கே தோன்றியது. 'ஜய பவானி' என்ற ரீங்காரத்துடன் எஞ்சியுள்ள பெண்கள் தீக் குழியில் விழுந்தனர். அதே விநாடி, கோட்டை வாசலின் வெளிப்புறம் 'ஜய் ஏகலிங்கா' என்ற சங்கநாதம் செய்துகொண்டு ஆண்மையுடைய ஆயிரம் ரஜபுத்ரர்கள் பிரகாசித்தனர். அவர்கள் தலைமையில் ரஜபுதனத்திலேயே இவனை விடப் பலசாலி யில்லை என்ற பெருமை வாய்ந்த கல்லன் என்னும் மகா வீரனும், மனவலிமை கொண்ட ஜயமல்லனும் ஒன்ருகக் காட்சியளித்தனர்.

கால்களோ சக்தியற்றவை; ஆகையால் கல்லனின் இடையைச் சக்தியற்ற இரு கால்களாலும் உடும்புப்பிடியாகச் சுற்றிக்கொண்டு, குதிரை மீதமர்ந்திருப்பது போல் தோன்றினன் ஜயமல்லன்

தன் முதுகிலிருப்பவனை ஒரு கொசுவாக மதித்தான் கல்லன். அவ்வளவு தேக பலம்!

யுத்தம் நடக்கும்போது இருவரது வலக் கரங்களிலும் வாட்களிருந்தால் அசௌகரியமாயிருக்கும் என நினைத்தனர் போலும்! ஜய மல்லன் வலக் கரத்தில் நீண்ட வாள்; கல்லனின் இடது கையில் பிரமாண்டமான வேல்.

சிறிது தொலைவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த உயர்ந்த கோபுரத்திலிருந்து, இரு தலைகளையும், இரு கால்களையும், நான்கு கரங்களையும் கொண்டு ஒன்ருகக் காட்சியளித்த மல்லனையும் கல்லனையும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார் அக்பர்.

யுத்தம் ஆரம்பமாயிற்று. அக்பரின் பெரிய சேனை மீது ரஜபுத்ரர்கள் சிறிப்பாய்ந்தனர். சூரிய கிரணம் ஓர் ஆயிரம் வாட்களில் பாய்ந்து சென்றது; மஞ்சள் நிற ஆடை தரித்த அம்மணிகள் எதிரிகளை வெட்டி வீழ்த்தினர்; கொன்று குவித்தனர்; பாய்ந்து பாய்ந்து தாக்கினர்; குதித்துக் கொக்கரித்துக் கொண்டே மீளாத் தூக்கத்திற்கு ஆளாஞர்கள். முழங்காலளவு மண்ணிருந்த யுத்த பூமியில் ரத்தநீர் கலந்து, சிகப்புச்சகதியாகக் காட்சி யளித்தது. ரஜபுத்ர வீரர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தது.

முன்னணியில் கல்லன் வேலால் குத்துவதும், ஜய மல்லன் வாளால் வெட்டுவதுமாக எதிரிகளை அருப்பறுத்துக் கொண்டே முன்னேக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

இடது சாரியில் குத்துண்ட உடல்கள் தரையில் சரிந்து கொண்டேயிருந்தன; வலப்பக்கத்தில் வெட்டுண்ட தலைகள் பூமியில் உருண்டோடின.

ஒரு நாழிகை ஓடிவிட்டது. 'படார் படார்' என்று இரு குண்டுகள் வெடி தீர்த்தன. யானை போன்ற கல்லனின் இருதயத்திலும், விலாவிலும் இரு குண்டுகள் பாய்ந்தன. அவன் உடனே கீழே சாயவில்லை. வலக்கரத்தால் தன் இடையைப் பற்றியிருந்த ஜயமல்லனின் கால்களைக் கழற்றி, ஜயமல்லனைத் தரையில் வைத்தான். பிறகு ஒரே பாய்ச்சல். தன் வலது முஷ்டியால் எதிரிகளில் ஒருவனை மண்டையில் அடித்துப் பிளந்து கொன்றான்; வேலால் மற்றிருவர்களைக் குத்தி வீழ்த்தினான். சாவதானமாகத்தான் இவைகளைச் செய்தான். அதற்கு மேல் அவனால் முடியவில்லை. மனோதிடத்தால் வெளிவிடாது இதுவரையில் பிடித்து இழுத்து வைத்திருந்த உயிர். கல்லனின் உடலிலிருந்து வெளியே போகத் துடித்தது. 'ஜயமல்லா! போகின்றேன். அங்கு சந்திக்கின்றேன்' என்றான். எதிரி ஒருவனின் நீண்ட வாள் ஆகாயத்தில் நிமிர்ந்து, தன் மண்டைக்கு நேரே வருவதைக் கண்டான். 'ஹா' என்று கர்ஜித்தான். வலது பாதத்தால் வாளைப் பற்றியிருந்தவனின் கரத்தில் ஓங்கி உதைத்தான். உடலிலிருந்து பிய்த்தெறியப்பட்ட எதிரியின் கரமும், கையிலிருந்து விடுதலை பெற்ற வாளும் பத்தடிக்கப்பால் தரையில் விழுந்தன; அதே சமயம் கல்லனின் உயிர் விர்ரென்று வெளியே ஓடிவிட்டது.

கல்லன் கல்லானான்......

வீர சுவர்க்கம் சென்ற கல்லன்பின் போக வெகு சீக்கிரம் ஜயமல்லன் ஆயத்தமானான். கால்கள் உதவி செய்யாவிட்டால் என்ன? மண்டியிட்டபடியே எதிரிகளைத் துவம்சம் செய்ய ஆரம்பித்தான்.

அவன் கரம் ஒரு தடவை வாளை வீசும்; ஒரு வீரன் உடல் இடுப்பு வரையில் ஒரு துண்டாகவும், இடுப்புக்குக் கீழ் பாகம் ஒரு குவியலாகவும் தரையில் "தொப் தொப்" என்று விழும். சதக், சதக் என்று வெட்டினான்; துண்டுகளாகத் தரையில் கொட்டினான்.

கொஞ்ச நேரமாயிற்று. ஜயமல்லன் அருகில் ஒரு பீரங்கிக் குண்டு தடாலென்று விழுந்தது.

தீர்ந்தான், பெத்னூர் வீரன் ஜயமல்லன்! சின்னா பின்னமாக்கப்பட்ட அவன் உடலின் பாகங்கள் நாற்றிசையிலும் சிதறுண்டன.

'அக்பரைப் பழிவாங்குவேன்' என ஜயமல்லன் செய்த சபதத்தை அவன் உயிர் மறந்து ஓடிவிட்டால்தான் என்ன? பாதகமில்லை......

அவன் உடலிலிருந்து பிய்த்தெறியப்பட்ட அவன் இருதயம், விர் என்று ஆகாய வீதியை நோக்கிக் கிளம்பி, வேகமாகச் சென்று, கோபுரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அக்பரின் அகன்ற மார்பில் பலத்துடன் மோதியது; தரையில் விழுந்தது; மறுபடியும் ஒரு குறை! உயிரிழந்த இருதயம், துள்ளி அக்பரின் இடுப்பில் தாக்கியது. 'பயலே! உயிர் இருக்குமாயின், என்னிடம் வாளும் இருந்தால், உன்னை மார்பில் குத்துவேன், இடுப்பில் வீசுவேன்' என்று சொல்வதுபோலிருந்தது அதன் செய்கை.

கீழே கிடந்த மாமிசத் துண்டை ஜாக்கிரதையாக எடுத்து, ஒரு பட்டுத் துணியில் சுற்றி, ஓர் இடத்தில் பத்திரப்படுத்தினான் பாதுஷா. வீரன் அறிவான் வீரனின் பெருமையை!

நடுப்பகலாயிற்று ; யுத்தம் முடிந்துவிட்டது. தன் குல மக்கள் அடைந்த கதியைக் காண முடியாத சூரியன் பெரிய மேகப் படலமொன்றின் பின்புறம் மறைந்தான்.

வெற்றி வீரனுகக் கோட்டையினுட்புறம் நுழைந்தான் அக்பர். அடடா! அக்பருக்கு எப்பேர்ப் பட்ட வெற்றி. சுற்றிலும் நோக்கினுன் மொகலாய மன்னன்.

குண்டுகளால் உடைந்த மதிற்சுவர்கள், பொல பொலவென உதிர்ந்துகொண்டிருந்த மண்டபங்கள், ரத்தம் கலந்த நீரையுடைய தடாகம். கண்ணுக் கெட்டிய வரையில் தலையற்ற முண்டங்களும், உட லிழந்த தலைகளும், துடிக்கும் அவயவங்களும், அங்கு கிடந்த ஒவ்வொரு வாளிலும் ரத்தம் தோய்ந்திருந் தது. குறைந்தது ஒரு எதிரியையாவது அந்த யம னுலகிற்கேற்றிவிட்ட பிறகுதான் ஒவ்வொரு ரஜ புத்ர வீரனும் உயிர்விட்டிருக்கின்றுன்.

தூள் தூளாக்கப்பட்ட சித்தூர்க் கோட்டையி னுட்புறத்தைத்தான் மன்னன் கண்டான். சோபை யுடைய சித்தூரைப் பார்க்க முடியாமல் போயிற்றே என வருந்தினுன். [ஐயோ பாவம்! அழகுள்ள சித்தூர் கோட்டையையா காண விரும்பினுய்? மஹா சக்ரவர்த்தியே! உயிரிழந்து கிடக்கும் ஒவ்வொரு ரஜபுத்ர வீரனின் மார்பையும் இருதயத்தையும் பிளந்துபார். பொலிவற்று விளங்கும் சித்தூர்க் கோட்டையில் பிரகாசிக்கும் பிரதிபிம்பத்தைக் காண லாம்.]

இக் கோரங்களைப் பார்க்க மன்னனுல் முடிய வில்லை. எல்லாம் போதாதென்று அக்கினிக் குழி

யில் உயிர்விட்ட பெண்களின் எலும்பு, தசைநார்களி லிருந்து வெளிவந்த துர்க்கந்தம், மன்னன் நாசித் துவாரங்களைத் தாக்கியது.

ஆண் மக்களால் கோட்டையைக் காக்க முடிய வில்லை. வாஸ்தவம்! ஆயினும் வனிதா ரத்தினங் களின் எரிந்த உடல்களிலிருந்து வெளிவந்த 'நறு மணம்' அக்பரை, கோட்டையிலிருந்து வெளியே வெருட்டியது. புறமுதுகிட்டு அக்பர் கோட்டைக்கு வெளியே ஓடினன்!

சித்தூர்க் கோட்டையினுட்புறமிருந்து அக்பரை வெளியே அனுப்பிய ரஜபுத்ர ஸ்திரீகளின் வீர சரிதையைத் தங்க ஏடுகளில் நவரத்ன எழுத்துக் களால்தானே பொறிக்கவேண்டும்!

கோட்டையின் வெளிப்புறம் வந்து கல்லன் சாய்ந்து கிடந்த இடத்தை யடைந்தார் அக்பர். எதிரி களில் ஒருவனைத் தலையணையாக வைத்துக்கொண்டு, புன்முறுவலுடன், ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே யோக நித்திரையிலிருந்தான் கல்லன்.

அக்பருக்கு ஒன்றும் புரியவில்லை. கோட்டையி னுட்புறம் கிடந்த ஒவ்வொரு வீரனும் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன்; வெளியேயும் இப் படித்தான்; கல்லன்கூட எதற்காக மேலே பார்க் கின்றன்? வான வீதியில் அப்படி என்ன விசேஷம்?

ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். அது வரையில் வருத்தத்துடன் மறைந்திருந்த சூரியன், தன் குலத்தினரை ஒழித்த அக்பர்மீது கோபம் கொண்டு, மேகத் திரையைக் கிழித்துக்கொண்டு வெளியே விரைந்தான்; தன் கொடூர கிரணங்களால் அக்பரைத் தாக்க ஆரம்பித்தான்.

'பயலே! என்ன காரியம் செய்துவிட்டாய்?' என்று கதறினன் ஆதவன்.

கல்லனையும் சுற்றிக்கிடந்த ரஜபுத்ரர்களையும் சிறப்பிழந்த (அகச்சிறப்பு அல்ல; வெளிச்சிறப்பு) சித்தூர்க் கோட்டையையும் நோக்கினர் அக்பர். மனச் சஞ்சலத்துடன் 'வேறு வழியில்லையே! என்ன செய்வேன்?' என்று அலறினர் பாதுஷா.

**அவன் கண்களிலிருந்து வெளிவந்த நீர், கல்லனருகில், யுத்த பூமியில், சூரியன் காண விழுந்தது**

அதுதான், மொகலாய மன்னர் அக்பர் பாதுஷா **சித்தூர் வீரர்களுக்கும் வீர வனிதைகளுக்கும் செய்த தர்ப்பணமாகும்.**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

வெள

**நாம ... ர்**

# கவி

# என் கதை

## நாமக்கல் கவிஞரின்

## சுயசரிதம்

★

**விரைவில் வெளிவரும்**

தமிழ்ப் பண்ணை

தியாகராயநகர் - சென்னை

Cover Printed at P... Box 349, Mount Road, Madras